*கர்த்தருக்கு ஸ்தோத்திரம்!*

# ஞானஸ்நானம்

**மலவிளை**
**ஆதி பெந்தெகொஸ்தே சத்திய சபை**
**வெளியீடு**

**ஞானஸ்நானம் குறித்ததான இவ் அரிய புத்தகம் உங்களுக்கு மிக ஆசீர்வாதமாக அமைந்து தேவனுடைய ராஜ்யமாகிய பரலோகராஜ்யம் செல்ல ஏற்றதாக அமைவதாக.**

Copyright © ஆதி பெந்தெகொஸ்தே சத்திய சபை
தலைமை இடம் : மலவிளை
ADHI PENTHEC0STHE SATHYA SABHAI
Headquarters : Malavilai
BEGINNING PENTECOSTAL TRUTH CHURCH
Headquarters : Malavilai

Address :

Malavilai Jeba Veedu
House of Prayer - Malavilai
Adhi Penthecosthe Sathya Sabhai
Beginning Pentecostal Truth Church
Adhi Penthecosthe Sathya Sabhai Malavilai Salai
Cheruppalur P.O., PIN - 629 161
Kanniyakumari District, Tamil Nadu, India.

Edition : 2024
BPTCBN 0-00- 01

**All Scripture quotations are from the Authorized King James Version 1611.**

Websites : www.bptchurch.org
E-mail : spiritual@bptchurch.org
Youtube : BPT Church, Malavilai OFFICIAL
Facebook : BPT CHURCH, MALAVILAI

## இப் புத்தகத்தைப் பற்றி . . .

ஞானஸ்நானம் என்ற இந்த அருமையான புஸ்தகமானது, ஞானஸ்நானம் என்றால் என்ன?என்பதையும், கர்த்தராகிய இயேசு கிறிஸ்து எப்பொழுது ஞானஸ்நானம் பெற்றார், அவர் தம்முடைய சீஷரிடம் யாருக்கு ஞானஸ்நானம் கொடுக்கக் கட்டளையிட்டார், ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ள என்னென்ன அநுபவங்கள் தேவை, ஞானஸ்நானம் கொடுக்கத் தகுதியான ஊழியக்காரன் யார் என்பதைக் குறித்தும் வேதவசன ஆதாரங்களுடன் இந்தப்புஸ்தகம் தெளிவாக விளக்கிக் காட்டுகிறது.

இவ்விதமான விளக்கங்கள் எங்கள் சுய அறிவினால் ஏற்பட்டவைகளல்ல; முதல் நூற்றாண்டு காலத்திலுள்ள பிரதானமான ஊழியக்காரராகிய பவுல் அப்போஸ்தலர் I கொரிந்தியர் 11:23-ல், நான் உங்களுக்கு ஒப்புவித்ததைக் கர்த்தரிடத்தில் பெற்றுக்கொண்டேன் என்று அறிவித்திருக்கிறபடியே, இந்தக் கடைசி காலத்திற்கென்று கர்த்தரால் எழுப்பப்பட்ட கர்த்தருடைய சபையாகிய ஆதி பெந்தெகொஸ்தே சத்திய சபையின் ஸ்தாபகரான கிறிஸ்துவின் ஸ்தானாபதியாகிய **சாது. G. தேவநேசன்** (ஐயா) அவர்களும் இவ்விதமான ஆவிக்குரிய காரியங்களை கர்த்தரிடத்திலிருந்து நேரடியாகக் கற்றுக்கொண்டார்கள்; அதையே நாங்களும் உங்களுக்கு அறிவிக்கிறோம்.

அநேகர் கர்த்தருடைய வேதசத்தியத்தைக் குறித்தோ, ஆவிக்குரிய அநுபவங்களைக் குறித்தோ, அவைகளைப் பெற்றுக்கொள்ளும் வழிமுறைகளைக் குறித்தோ அறியும் அறிவற்று, கர்த்தருடைய வேத சத்தியத்தைத் தங்களுக்குச் சாதகமாகப் புரட்டி, தங்கள் சுய விருப்பப்படி செய்கிறதான காரியங்களுக்கு நீங்கலாகி, சத்தியத்தை அறிந்து கொள்ளும் நோக்கத்துடன் இந்தப் புஸ்தகம் எழுதப்பட்டுள்ளது.

ஞானஸ்நானம் குறித்து எழுதப்பட்டுள்ள கர்த்தருடைய வேத சத்தியங்கள் நிறைந்த இந்தப் புஸ்தகம், இதை வாசிக்கிற, கேட்கிற யாவருக்கும் மிக ஆசீர்வாதமாக அமைவதாக. யாவரும் படித்துப் பயனடைவீர்! கர்த்தர் காண்பித்த மாதிரியின்படியே ஞானஸ்நானம் பெற்று, பரலோக பாக்கியம் பெறுவீர்!!

*கர்த்தருக்கு ஸ்தோத்திரம்!*

## பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| | முகவுரை | III |
| 1. | ஞானஸ்நானம். | 1 |
| 2. | ஞானஸ்நானம் என்றால் என்ன? | 3 |
| 3. | ஞானஸ்நானம் எங்கே பெற்றுக்கொள்ள வேண்டும்? | 43 |
| 4. | ஞானஸ்நானம் எப்படி பெற்றுக்கொள்ள வேண்டும்? | 45 |
| 5. | ஞானஸ்நானம் எந்த நாமத்தினாலே பெற்றுக்கொள்ள வேண்டும்? | 47 |
| 6. | எந்த ஊழிய வகுப்பினரிடமிருந்து ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ள வேண்டும்? | 49 |
| 7. | ஞானஸ்நானம் எத்தனை உண்டு? | 57 |
| 8. | ஞானஸ்நானம் எந்த அநுபவத்தை உடையவர்கள் பெற்றுக்கொள்ள வேண்டும்? | 59 |
| 9. | குழந்தைகளுக்கு ஞானஸ்நானம் கொடுக்கலாமா? | 83 |
| 10. | ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ள வேண்டியதின் அவசியம் என்ன? | 87 |
| 11. | ஞானஸ்நானம் பெற்றுக்கொண்டவர்கள் எப்படி காணப்பட வேண்டும்? | 93 |

**முகவுரை:**

கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே, உலகத்தில் வாழும் சகல மனுமக்களுடைய இகபர நன்மைகளுக்காகவும் ஆசீர்வாதங்களுக் காகவும் "ஞானஸ்நானம்" என்ற இந்த அரிய புத்தகம் கர்த்தருடைய பெரிதான கிருபையினால் எழுதப்பட்டிருக்கிறது. ஒன்றான மெய்த் தேவனாகிய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து இரட்சகராக வந்து, இந்த உலகத்திலிருந்தபோது, ஏறக்குறைய 30 ஆம் வயதில் ஞானஸ்நானம் பெற்றார். அவர், யோவான்ஸ்நானன் என்னும் விவாகம் ஆகாத துறவியான ஓர் ஊழியக்காரனிடமிருந்து, யோர்தான் என்னும் நதியில், மூழ்கி ஞானஸ்நானம் பெற்றார். அவர் ஞானஸ்நானம் பெற்றபின், தண்ணீரிலிருந்து கரையேறினபொழுது பரிசுத்தஆவியானவர் புறாவைப்போல் ரூபங்கொண்டு, அவர்மேல் இறங்கினார். நமக்காக இந்த உலகத்தில் வந்து, ஒரு ஆவிக்குரிய மனுஷன் எப்படி காணப்பட வேண்டும் என்பதற்கு மாதிரியாக தாமே வாழ்ந்து காண்பித்த, கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் மாதிரியின்படியே நாமும் வாழ்வது அளவில்லாத ஆசீர்வாதத்திற்கேற்றதாகும்.

மனந்திரும்பி, பாவமன்னிப்பையும், இரட்சிப்பையும் பெற்றுக் கொண்டவர்களே ஞானஸ்நானம் பெறத் தகுதியானவர்கள். முதல் நூற்றாண்டு காலத்தில் காணப்பட்ட கர்த்தருடைய சபையிலும் இரட்சிக்கப்படுகிறவர்களைக் கர்த்தர் ஞானஸ்நானத்தின் மூலமாகக் கர்த்தருடைய சபையோடு சேர்த்துக்கொண்டு வந்தார். ஆனால் தற்காலத்தில் மனந்திரும்புதலோ, பாவமன்னிப்போ, பாவத்திலிருந்து விடுதலையாகிய இரட்சிப்போ எதுவுமே பெற்றுக்கொள்ளாதவர் களையும் ஞானஸ்நானம் என்ற ஒன்றை ஏற்றுக்கொள்ள வைத்து, அவர்கள்மேல் பயங்கரமான ஆக்கினைத்தீர்ப்பை வருவிக்கிறவர்களா யிருக்கிறார்கள்.

ஆகவே, ஞானஸ்நானத்தைக் குறித்து யாவரும் சரியானபடி அறிந்துகொண்டு, கர்த்தருடைய வேதசத்தியத்திற்கு மாறாக ஞானஸ்நானம் என்று சொல்லிக்கொள்ளும் சடங்கு முறைகளுக்கு

நீங்கலாகி, தகுதியின் அநுபவத்தோடு ஞானஸ்நானம் பெற்று அளவில்லாத ஆசீர்வாதங்களை அடைந்துகொள்ளும்படியான நோக்கத்தோடு இந்தப் புஸ்தகம், கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தினால், அவருடைய தீர்மானத்தின்படியே எழுதப்பட்டிருக்கிறது.

கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் கிருபையானது இந்தப் புஸ்தகத்தை வாசிப்போர், கேட்போர், மற்றும் இதன்படி நடப்போர் யாவரோடும்கூட சதாகாலமும் இருப்பதாக. ஆமென்!

இவண்,

உலகின்கண் வாழும் சகல மனுமக்களின் சரீர ஆத்மீக
சுகநலன்களையும் விரும்பும்,
ஆதி பெந்தெகொஸ்தே சத்திய சபை, மலவிளை.

# 1

## ஞானஸ்நானம்

ஞானஸ்நானத்திற்கு ஒப்பிட்டுச் சொல்ல உலகத்தில் ஒன்றுமே இல்லை. மனந்திரும்பி, பாவமன்னிப்பையும் இரட்சிப்பையும் பெற்றுக் கொண்டதான ஜனங்கள், ஞானஸ்நானத்தின் மூலம் கர்த்தருடைய திருசரீரமாகிய சபையின் அங்கங்களாக(உறுப்புகளாக) மாறுகிறார்கள். ஒரு மனுஷன் மனந்திரும்பி, பாவமன்னிப்பையும் இரட்சிப்பையும் பெற்றுக்கொள்ளுமுன் அவனிடத்தில் பாவங்கள், அக்கிரமங்கள், மீறுதல்கள், கீழ்ப்படியாமைகள் ஆகியவை காணப்படுவதினால், அந்த மனுஷனுடைய ஆத்மீகத்திலே பாவக்கறைகள் காணப்படுகிறது. அப்படிப்பட்டவர்கள் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை நோக்கி, பாவ அறிக்கையோடு கண்ணீரோடு ஜெபம்பண்ணி, பாவத்திலிருந்து விடுதலையாகிய பாவமன்னிப்பையும் இரட்சிப்பையும் பெற்றுக்கொண்ட பின்பு, பாவக்கறைகள் மாற ஒரு கழுவுதல் (சுத்திகரிப்பு) அவர்களுக்குத் தேவையாகக் காணப்படுகிறது. அதற்காக தேவன் தமது அனந்த ஞானத்தினாலே மனுஷர்களுக்கு ஏற்படுத்தி வைத்திருக்கிறதான ஒரு சுத்திகரிப்பு தான் ஞானஸ்நானம் ஆகும். இந்த ஞானஸ்நானத் தினால் மட்டுமே ஜனங்கள் தேவனுடைய சபையின் அங்கத்தினர் ஆகிறார்கள். கர்த்தராகிய இயேசுகிறிஸ்து அவருடைய பரிசுத்த வான்களைச் சேர்த்துக்கொள்ள வரும்போது, இரட்சிக்கப்பட்டு ஞானஸ்நானம் பெற்ற அவருடைய சபையார் மட்டுமே அவரோடுகூட சேர்த்துக்கொள்ளப்படுவார்கள். உலகத்தோற்றத்திற்கு முன்பே ஞானஸ்நானத்தின் முக்கியத்துவத்தை அறிந்த தேவன், அவர் இந்த உலகத்தில் இரட்சகராக வந்தபோது, யோவான்ஸ்நானனின் மூலம் முதலாவதாக ஞானஸ்நானத்தை ஏற்படுத்தினார்.

ஆண்டவராகிய இயேசு தம்முடைய சீஷருக்குக் கொடுத்த கடைசி கற்பனை என்னவென்றால்: நீங்கள் உலகமெங்கும் போய் எல்லா ஜாதியாரையும் சீஷராக்க வேண்டும்; அதாவது குருவாகிய

இயேசுகிறிஸ்துவின் உபதேசத்திற்கு கீழ்ப்படியக்கூடிய ஜனங்களாக மாற்றவேண்டும்; அப்படி சீஷராக்கி அவர்களுக்கு பிதா, குமாரன், பரிசுத்தஆவியின் நாமத்தில் ஞானஸ்நானம் கொடுக்கவேண்டும் என்றதான ஒரு கட்டளையைக் கொடுத்தார். ஞானஸ்நானம் என்பது ஸ்நானம் அல்ல; ஸ்நானம் என்றால் குளித்தல். சாதாரணமாக நாம் தண்ணீரில் மூழ்கி எழும்பும்போது மாம்சத்தின் அழுக்குகள் மாறும். ஞானஸ்நானம் என்றால் ஆவிக்குரிய அழுக்கு நீங்கி சுத்தமாகும் அநுபவமாகும்; இது இரட்சிக்கப்பட்ட ஜனங்களுக்கு மிகவும் முக்கியமான ஒன்று. அதை நிறைவேற்றாத மனுஷன், தேவனுடைய ஆலோசனையை அல்லத்தட்டுகிறவனாக இருக்கிறான்.

சாதாரண ஒரு மனுஷன், புருஷன் என்ற நிலைமைக்கு வரும்போது அவன்மீது ஒரு கடமை இருக்கிறது. அது என்னவென்றால், அவன் தன் மனைவிக்கும் பிள்ளைகளுக்கும் உத்திரவாதியாக இருக்கிறான்; ஆகவே, அவன் உழைத்துச் சம்பாதித்து அந்தக் குடும்பத்தைக் காப்பாற்ற வேண்டும். அப்படியானால் உழைப்பு என்பது, அவனுக்குக் கொடுக்கப்பட்ட ஒரு கடமையாக இருக்கிறது. அதுபோல ஒவ்வொருவரும் வளர்ந்து குறிப்பிட்ட ஒரு பக்குவம் வரும்போது அவர்கள் மனந்திரும்பி, பாவமன்னிப்பைப் பெற்று ஞானஸ்நானத்தையும் பெற்றுக்கொள்ளவேண்டும். அப்படி ஞானஸ்நானம் எடுக்காமல் இருக்கிறவர்கள் தேவ ஆலோசனையையும், தேவ நீதியையும் அல்லத் தட்டுகிறவர்களாக, புறக்கணிக்கிறவர்களாகக் காணப்படுகிறார்கள். இரட்சிக்கப்படாமலும், இரட்சிக்கப்பட்டும் ஞானஸ்நானம் எடுக்காமலும் இருக்கிறவர்கள் தங்களுக்கு தேவகோபத்தை வருவிக்கிறவர்களாகவும், தேவ பாதுகாவலற்றும் காணப்படுகிறார்கள்.

## 2

# ஞானஸ்நானம் என்றால் என்ன?

## 1. ஞானஸ்நானம் என்றால் தேவன் தமது ஞானத்தினாலே மனுக்குலத்திற்கு ஏற்படுத்தியிருக்கிறதான மகிமையான கழுவுதல் அல்லது சுத்திகரிப்பு என்பதாகும்

*ஆகையால், நீங்கள் புறப்பட்டுப் போய், சகல ஜாதிகளையும் சீஷராக்கி, பிதா குமாரன் பரிசுத்தஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானங் கொடுத்து,*

*மத்தேயு 28 : 19*

ஸ்நானம் என்றால் முழுகுதல் அல்லது கழுவப்படுதல்; மாம்ச அழுக்கை அல்லது மாம்சத்தில் இருக்கிறதான துர்நாற்றத்தை நீக்கும்படியாக தண்ணீரில் இறங்கி அல்லது தண்ணீரைக் கொண்டு கழுவுகிறார்கள் அல்லது குளிக்கிறார்கள். ஞானஸ்நானம் என்றால் ஆவிக்குரிய ஒரு சுத்திகரிப்பை அடைந்துகொள்வதே ஆகும். ஆவிக்குரிய பிரகாரமாக ஒரு கழுவப்படுதல் அல்லது சுத்திகரிப்பை அடைந்துகொள்வதே ஆகும். தேவன் இவ்விதமாக ஏற்படுத்தக் காரணம் என்னவென்றால், ஜனங்கள் ஒரு காலத்திலே பாவங்களினாலும் அக்கிரமங்களினாலும் நிறைந்து அசுத்தர்களாக மாறி, துர்நாற்றம் உடையவர்களாக, பயங்கரமான அழிவுக்குரியவர்களாக நிர்ப்பந்தமானவர்களாகக் காணப்பட்டுக் கொண்டிருந்தார்கள். அவ்விதமான நிலைமையிலிருந்து தேவன் இவர்களை இரட்சித்து சொந்தமாக்கும்போது இவர்கள் தேவனுடைய சொந்த பிள்ளைகள் என்றதான வரிசையில் வருகிறார்கள்; என்றாலும் இவர்கள் தேவனுடைய பார்வையில் பூரணமான சுத்திகரிப்பை அடைய இன்னும் ஒரு கழுவப்படுதல் அல்லது சுத்திகரிப்பை அடைந்து கொள்ளவேண்டும் என்று தேவன் சித்தம் கொண்டதினால் அவர் தமது ஞானத்தினாலே ஞானஸ்நானம் என்கிறதான ஒரு சுத்திகரிப்பை ஏற்படுத்தி இருக்கிறார்.

இவர்கள் இந்த சுத்திகரிப்பை அடைந்துகொள்ளும்போது தேவனுடைய சபையோடு ஏக ஐக்கியம் உடையவர்களாகவும், கர்த்தருடைய சபையாராகவும், காணப்பட ஏதுவாக இந்த ஞானஸ்நானம் காணப்படுகிறது. தேவன் தம்முடைய ஞானத்தினாலே மனுக்குலத்திற்கு ஏற்படுத்தியிருக்கிறதான கழுவப்படுதல் அல்லது சுத்திகரிப்பு என்பதே ஞானஸ்நானம் ஆகும்.

## 2. தேவனுடைய நீதியை நிறைவேற்றுவதே ஞானஸ்நானம் ஆகும்

> *அப்பொழுது யோவானால் ஞானஸ்நானம் பெறுவதற்கு இயேசு கலிலேயாவைவிட்டு யோர்தானுக்கு அருகே அவனிடத்தில் வந்தார். யோவான் அவருக்குத் தடை செய்து: நான் உம்மாலே ஞானஸ்நானம் பெறவேண்டியதாயிருக்க, நீர் என்னிடத்தில் வரலாமா என்றான். இயேசு அவனுக்குப் பிரதியுத்தரமாக: இப்பொழுது இடங்கொடு; இப்படி எல்லா நீதியையும் நிறைவேற்றுவது நமக்கு ஏற்றதாயிருக்கிறது என்றார். அப்பொழுது அவருக்கு இடங்கொடுத்தான்.*
>
> *மத்தேயு 3 : 13 -15*

ஒருகாலத்திலே ஜனங்கள் தேவ நீதியைக் குறித்து அறிவற்ற வர்களாக, தேவனுடைய நீதிக்கு அந்நியர்களாகக் காணப்பட்டது மாத்திரம் அல்ல, பிசாசினுடைய அநீதியாகிய பாவங்கள் அக்கிரமங்களை நடப்பித்து, அநீதி உடையவர்களாக அநீதியின் வழியிலே சென்று, மகா பயங்கரமான அழிவையும் நாசத்தையும் வருவிக்கும் தன்மையோடு காணப்பட்டதான இவர்களை, தேவன் சந்தித்து இரட்சித்து சொந்தமாக்குகிறார். இப்போது இவர்கள் தேவ நீதிக்கு நேராக, தேவ நீதியைக் குறித்த விசுவாசத்தோடு தேவ சந்நிதானத்திலே தேவனுக்குச் சமீபமாய் வந்திருக்கிறார்கள். ஆனாலும் இவர்கள் தேவநீதியை நிறைவேற்றவேண்டும். இது ஞானஸ்நானத்தினால் தான் முடியும். ஞானஸ்நானத்தைப் பெற்றுக்கொள்ளும்போது தேவநீதியை நிறைவேற்றும் அனுபவம் உடையவர்களாக மாறிவிடுகிறார்கள்.

### *3. விசுவாசத்திற்கு அடையாளமாகப் பெற்றுக்கொள்வதே ஞானஸ்நானம் ஆகும்*

> *விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான்; விசுவாசியாதவனோ ஆக்கினைக் குள்ளாகத் தீர்க்கப்படுவான்.*
>
> *மாற்கு 16 : 16*

ஒரு காலத்திலே இவர்கள் அவிசுவாசத்தினால் நிறைக்கப்பட்டு, அவிசுவாசக் கிரியைகளாகிய பாவக்கிரியைகளால் தேவனை விட்டு அகன்றுபோய், தேவனுக்குத் தூரமான அநுபவத்தோடு காணப்பட்டு, மகா கொடிய நியாயத்தீர்ப்புக்கு ஏதுவாகவும், நரகாக்கினைக்கு நேராகவும் சென்று கொண்டிருந்தார்கள். அக்காலத்தில் இவர்களுக்குள் இருந்தது அவிசுவாசமே. அவிசுவாசத்தினால் நிறைக்கப்பட்ட இவர்களைக் கர்த்தர் சந்தித்து இரட்சித்து சொந்தமாக்குகிறார்; இவர்கள் பாவத்திலிருந்தும், அக்கிரமத்திலிருந்தும், சகல கேட்டிலிருந்தும் விலகி இரட்சிக்கப்பட்டார்கள். இப்போது இவர்கள் அவிசுவாசம் எல்லாம் மாறி, விசுவாசமுடையவர்களாகக் காணப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஆனாலும், தாங்கள் பெற்றிருக்கிறதான விசுவாசத்திற்கேற்ற ஒரு அடையாளமாகிய உறுதிப்படுத்தலை இவர்கள் சொந்தமாக்கவேண்டும் என்று தேவன் சித்தங்கொண்டிருக்கிறார். இவர்கள் ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளும்போது தாங்கள் பெற்றிருக்கிறதான விசுவாசத்திற்கு ஒரு உறுதிப்படுத்தலாகிய அந்த அடையாளத்தைப் பெற்றுக்கொள்ளுகிறார்கள். இந்த அடையாளம் மிகவும் தேவையானதாகக் காணப்படுகிறது. விசுவாசியாதவனோ ஆக்கினைத்தீர்ப்புக்கு ஏற்றவனாக மாறிவிடுகிறான்.

### *4. தாங்கள் பெற்றிருக்கிற இரட்சிப்புக்கு அடையாளமாகப் பெற்றுக்கொள்வது ஞானஸ்நானமாகும்*

அவிசுவாசத்திலிருந்து இரட்சிக்கப்பட்டு விசுவாசத்தை அடைந்தவர்கள், விசுவாசத்தின் அடையாளமாக ஞானஸ்நானத்தை பெற்றுக்கொள்ளும்போது தாங்கள் தேவனிடத்திலிருந்து பெற்றுக் கொண்டதான விசுவாசத்தை உறுதிப்படுத்தலாகிய அடையாளத்தைப்

பெற்றுக்கொள்கிறார்கள். அதே பிரகாரமாக தாங்கள் தேவனால் பெற்றுக்கொண்ட இரட்சிப்புக்கும் அடையாளமான ஒரு அநுபவத்தைக் கூட பெற்றுக்கொள்ளவேண்டும். அது ஞானஸ்நானத்தினால் தான் முடியும். இவர்கள் ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளும்போது தாங்கள் தேவனிடத்திலிருந்து பெற்றுக்கொண்டதான இரட்சிப்புக்கேற்ற ஒரு உறுதிப்படுத்தலாகிய அடையாளத்தைக் கூட சொந்தமாக்கிக் கொள்ளுகிறார்கள்; பெற்றுக்கொள்ளுகிறார்கள் என்பதாகும்.

### *5. தேவன் நீதிபரர் என்று அறிக்கையிட்டு உலகத்திலே வாழும் அநுபவத்தை அடைந்து கொள்வதே ஞானஸ்நானம் ஆகும்*

*யோவானுடைய உபதேசத்தைக் கேட்ட ஆயக்காரர் முதலான சகல ஜனங்களும் அவனாலே ஞானஸ்நானம் பெற்று, தேவன் நீதிபரர் என்று அறிக்கையிட்டார்கள்.*

*லூக்கா 7 : 29*

தேவன் நீதிபரர் என்று அறிக்கையிடும் அவகாசத்தையும், உரிமையையும் உடையவர்களாகக் காணப்பட்டு, தேவனைக் குறித்து அறிக்கையிட்டு ஜீவிக்கும் அநுபவமே ஞானஸ்நானம் ஆகும். இவர்கள் ஒருகாலத்தில் பாவிகளாக சாத்தானின் அடிமைத்தனத்திற்குள்ளாகி, நீதியாய் சாத்தானால் சிறைபிடிக்கப்பட்டவர்களாக, தேவனுக்குச் சத்துருக்களாக, தேவனை விட்டுத் தூரம்போனவர்களாக, தேவனுக்குக் கோபத்தையும், எரிச்சலையும் உண்டாக்கும் கிரியைக்காரர்களாகக் காணப்பட்டு, பிசாசையே சாட்சி கூறும் அனுபவத்தோடு பிசாசிற்கேற்ற வர்களாக காணப்பட்டுக் கொண்டிருந்த இவர்களை நீதிபரராகிய தேவன் நீதியாய் வெளிப்பட்டு, நீதியாய் தம்முடைய இரத்தத்தைக் கிரயமாகக் கொடுத்ததினால், அவருடைய இரத்தக் கிரயத்தினால் இவர்களைச் சந்தித்து, அவ்விதமான சகல கேட்டிலிருந்தும் சகல நிலையிலிருந்தும் விடுவித்துச் சொந்தமாக்கினபோது, இவர்கள் தேவனுக்குச் சொந்தமானவர்கள் என்ற நிலையில் வந்திருந்தாலும், இவர்கள் தேவனைக் குறித்து சாட்சிகூறி உலகத்தில் ஜீவிக்கும் அவகாசம் அற்றவர்களாகவும், தகுதி அற்றவர்களாகவும் காணப்பட்டுக்கொண்டு இருக்கிறார்கள். ஞானஸ்நானம் பெற்றுக்கொள்வதினால் தான் தேவனைக் குறித்துச் சாட்சியிட(அறிக்கையிட) முடியும். இவர்கள்

ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளும்போது தேவனைக் குறித்தும், தேவன் மகா நீதிபரராய் இருக்கிறார் என்பதைக் குறித்தும் சாட்சியிட்டு தேவனுக்கு மகிமையான சாட்சிகளாக உலகத்திலே ஜீவிக்கும் அனுபவத்தையும், அவகாசத்தையும், உரிமையையும், தகுதியையும், ஆயத்தத்தையும் அடைந்துகொள்ளுகிறார்கள்.

### *6. தேவனுடைய ஆலோசனையை ஏற்றுக்கொள்வதே ஞானஸ்நானம் ஆகும்*

> *பரிசேயரும் நியாயசாஸ்திரிகளுமோ அவனாலே ஞானஸ்நானம் பெறாமல் தங்களுக்குக் கேடுண்டாகத் தேவனுடைய ஆலோசனையைத் தள்ளிவிட்டார்கள்.*
>
> *லூக்கா 7 : 30*

பாவத்திலே ஜீவித்த ஜனங்கள் ஒருகாலத்தில் தேவ ஆலோசனைக்கு மாறாக நடந்து, தேவ ஆலோசனையை விட்டு அகன்றுபோய், பிசாசின் ஆலோசனையை ஏற்றுக்கொண்டு, பிசாசின் ஆலோசனையின்படி தங்களுக்கு மகா பயங்கரமான அழிவை வருவிக்கக்கூடிய தீய நிலைமைக்கு நேராகக் கடந்துசென்று, பிசாசு அடையக்கூடியதான நரக ஆக்கினையையும் அழிவையும் சொந்தமாக்கக்கூடியதான அநுபவத்தோடு காணப்பட்டார்கள். இரட்சிக்கப்படுமுன் இவர்களால் தேவ ஆலோசனையை ஏற்றுக்கொள்ள முடிகிறதில்லை. அப்படிப்பட்டதான நிலைமையோடு காணப்பட்ட இவர்களை தேவன் இரங்கி சந்தித்து, அவ்விதமான நிலைமையிலிருந்து இரட்சித்துச் சொந்தமாக்கினார். இப்பொழுது தேவனுடைய பிள்ளை என்றதான வரிசையிலே வந்திருக்கிறார்கள். தேவ ஆலோசனையை ஏற்றுக்கொள்ளக்கூடிய நிலைமையிலே, தேவ ஆலோசனைக்கு நேராகச் சமீபித்து வந்திருக்கிறார்கள். ஆனால் தேவ ஆலோசனையை ஏற்றுக்கொள்வதற்கு இன்னுமொரு அனுபவத்தைப் பெற்றுக்கொள்ள வேண்டியதிருக்கிறது; அது தான் ஞானஸ்நானம். ஞானஸ்நானத்தினால் தான் தேவ ஆலோசனையை ஏற்றுக்கொள்ளும் அனுபவத்தை உடையவர்களாக மாறுவார்கள். தேவனுடைய ஆலோசனையை ஏற்றுக்கொள்வதே ஞானஸ்நானம் ஆகும்.

### *7. மனந்திரும்பி, தாங்கள் அடைந்து கொண்டதான பாவமன்னிப்பிற்கு அடையாளமாகப் பெற்றுக்கொள்வதே ஞானஸ்நானம் ஆகும்*

*பேதுரு அவர்களை நோக்கி: நீங்கள் மனந்திரும்பி, ஒவ்வொருவரும் பாவமன்னிப்புக்கென்று இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுங்கள், அப்பொழுது பரிசுத்தஆவியின் வரத்தைப் பெறுவீர்கள்.*

*அப்போஸ்தலர் 2 : 38*

ஒரு காலத்திலே பாவிகளாக, அக்கிரமக்காரர்களாக, பாவ வழியிலே சென்றுகொண்டிருந்ததான இவர்களைக் கர்த்தர் பாவத்திலிருந்து விடுவித்தார், இரட்சித்தார், பாவமன்னிப்பை அளித்தார்; இவர்கள் பாவமன்னிப்பை அடைந்துகொண்டார்கள் என்பதற்கு அடையாளமாக, அதை உறுதிப்படுத்தலான ஒரு அநுபவம் தான் ஞானஸ்நானம் என்பது. இவர்கள் ஞானஸ்நானத்தைப் பெற்றுக்கொள்ளும்போது தாங்கள் தேவனால் பெற்றிருக்கிறதான பாவமன்னிப்புக்கு ஆதாரமாக ஒரு அடையாளத்தைப் பெற்றுக்கொள்ளுகிறார்கள். இதுவே ஞானஸ்நானம் ஆகும். அடுத்ததாக, அப்பொழுது பரிசுத்தஆவியின் வரத்தைப் பெறுவீர்கள் என்று சொல்லப்பட்டு இருக்கிறது.

### *8. பரிசுத்தஆவியின் வரத்தைப் பெற்றுக்கொள்ளுவதற்கேற்ற தகுதியையும் ஆயத்தத்தையும் அடைந்துகொள்ளுவதே ஞானஸ்நானமாகும்*

இவர்கள் இரட்சிக்கப்பட்டும், தேவனுடைய பிள்ளைகள் என்றதான வரிசையில் வந்தும், பரிசுத்தஆவியின் வரத்தைப் பெற்றுக்கொள்வதற் கேற்ற தகுதியும் அவகாசமும் அற்றவர்களாகக் காணப்பட்டுக் கொண்டு இருக்கிறார்கள். பரிசுத்தஆவியின் அபிஷேகம் வேறே, பரிசுத்த ஆவியின் வரம் வேறே. இரட்சிக்கப்பட்ட உடனே அபிஷேகம் பெற்றுக்கொள்ளலாம். ஆனால் பரிசுத்தஆவியின் வரத்தைப் பெற வேண்டுமானால் அதற்கேற்ற தகுதியையும் அவகாசத்தையும் பெறவேண்டும். அநேக வரங்களைக் குறித்து நாம் வேதபுஸ்தகத்திலே வாசிக்கிறோம். ஆவிக்குரியவர்களாக ஜீவிக்கவேண்டுமானால் தேவன் அதற்கேற்ற வரங்களைக் கொடுக்கிறவராக இருக்கிறார். அந்த

வரங்களைப் பெற்றுக்கொண்டவர்கள் தான் ஆவிக்குரியவர்களாக ஜீவிக்கமுடியும். தேவன் வரங்களைக் குறித்து வாக்குப்பண்ணியிருப்ப தோடு, அவைகளைக் கொடுக்கவும் சித்தம் உள்ளவராக இருக்கிறார். ஞானஸ்நானத்தைப் பெற்றுக்கொள்ளும்போது இவர்கள் பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெற்றுக்கொள்வதற்கேற்ற தகுதியையும் ஆயத்தத்தையும் உடையவர்களாக மாறுகிறார்கள்.

### 9. பாவங்கள் போகக் கழுவப்படுவதே ஞானஸ்நானம் ஆகும்

*இப்பொழுது நீ தாமதிக்கிறதென்ன? நீ எழுந்து கர்த்தருடைய நாமத்தைத் தொழுதுகொண்டு, ஞானஸ்நானம் பெற்று, உன் பாவங்கள் போகக் கழுவப்படு என்றான்.*

*அப்போஸ்தலர் 22 : 16*

இவர்கள் இதுவரை பாவிகளாகக் காணப்பட்டார்கள்; பாவ வழியிலே சென்றுகொண்டிருந்தார்கள். பிசாசின் கிரியையாகிய பாவத்தை நடப்பித்து மகா நிர்ப்பந்தமான நியாயத்தீர்ப்புக்கு நேராகக் கடந்து போய்க்கொண்டு இருந்தார்கள். இப்பொழுது இவர்கள் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினால் பாவத்திலிருந்து விடுதலையாகிய இரட்சிப்பின் அனுபவத்தைச் சொந்தமாக்கியிருக்கிறார்கள். கர்த்தர் இவர்களை இரட்சித்திருக்கிறார், சொந்தமாக்கியிருக்கிறார். இப்போது இவர்கள் இரட்சிக்கப்பட்டவர்களாக தேவனுடைய சொந்த பிள்ளைகளாகக் காணப்படுகிறார்கள். ஆனாலும், இவர்கள் இனி ஒரு சுத்திகரிப்பைக் கூட அடைந்துகொள்ளவேண்டும் என்று தேவன் சித்தங் கொண்டிருக்கிறார்.

அதற்குக் காரணம், ஒரு பாத்திரத்திலே ஒரு பொருளை வைத்துக்கொண்டு, அந்தப் பொருளை சரியாக எடுத்து மாற்றிவிட்டு, அந்த பாத்திரத்தை முகர்ந்து பார்த்தால் எந்தப் பொருள் அந்தப் பாத்திரத்தில் இருந்ததோ அந்தப் பொருளின் வாசனை அதில் இருந்துகொண்டே இருக்கும். அந்தப் பாத்திரத்தைச் சரியானபடி சுத்தம்பண்ணக்கூடிய ஏதாவது பொருள் வைத்துச் சுத்தம்பண்ணினால் தான் அந்த வாசனை சரியாக மாறி, அந்தப் பாத்திரம் சுத்தமான பாத்திரம் ஆகும். அதுபோல, அழுக்கும் கறையும் இருக்கிறதான ஒரு வஸ்திரத்தை சோப்பு போட்டு நன்றாகத் துவைத்த பிறகு

அதனுடைய அழுக்கு போகும். ஆனால் அந்தக் கறையின் நிறமும், அழுக்கின் நிறமும் அந்த வஸ்திரத்தில் இருந்துகொண்டே இருக்கும். அது அழுக்கு போன வஸ்திரம் என்று நாம் கண்டாலும், அழுக்கில்லாத வஸ்திரம் என்று நாம் எண்ணத்தக்கதாக சுத்தமாக்கி விட்டாலும், அந்த வஸ்திரத்தில் அழுக்கினுடைய நிறமும் கறையின் நிறமும் காணப்பட்டுக் கொண்டே இருக்கும். அதைப் போக்கும்படியாக இனி ஒரு பரிகாரம் கூட அதற்குச் செய்யும்போது அந்தக் கறையின் நிறமும் அழுக்கின் நிறமும் மாறி நல்ல தூய வெள்ளையாக மாறி விடுகிறது.

இதே பிரகாரமாக இவர்கள் பாவ பாத்திரமாக, பாவத்தினால் நிறைந்த பாத்திரமாக ஒரு காலத்திலே காணப்பட்டார்கள். கர்த்தர் ஒரு பாவம் செய்தவனையும் பாவி என்றுதான் சொல்லுவார்; கோடிக் கணக்கான பாவம் செய்தவனையும் பாவி என்றுதான் சொல்லுவார். பாவத்தோடும், அக்கிரமத்தோடும், அசுத்தராகக் காணப்பட்டதான நிலைமையிலிருந்து கர்த்தரால் இரட்சிக்கப்பட்டிருக்கிறார்கள், விடுவிக்கப்பட்டிருக்கிறார்கள். பாவ பாத்திரமாக, கோபாக்கினையின் பாத்திரமாக காணப்பட்ட இவர்கள், இப்பொழுது கிருபா பாத்திரமாக மாறி இருக்கிறார்கள். அந்தப் பாவம் போனது; இப்பொழுது பாவம் அற்ற பாத்திரமாய் காணப்பட்டாலும் அந்தப் பாத்திரத்திலே பாவத்தினுடைய ஒரு நிறமும், ஒரு சிறு துர்நாற்றமும் இருந்து கொண்டே இருக்கிறது. அது போக வேண்டுமானால் ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ள வேண்டும். இவர்கள் ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளும்போது அவ்விதமான துர்நாற்றம் மாறி, நல்ல தூய்மையான அனுபவத்திற்கு நேராகக் கடந்து வருகிறார்கள்.

### *10. கிறிஸ்துவுக்குள்ளாகும் அனுபவத்தை அடைந்து கொள்வதே ஞானஸ்நானம் ஆகும்*

> *கிறிஸ்து இயேசுவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்ற நாமனைவரும் அவருடைய மரணத்துக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றதை அறியாமலிருக்கிறீர்களா?*
>
> *ரோமர் 6 : 3*

இவர்கள் இரட்சிக்கப்படுகிறது வரைக்கும் பாவத்தினாலும், அக்கிரமத்தினாலும், தேவ கோபாக்கினையின் வழியிலே பிசாசோடு ஐக்கியமாக இருந்துகொண்டு, பிசாசு அடையப்போகிறதான ஆக்கினைக்கேற்ற நிலைமையோடு காணப்பட்டார்கள். இவர்கள் அவ்விதமான நிலைமையிலிருந்து கர்த்தரால் இரட்சிக்கப்பட்டார்கள். இரட்சிக்கப்பட்டபோது கர்த்தருடைய சொந்த பிள்ளைகள் என்றதான வரிசையிலே வந்திருக்கிறார்கள். இவர்கள் இரட்சிக்கப்பட்டிருந்தாலும், பரிசுத்தஆவியினால் அபிஷேகம்பண்ணப்பட்டிருந்தாலும், தான் ஆவிக்குரியவன் நல்ல அநுபவத்தில் இருக்கிறேன் என்று தன் மனதில் அவர்கள் எண்ணிக்கொண்டாலும், அவர்கள் ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளாமல் இருக்கிற காலம் வரையிலும் கிறிஸ்துவுக்கு வெளியே இருந்துகொண்டிருக்கிறார்கள்; கிறிஸ்துவுக்கு வெளியே மனுஷ கொலைபாதகனாகிய பிசாசானவன் இருக்கிறான்; பிசாசின் கிரியையாகிய பாவமும் இருக்கிறது. இவர்கள் இப்படியே இன்னும் நீடித்துக் காணப்படுவார்களானால் பிசாசுக்கும், அவர்களுக்கும் சம்பந்தம் ஏற்பட, பிசாசோடு ஐக்கியப்பட, இன்னும் பிசாசின் வழியிலே சென்று விட இடம் உண்டாகும். இரட்சிக்கப்பட்டும் ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளாமல் காணப்படுகிறவர்கள் கிறிஸ்துவுக்குள்ளான அனுபவத்தை அடைந்துகொள்ள மாட்டாதவர்களாக, தான் கிறிஸ்தவன் என்று சொல்ல யோக்கியதையும் தகுதியும் இல்லாத வர்களாகக் காணப்படுகிறார்கள். கிறிஸ்தவர்கள் என்று சொல்ல வேண்டுமானால் கிறிஸ்துவுக்குள்ளான அனுபவத்தைச் சொந்தமாக்க வேண்டும். அது ஞானஸ்நானத்தினால் தான் முடியும்.

### *11. கிறிஸ்துவின் மரணத்திற்குள்ளாகும் அனுபவத்தை அடைந்து கொள்ளும் அனுபவமே ஞானஸ்நானம் ஆகும்*

கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் மரணத்திற்குள் ஜீவனும், அழியாமையும் இருக்கிறது. கிறிஸ்து இயேசுவின் மரணத்திற்கு வெளியே அழிவும் நாசமும் இருக்கிறது. இவர்கள் கிறிஸ்துவின் மரணத்திற்கு வெளியே இருந்துகொண்டே இருப்பார்களானால் அழிவுக்கும், நாசத்திற்கும் ஏதுவானவர்களாக மாறிவிடுகிறார்கள். ஒரு காலத்திலே அழிவுக்கு நேராக, நாசத்திற்கு நேராகக் கடந்து சென்றார்கள். அழிவையும் நாசத்தையும் வருவித்துக்கொண்டு காணப்பட்ட அந்த

நிலைமையிலிருந்து கர்த்தர் அவர்களை இரட்சித்தார். அழிவிலிருந்தும், நாசத்திலிருந்தும் கர்த்தரால் இரட்சிக்கப்பட்டார்கள், மீட்கப்பட்டார்கள்; இப்போது இவர்கள் அவைகளிலிருந்து எல்லாம் கர்த்தரால் விடுவிக்கப்பட்டு, தேவனுடைய பிள்ளைகள் என்றதான அனுபவத்தை உடையவர்களாகக் காணப்பட்டுக் கொண்டு இருக்கிறார்கள். ஆனாலும் இவர்கள் ஜீவனையும், அழியாமையையும் சொந்தமாக்கும் அனுபவம் அற்றவர்களாக இருக்கிறார்கள். இவர்கள் இரட்சிக்கப்பட்ட உடனே ஒரு அளவு தெய்வீக ஜீவன் இவர்களுக்குக் கிடைக்கிறது; ஆனால் கிறிஸ்து இயேசு என்ன சொல்லியிருக்கிறார் என்றால், நான் அவைகளுக்கு ஜீவன் உண்டாயிருக்கவும், அது பரிபூரணப்படவும் வந்தேன் என்று சொன்னார். பரிபூரணமான ஜீவன் இந்த ஞானஸ் நானத்தினாலேதான் கிடைக்கிறது.

ஞானஸ்நானமாகிய இந்த அனுபவத்தினால் இவர்கள் கிறிஸ்துவின் மரணத்திற்குள்ளாகிறார்கள். அப்பொழுது பரிபூரணமான ஜீவன் உண்டாகிறது மாத்திரமல்ல; அழியாமையைப் பெற்றுக்கொள்ளுகிறார் கள். அழியாமை உடையவர்களாக உலகத்திலே வாழும் பாக்கியத்தை யும் பெற்றுக்கொள்ளுகிறார்கள். கிறிஸ்துவின் மரணத்திற்கு வெளியே இருக்கிற காலம் வரையிலும் இவர்கள் இவ்விதமான அனுபவத்தை அடைந்துகொள்வதற்கு வழியில்லை. ஞானஸ்நானத்தைப் பெற்றுக் கொள்ளும்போது கிறிஸ்துவின் மரணத்திற்குள்ளாகும் அனுபவத்தைப் பெற்றுக்கொள்ளுகிறார்கள். அப்பொழுது பரிபூரணமான கிறிஸ்துவின் ஜீவனையும் அழியாமையையும் அடைந்துகொள்ளுகிறார்கள்.

### *12. பிதாவின் மகிமையினாலே மரித்தோரிலிருந்து எழுந்திருக்கும் அனுபவத்தை அடைந்து கொள்வதே ஞானஸ்நானம் ஆகும்*

> *மேலும் பிதாவின் மகிமையினாலே கிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்டதுபோல, நாமும் புதிதான ஜீவனுள்ளவர்களாய் நடந்துகொள்ளும்படிக்கு, அவருடைய மரணத்திற்குள்ளாக்கும் ஞானஸ்நானத்தினாலே கிறிஸ்துவுடனே கூட அடக்கம் பண்ணப்பட்டோம்.*
>
> *ரோமர் 6 : 4*

இவர்கள் பாவத்தினாலும், அக்கிரமத்தினாலும் மரித்தவர்களாகக் காணப்பட்டார்கள். பாவத்தினாலும், அக்கிரமத்தினாலும் ஆத்மீக மரணத்தோடு காணப்பட்டதான இவர்களைக் கர்த்தர் பாவத்தினாலும் அக்கிரமத்தினாலும் ஏற்பட்ட மரணத்திலிருந்து இரட்சித்தார், சொந்தமாக்கினார். ஆனால், அந்த மரித்தோரின் ஸ்தானத்திலே இவர்கள் இன்னும் இருந்துகொண்டு இருக்கிறார்கள். அந்த இடத்தை விட்டு இவர்கள் இன்னும் எழும்பவில்லை; எழும்ப வேண்டுமானால் ஞானஸ்நானத்தைப் பெற்றுக்கொள்ள வேண்டும். ஞானஸ்நானத்தினால் தான் மரித்த ஸ்தானத்தை விட்டு எழும்ப முடியும். மரித்த ஸ்தானத்தை விட்டு எழும்பாவிட்டால் உன்னதமான நிலையிலே கிறிஸ்துவோடு உட்காரும் அனுபவத்தை பெற்றுக்கொள்ள மாட்டாமல் காணப்படுவது மாத்திரமல்ல, கிறிஸ்துவைப் பின்பற்ற முடியாதவர்களாகவும் காணப்படுவார்கள்.

*கிறிஸ்து இயேசுவுக்குள் நம்மை அவரோடேகூட எழுப்பி, உன்னதங்களிலே அவரோடேகூட உட்காரவும் செய்தார்.*

*எபேசியர் 2 : 7*

கிறிஸ்து இயேசுவோடு கூட பூரணமான ஐக்கியமான அனுபவத்தையும், அவரோடு உன்னதமான அனுபவத்திலே உட்காரும் அனுபவத்தையும் அடைந்து உலகத்திலே வாழ்ந்து, கிறிஸ்துவைப் பின்பற்ற வேண்டுமானால் மரித்தோராகிய ஸ்தானத்திலிருந்து எழும்பவேண்டும். இவர்கள் இரட்சிக்கப்பட்டும், ஒரு அளவான ஆவிக்குரிய அனுபவங்களை அடைந்தும், பரிசுத்தஆவியினால் அபிஷேகம் பண்ணப்பட்டும், தேவனுடைய பிள்ளைகள் என்றதான வரிசையில் வந்து சேர்ந்தும், இவர்கள் மரித்தோரின் ஸ்தானத்திலே இருந்துகொண்டிருக்கிறார்கள். அதனால் கிறிஸ்து இயேசுவோடு உன்னதமான அனுபவத்திலே உட்கார தடையாய் இருக்கிறார்கள்; திராணியற்றவர்களாய் இருக்கிறார்கள். அதுமாத்திரமல்ல, கிறிஸ்துவைப் பின்பற்றி வாழ இவர்களால் முடிகிறதில்லை. மரித்தோரின் ஸ்தானத்திலிருந்து எழும்பினால் தான் இவர்களுக்குக் கிறிஸ்துவைப் பின்பற்றவும், உன்னதத்திலே கிறிஸ்துவோடு உட்காரும் அனுபவத்தைச் சொந்தமாக்கவும் முடியும். ஞானஸ்நானத்தினால் தான் இவ்விதமான அநுபவங்களைப் பெற்றுக்கொள்ள முடியும்.

### 13. புதிதான ஜீவனுள்ளவர்களாய் நடந்து கொள்ளும் அனுபவத்தை அடைந்து கொள்வதே ஞானஸ்நானம் ஆகும்

புதிதான ஜீவனுள்ளவர்களாய் நடக்க வேண்டுமானால் தேவனுடைய மரணத்திற்குள்ளாகும் அனுபவமாகிய ஞானஸ்நானத்தை அடைந்து கொள்ள வேண்டும். ஞானஸ்நானத்தை பெற்றுக்கொள்ளாமல் இருக்கிற காலம் வரையிலும் இவர்கள் புதிய ஜீவனைப் பெற்றிருந்தும், புதிதான ஜீவனுள்ளவர்களாய் நடந்துகொண்டும், பெலனற்றவர்களாய் இருக்கிறார்கள். தாங்கள் அடைந்திருக்கிறதான ஜீவனை மற்றவர்கள் கண்டு, இவர்கள் புதிதான ஜீவன் உள்ளவர்களாய் இருக்கிறார்கள்; புதிய அனுபவத்தோடு நடக்கிறார்கள்; புதுசிருஷ்டியின் அனுபவத் தோடு காணப்படுகிறார்கள் என்று மற்றவர்கள் காணத்தக்கதாக இவர்கள் நடந்துகாட்ட முடியாது. நடந்துகாட்ட வேண்டுமானால் ஞானஸ்நானத்தைப் பெற்றுக்கொள்ள வேண்டும். ஞானஸ்நானத்தை பெற்றுக்கொள்ளும்போது, இவர்கள் பெற்றிருக்கிற ஜீவனை விட இன்னும் ஒரு அளவு புதிய ஜீவனையும்கூட பெற்று, அந்த ஜீவனுக்கேற்றபடி புதிய ஜீவனுள்ளவர்களாய் நடந்து கொள்வதற்கேற்ற நல்ல பெலத்தை அடைந்துகொள்ளுகிறார்கள். மற்றவர்கள் பார்க்கும் போது இவர்கள் புதிதானவர்கள், புதிய ஜீவனைப் பெற்றவர்கள் என்று காணத்தக்கதாக, அறியத்தக்கதாக அவ்வாறு அறிவும் விசுவாசமும் ஜனங்களுக்கு ஏற்படத்தக்க அளவில் புதிதான ஜீவனுள்ளவர்களாய் நடந்துகொள்ளுகிறார்கள்.

### 14. கிறிஸ்துவின் மரணத்தின் சாயலிலே இணைக்கப்படும் அனுபவத்தை அடைந்து கொள்வதே ஞானஸ்நானமாகும்

கர்த்தராகிய இயேசுகிறிஸ்து பாடுபட்டார், மரித்தார், மூன்றாம் நாள் உயிர்த்தெழுந்தார். உயிர்த்தெழுந்து சர்வ வல்லமையும் சர்வ அதிகாரமுமுடைய தேவனாக இருந்து கொண்டிருக்கிறார். இவர்கள் ஒரு காலத்திலே கிறிஸ்துவை விட்டு, கிறிஸ்துவின் ஐக்கியத்திற்கு மாறானவர்களாகக் காணப்பட்டு கிறிஸ்துவின் மரணத்தைக் குறித்தோ, கிறிஸ்து தங்களுக்காகப் பாடுபட்டு ஜீவனைக் கொடுத்து ஆயத்தப் படுத்தியிருக்கிற இரட்சிப்பு, மீட்பு, மகிமையான பாக்கியங்கள், பரலோகராஜ்யத்தின் பதவிகள் இவைகளைக் குறித்தோ அறிவற்ற

வர்களாக, விசுவாசமற்றவர்களாக மகா கொடிய பாவ வழியிலே சென்று, கிறிஸ்துவை விட்டுப் பிரிந்துபோகும் அனுபவத்தோடு காணப்பட்டுக் கொண்டிருந்ததான இவர்களை அவ்விதமான நிலைமையிலிருந்து கர்த்தர் இரட்சித்தார், சொந்தமாக்கினார்.

இவர்கள் இப்போது கிறிஸ்துவின் மரணத்தைக் குறித்து விசுவாசித்திருக்கிறார்கள்; கிறிஸ்துவின் மரணத்தோடு ஐக்கியப்பட வேண்டும், மரணத்தின் சாயலிலே ஐக்கியப்பட வேண்டும் என்கிறதான விருப்பத்தோடு காணப்படுகிறார்கள். ஆனால், இவர்கள் ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளாமல் இருக்கிற காலம் வரையிலும் கிறிஸ்துவின் மரணத்தின் சாயலோடு ஐக்கியப்படும் அனுபவத்தைச் சொந்தமாக்கிக் கொள்ள முடியாது. அவருடைய மரணத்தின் சாயலோடுகூட இணைக்கப்பட்டால் அல்லது ஐக்கியப்பட்ட அனுபவத்தை அடைந்து கொண்டாலொழிய இவர்கள் கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவின் மரணத்தினாலே ஆயத்தமாக்கப்பட்டிருக்கிறதான அளவில்லாத ஆசீர்வாதங்களை சொந்தமாக்கிக்கொள்ள முடியாது. கிறிஸ்து இயேசுவின் மரணத்தினாலே ஏராளமான ஆசீர்வாதங்கள் மனுஷர்களுக்காக ஆயத்தமாக்கி வைக்கப்பட்டிருக்கிறது. இவர்கள் இரட்சிக்கப்படும்போது ஒரு அளவு ஆசீர்வாதங்களை அடைந்து கொள்ளுகிறார்கள். இனி இவர்கள் ஏராளமான ஆசீர்வாதங்களை அடைந்துகொள்வதற்கேற்ற தகுதியையும் ஆயத்தத்தையும் அடைந்துகொள்ளவேண்டுமானால் இயேசுகிறிஸ்துவின் மரணத்தின் சாயலில் இணைக்கப்பட்டு, மரணத்தோடு ஐக்கியப்பட்டு உலகத்தில் வாழும் அனுபவத்தைச் சொந்தமாக்கவேண்டும். அந்த அனுபவத்தை அடைந்துகொள்ளும்போது இயேசுகிறிஸ்து பாடுபட்டு ஆயத்தப்படுத்தி யிருக்கிறதான சகல ஆசீர்வாதங்களையும் சொந்தமாக்கிக் கொள்வதற்கேற்ற தகுதியையும் அவகாசத்தையும் அடைந்து கொள்ளுகிறார்கள். மற்றப்படி இவர்கள் தாங்கள் அடைந்திருக்கிற ஆசீர்வாதங்களை மட்டும் அப்படியே வைத்துக்கொண்டு இருந்தால், அதில் குறைவுபட ஆரம்பிப்பார்கள்; இயேசுகிறிஸ்துவின் மரணத்துக்கும் இவர்களுக்கும் வெகுதூரமான அநுபவம் உண்டாகும்; ஆகவே, இவர்கள் அதற்கப்புறம் உள்ளதான பரிபூரணமான ஆசீர்வாதங்களை அடைந்துகொள்ள முடிவதில்லை. இயேசுகிறிஸ்துவின் மரணத்தின்

சாயல் அதாவது இயேசுகிறிஸ்துவின் மரணத்தோடுகூட ஏக ஐக்கியம் உடையவர்களாக எப்பொழுது காணப்படுகிறார்களோ அப்பொழுது இயேசுகிறிஸ்துவின் பாடுமரணத்தின் மூலமாக தங்களுக்கு வந்திருக்கிறதான சகல ஆசீர்வாதத்திற்கும் உரிமையான சுதந்தர வாளிகளாக மாறிவிடுகிறார்கள். ஞானஸ்நானத்தைப் பெற்றுக் கொள்ளும்போது அவ்விதமான சகல ஆசீர்வாதத்திற்கும் ஏற்ற தகுதியையும் அடைந்துகொள்ளுகிறார்கள்.

கர்த்தராகிய இயேசுகிறிஸ்து பாடுபட்டு மரித்து ஏறக்குறைய இரண்டாயிரம் வருஷம் ஆகிறது. இயேசுகிறிஸ்துவின் மரணத்தை இன்று நாம் பார்க்கமுடியாது; அந்த சாயலை தான் நாம் இன்று பார்க்கமுடியும். சாயல் என்று சொல்லும்போது நிழல் என்பது அதனுடைய கருத்து. இயேசுகிறிஸ்துவின் மரணத்தைக் காண்பிக்கிற தான நிழல். இந்த நிழலோடு ஐக்கியப்படும்போது கிறிஸ்து இயேசுவின் மரணத்தோடு ஐக்கியப்பட்டு விடுகிறார்கள். இன்னும் சாயல் என்று சொல்லும்போது அதற்கு விசேஷமான அர்த்தங்கள் இருக்கிறது. சாயல் என்றால் அழகு, மேன்மை என்ற அர்த்தங்களும் இருக்கிறது. அவருடைய சாயல் இன்று சுவிசேஷத்தின்மூலம் வெளிப்பட்டுக் கொண்டிருக்கிறது. அந்த சாயலோடு நாம் ஐக்கியப்படும்போது தான் அவருடைய மரணத்தோடு ஐக்கியப்பட முடியும். அதற்கேற்ற ஒரு அவகாசமும், உரிமையும், ஆயத்தமும் ஞானஸ்நானத்தினாலே கிடைக்கிறது.

அப்பொழுது கிறிஸ்து இயேசுவின் மரணத்தோடுகூட ஏக ஐக்கியமான ஒரு அனுபவத்தை அடைந்துகொள்ளுகிறார்கள்; கிறிஸ்து இயேசுவின் மரணத்தினாலே இவர்களுக்கு ஆயத்தப்படுத்தி யிருக்கிறதான சகல ஆசீர்வாதங்களுக்கும் ஏற்ற உரிமைக்காரராக, அவகாசிகளாக, சுதந்தரவாளிகளாகக் காணப்படுகிறார்கள்; சகல ஆசீர்வாதங்களையும் பெற்றுக்கொள்ளுகிறார்கள். கிறிஸ்து இயேசுவின் சாயலையும் அடைந்துகொள்ளுகிறார்கள்; அதுமாத்திரமல்ல, அவராலே ஏற்படுத்தியிருக்கிறதான ஆசீர்வாதங்களை அடைந்து மேன்மையான அனுபவத்தோடு காணப்படுகிறார்கள்.

ஞானஸ்நானத்தைப் பெற்றுக்கொள்ளும்போது இவர்கள் கிறிஸ்துவின் மரணத்தின் சாயலிலே இணைக்கப்படும் அல்லது ஐக்கியப்படும் அனுபவத்தை அடைந்து, கிறிஸ்துவின் மரணத்தோடு ஏக ஐக்கியமுடையவர்களாக மாறிவிடுகிறார்கள்; அப்பொழுது இவர்கள் கிறிஸ்து இயேசுவின் உயிர்த்தெழுதலின் சாயலிலும் இணைக்கப் படுகிறார்கள்.

### *15. இயேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலின் சாயலில் இணைக்கப் படுவதே ஞானஸ்நானம் ஆகும்*

**கிறிஸ்து இயேசுவைக் குறித்து வேதம் என்ன சொல்லுகிறது?**

*அவர் நம்முடைய பாவங்களுக்காக ஒப்புக்கொடுக்கப்பட்டும், நாம் நீதிமான்களாக்கப்படுவதற்காக எழுப்பப்பட்டும் இருக்கிறார்.*

*ரோமர் 4 : 25*

கர்த்தராகிய இயேசுகிறிஸ்து உயிர்த்தெழுந்ததினால் எந்த மனுஷனும் நீதிமானாக உலகத்திலே வாழமுடியும். அவர் உயிர்த்தெழுந்ததினால் ஏராளமான ஆசீர்வாதங்கள் மனுஷர்களுக்கு ஆயத்தமாக்கப் பட்டிருக்கிறது. ஞானஸ்நானத்தைப் பெற்றுக்கொள்ளும்போது, இயேசுகிறிஸ்துவின் உயிர்த்தெழுதலின் சாயலிலும் இவர்கள் ஐக்கியப்பட்டு விடுகிறார்கள். ஞானஸ்நானத்தைப் பெற்றுக்கொள்ளாமல் இருக்கிற நாள் வரையிலும் உயிர்த்தெழுதலுக்கும் இவர்களுக்கும் வெகுதூரம். ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளாத எந்த மனுஷர்களும் அவர் உயிர்த்தெழுந்ததினால் வருகிற சகல ஆசீர்வாதங்களிலும் ஒரு அளவுதான் பெற்றுக்கொள்கிறார்களே தவிர அத்தனையும் பெற்றுக்கொள்ள முடியாது. அந்த அளவில்லா ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்ள இயேசுகிறிஸ்துவின் உயிர்த்தெழுதலின் சாயலில் இணைக்கப்பட வேண்டும். கிறிஸ்து இயேசுவின் உயிர்த்தெழுதலின் சாயலிலே யார் இணைக்கப்படுகிறார்களோ அவர்கள்தான்அவர் உயிர்த்தெழுந்ததினால் ஆயத்தமாக்கப்பட்டிருக்கிறதான ஆசீர்வாதங் களை சொந்தமாக்கிக்கொள்வார்கள், மற்றவர்களால் முடியாது.

## கிறிஸ்து இயேசு எதற்காக உயிர்த்தெழுந்தார்?

தேவனுடைய ஜனங்கள் இரட்சிக்கப்பட்டு, நீதிமான்களாக வாழும் அனுபவத்தை அடைந்துகொள்வதற்காக அவர் பாடுபட்டார். மனுமக்களுடைய பாவ சாபத்தை ஏற்றுக்கொண்டு, பாடுபட்டு மரித்து அவைகளிலிருந்து ஒரு நிவாரணத்தை உண்டாக்கினார். அவர் மறுபடியும் சர்வத்தையும் ஆளும் தேவனாக, சர்வ வல்லமையும் சர்வ அதிகாரமும் உடைய தேவனாக இருந்துகொண்டு இருக்கிறார். இயேசுகிறிஸ்துவின் உயிர்த்தெழுதலினாலே மனுமக்களுக்கு ஏராளமான ஆசீர்வாதங்கள் கிடைக்கிறது. நீதிமான்களாக உலகத்திலே வாழும் வரம், வல்லமை, சக்தி, பராக்கிரமம் ஆகியவை கிறிஸ்து உயிர்த்தெழுந்ததினால் கிடைக்கிறது. அவ்விதமான ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்ள வேண்டுமானால் இவர்கள் இயேசுகிறிஸ்துவின் உயிர்த்தெழுதலின் சாயலிலே இணைக்கப்பட வேண்டும். ஞானஸ்நானத்தினால்தான் இயேசுகிறிஸ்துவின் உயிர்த்தெழுதலின் சாயலிலே இணைக்கப்படும் அனுபவத்தை அடைந்துகொள்ளமுடியும். கிறிஸ்து இயேசுவின் உயிர்த்தெழுதலைக் குறித்து, அவர் எழுந்திருக்காவிட்டால் உங்கள் விசுவாசம் வீணாயிருக்கும். நீங்கள் இன்னும் உங்கள் பாவங்களிலே இருப்பீர்கள் என்று வேதம் சொல்லுகிறது. கிறிஸ்து இயேசு மூன்றாம் நாளில் உயிர்த்தெழுந்ததினாலே விசுவாசத்திற்கு ஜீவனும், வல்லமையும், பராக்கிரமமும் வந்திருக்கிறது என்பதாகும். அவர் உயிர்த்தெழாவிட்டால் நாம் அடைந்திருக்கிறதான விசுவாசம் வீணாயிருக்கும்; அதனால் பயன் ஒன்றும் இல்லை. இயேசுகிறிஸ்து உயிர்த்தெழுந்ததினால் விசுவாசத்திற்கு ஜீவன் உண்டானது; விசுவாசத்திற்கு ஆரோக்கியமும், பராக்கிரமமும், நீதிமானாய் மாறும் அனுபவமும் உண்டானது.

> *கிறிஸ்து எழுந்திராவிட்டால், உங்கள் விசுவாசம் வீணாயிருக்கும்; நீங்கள் இன்னும் உங்கள் பாவங்களில் இருப்பீர்கள்.*
>
> *I கொரிந்தியர் 15 : 17*

கிறிஸ்து இயேசு மூன்றாம் நாளில் உயிர்த்தெழுந்ததினால் நாம் அடைந்திருக்கிற விசுவாசத்திற்கு ஜீவனும் நல்ல ஆரோக்கியமும்

பராக்கிரமமும் ஏற்பட்டு இருக்கிறது மாத்திரமல்ல, கிறிஸ்து இயேசு மூன்றாம் நாளில் உயிர்த்தெழுந்ததினாலே நீதிமானாக வாழும் அனுபவமும், ஆவிக்குரிய பராக்கிரமத்திலே நல்ல சக்தி அடையவும் அது காரணமாய் இருக்கிறது; பாவமற்ற அனுபவம், முற்றிலும் நீதிமானாக்கப்படும் அனுபவம் உண்டாகிறது. இனிமேல் பாவத்திற்கும் இவர்களுக்கும் ஒரு காலமும் தொடர்பே கிடையாது; எந்தவிதமான சம்பந்தமும் கிடையாது; பாவத்திலிருந்து இவர்கள் வேறுபட்டவர்கள் மாத்திரம் அல்ல, மேற்குக்கும் கிழக்குக்கும் எவ்வளவு தூரமோ அவ்வளவு தூரம் நம்முடைய பாவங்களை நம்மை விட்டு அகற்றினார் என்று வேதம் சொல்லுகிறது. இவ்விதமான தொடர்பு அற்ற அனுபவத்தை இவர்கள் கிறிஸ்து இயேசு உயிர்த்தெழுந்ததினால் பெற்றுக்கொள்ள முடியும். அவர் உயிர்த்தெழுந்ததினாலே ஆயத்தப்படுத்தப்பட்டிருக்கிற தான ஆசீர்வாதங்கள், இயேசுகிறிஸ்துவின் உயிர்த்தெழுதலின் சாயலில் இணைக்கப்படும்போது கிடைக்கிறது.

ஒருவன் ஞானஸ்நானத்தை பெற்றுக்கொள்ளும்போது இயேசுகிறிஸ்துவின் உயிர்த்தெழுதலின் சாயலிலும் இணைக்கப்படும் அனுபவத்தை அடைந்துகொள்ளுகிறான்; அதனாலே வந்திருக்கிறதான ஆசீர்வாதங்கள் அத்தனையும் சொந்தமாக்கிக் கொள்ளுகிறான்.

### 16. கிறிஸ்து இயேசுவின் மகா பரிசுத்தமுள்ள நாமத்தினால் கழுவப்படும் அநுபவமே ஞானஸ்நானமாகும்

> *உங்களில் சிலர் இப்படிப்பட்டவர்களாயிருந்தீர்கள்; ஆயினும் கர்த்தராகிய இயேசுவின் நாமத்தினாலும், நமது தேவனுடைய ஆவியினாலும் கழுவப்பட்டீர்கள், பரிசுத்தமாக்கப்பட்டீர்கள், நீதிமான்களாக்கப்பட்டீர்கள்.*
>
> *I கொரிந்தியர் 6 : 11*

இங்கே இயேசுகிறிஸ்துவின் மகா பரிசுத்தமுள்ள நாமத்தினாலே கழுவப்படும் அனுபவத்தைக் குறித்துச் சொல்லப்பட்டிருக்கிறது. இவர்கள் ஒரு காலத்திலே அசுத்த நாமமாகிய பிசாசின் நாமத்திற் குட்பட்டவர்களாக, பிசாசின் நாமத்தைத் தரித்துக்கொண்டவர்களாக பிசாசின் நாமத்தைப் பிடித்துக்கொண்டவர்களாக, வெறும் அசுத்தர் களாக, பாவ அசுத்தத்தினால் நிறைக்கப்பட்டு அசுத்தமான

நிலைமையோடு காணப்பட்டுக் கொண்டிருந்தார்கள். அசுத்தமான வழியிலே பிசாசின் வழியிலே சென்றுகொண்டிருந்தார்கள். பிசாசுக்காக வும் அவன் தூதர்களுக்காகவும் ஆயத்தம்பண்ணப்பட்டதான நரகாக்கினையை சொந்தமாக்கி, நரகத்துக்கு ஏற்ற யோக்கியதை உடையவர்களாகக் காணப்பட்டார்கள். அவ்விதமான நிலைமை யிலிருந்து கர்த்தர் இவர்களை இரட்சித்தார், சொந்தமாக்கினார். இப்போது இவர்கள் கர்த்தருடைய பிள்ளைகள் என்ற அனுபவத்தில் வந்திருக்கிறார்கள். ஆனால் இவர்கள் இனி மகா பரிசுத்த நாமத்தினால் கழுவப்படும் ஒரு அனுபவத்தைச் சொந்தமாக்கிக் கொள்ளவேண்டும். கிறிஸ்து இயேசுவின் நாமம் மகா பரிசுத்த நாமம். இவர்கள் அவ்விதமான பிசாசின் நாமத்தினாலே அழுக்கான நிலைமையிலிருந்து, மாசற்ற ஒரு அநுபவத்தைச் சொந்தமாக்க வேண்டுமானால் மகா பரிசுத்த நாமத்தினாலே கழுவப்பட வேண்டும். மகா பரிசுத்தமுள்ள இயேசுவின் நாமத்தினால் கழுவப்படும்போது அந்த பிசாசின் நாமத்தினால் கறைப்படுத்தப்பட்ட அந்த மாசு, களிம்பு அத்தனையும் அற்றுப்போய், கழுவப்பட்டு, சுத்திகரிக்கப்பட்டு தேவனுக்கேற்ற மகிமையான அநுபவத்தில் வந்துவிடுகிறார்கள். ஞானஸ்நானத்தைப் பெற்றுக் கொள்ளும்போது இயேசுகிறிஸ்துவின் மகா பரிசுத்தமான நாமத்தினாலே கழுவப்படும் அனுபவத்தைச் சொந்தமாக்கிக் கொள்ளுகிறார்கள்.

### *17. ஞானஸ்நானம் என்றால் கிறிஸ்துவைத் தரித்துக் கொள்வதே ஆகும்*

> *ஏனெனில், உங்களில் கிறிஸ்துவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றவர்கள் எத்தனைபேரோ, அத்தனைபேரும் கிறிஸ்துவைத் தரித்துக்கொண்டீர்களே.*
>
> *கலாத்தியர் 3 : 27*

தேவனுடைய சாயலிலே சிருஷ்டிக்கப்பட்ட மனுக்குலங்கள், தேவனுடைய சாயலையும் மகிமையையும் இழந்தது மாத்திரமல்ல, பிசாசின் குணத்தை உடையவர்களாகக் காணப்பட்டு, பிசாசையே தரித்துக்கொண்டு பிசாசின் வழியிலே சென்றுகொண்டிருந்தார்கள். அவ்விதமான நிலைமையிலிருந்து கர்த்தராகிய இயேசுகிறிஸ்து இவர்களை இரட்சித்து சொந்தமாக்கினார். இப்போது பிசாசைத்

தரித்துக்கொண்டிருந்ததான நிலைமையிலிருந்து விடுவிக்கப்பட்டிருக்கிறார்கள். ஆனாலும், இப்போது ஒன்றும் இல்லாதவர்களாக அல்லது நிர்வாணிகளாக இருக்கிறார்கள். இவர்களுக்கு இன்னுமொரு தரித்துக்கொள்ளுதல் அல்லது அணிந்துகொள்ளுதல் மிகவும் அவசியமாகக் காணப்பட்டுக் கொண்டிருக்கிறது; இனி கிறிஸ்துவைத் தரித்துக்கொள்ள வேண்டும். கிறிஸ்துவைத் தரித்துக்கொண்டு கிறிஸ்துவின் சாயல், ரூபம், மகிமை உடையவர்களாக உலகத்திலே வாழவேண்டும். ஞானஸ்நானத்தினால் தான் கிறிஸ்துவைத் தரித்துக் கொள்ள முடியும். இவர்கள் ஞானஸ்நானத்தை பெற்றுக்கொள்ளாமல் இருக்கிற காலம் வரையிலும் கிறிஸ்துவைத் தரித்துக்கொள்ள முடியாதவர்களாகக் காணப்பட்டுக்கொண்டே இருக்கிறார்கள். ஞானஸ்நானத்தைப் பெற்றுக்கொள்ளும்போது கிறிஸ்துவைத் தரித்துக்கொள்ளும் அனுபவத்தை அடைந்துகொள்ளுகிறார்கள்.

### *18. ஞானஸ்நானம் என்றால், திருவசனத்தைக் கொண்டு தண்ணீர் முழுக்கினால் உண்டாக்கப்பட்டிருக்கிற சுத்திகரிப்பை சொந்த மாக்குவதே ஆகும்*

*தாம் அதைத் திருவசனத்தைக் கொண்டு தண்ணீர் முழுக்கினால் சுத்திகரித்து, பரிசுத்தமாக்குகிறதற்கும்,*

*எபேசியர் 5 : 26*

ஒரு காலத்திலே இவர்கள், தேவ வசனமாகிய திருவசனத்திற்கு அந்நியர்களாகக் காணப்பட்டு, பிசாசின் வார்த்தையாகிய வசனங்கள், பிசாசின் உபதேசங்கள், பிசாசின் ஆலோசனைகள் இவைகளைக் கைக்கொண்டு பிசாசின் வழியிலே சென்று, பிசாசினால் வஞ்சிக்கப்பட்ட அனுபவத்தோடு காணப்பட்டார்கள். அக்காலத்திலே இவர்கள் தேவனுடைய வசனத்தை ஏற்றுக்கொள்ளவோ, தேவனுடைய வசனத்தைக் குறித்ததான எண்ணமோ, உணர்வோ உடையவர்களாகக் காணப்படவில்லை. தேவனுடைய வசனத்தை குறித்த உணர்வற்றவர்களாக, விசுவாசம் அற்றவர்களாக, தேவனுடைய வசனத்தைக் குறித்ததான தாகம் அற்றவர்களாக தேவனுடைய வசனத்துக்கு மாறாக, அதற்கு அந்நியமான நிலைமையோடு காணப்பட்டுக் கொண்டிருந்ததான இவர்களைக் கர்த்தர் அதிலிருந்து இரட்சித்தார், விடுவித்தார்;

உயிர்ப்பித்து சொந்தமாக்கினார். திருவசனத்தை விசுவாசித்து இரட்சிக்கப்பட்டு, தேவ சந்நிதானத்திலே தேவனுடைய பிள்ளைகள் என்றதான வரிசையிலே வந்திருக்கிறார்கள். ஆனால் அந்தப் பிசாசினுடைய அசுத்தமான வார்த்தையினால் கறைப்பட்டுப்போன அந்த நிலைமையிலிருந்து இவர்கள் ஒரு சுத்திகரிப்பை அடைந்து கொண்டு பூரணமான நிலையில் வந்து சேரவேண்டும் என்று தேவன் சித்தங்கொண்டு திருவசனத்தைக் கொண்டு தண்ணீர் முழுக்கினால் ஒரு சுத்திகரிப்பை இவர்களுக்கு உண்டாக்கினார். திருவசனத்துக்குக் கீழ்ப்படிந்து, திருவசனத்தை ஏற்றுக்கொண்டு திருவசனத்தினாலே தேவனால் ஏற்படுத்தியிருக்கிறதான சுத்திகரிப்பை சொந்தமாக்குவதே ஞானஸ்நானமாகும்.

### *19. திருவசனத்தைக் கொண்டு தண்ணீர் முழுக்கினால் தேவன் ஏற்படுத்தியிருக்கிறதான பரிசுத்தமாகுதலை சொந்தமாக்கிக் கொள்வதே ஞானஸ்நானம் ஆகும்*

இவர்கள் ஞானஸ்நானத்தைப் பெற்றுக்கொள்ளும்போது திருவசனத்திற்குப் பூரணமாகக் கீழ்ப்படிந்து திருவசனத்தைக் கொண்டு தண்ணீர் முழுக்கினால் ஆயத்தப்படுத்தியிருக்கிறதான பரிசுத்த மாகுதலையும் கூட சொந்தமாக்குகிறார்கள். ஞானஸ்நானத்தைப் பெற்றுக்கொள்ளாமல் இருக்கிற காலம்வரைக்கும் இவர்கள் இவைகளுக்கு அந்நியர்களாகக் காணப்பட்டு, இவைகளை அடைந்து கொள்ள முடியாதவர்களாகக் காணப்படுகிறார்கள். எப்பொழுது இவர்கள் ஞானஸ்நானத்தைப் பெற்றுக்கொள்ளுகிறார்களோ, அப்பொழுது திருவசனத்தைக் கொண்டு தண்ணீர் முழுக்கினால் தேவன் ஏற்படுத்தியிருக்கிறதான பரிசுத்தமாகுதலையும்கூட சொந்தமாக்கிக் கொள்ளுகிறார்கள்.

### *20. கிறிஸ்துவைப்பற்றும் விருத்தசேதனத்தை அடைந்துகொள்வதே ஞானஸ்நானம் ஆகும்*

> *அல்லாமலும், நீங்கள் கிறிஸ்துவைப்பற்றும் விருத்த சேதனத்தினாலே மாம்சத்துக்குரிய பாவசரீரத்தைக் களைந்து*

*விட்டதினால், கையால் செய்யப்படாத விருத்தசேதனத்தை அவருக்குள் பெற்றீர்கள்.*

*கொலோசெயர் 2 : 11*

கிறிஸ்துவைப் பற்றும் விருத்தசேதனம் என்றால் ஆவிக்குரிய விருத்தசேதனம். பழைய ஏற்பாட்டின் காலத்தில் மாம்சத்திற்குரிய ஒரு விருத்தசேதனத்தை கர்த்தர் கட்டளையிட்டிருந்தார். அது எழுத்தின்படி உண்டானதும் மாம்சத்தின்படி உண்டானதுமான விருத்தசேதனம். அந்த விருத்தசேதனத்தினால் தான் தேவனுடைய ஜனங்கள் என்றதான ஒரு அடையாளத்தைப் பெற்றுக்கொள்ளு கிறார்கள்; விருத்தசேதனத்தை யார் அடைந்து கொள்ளவில்லையோ, பெற்றுக்கொள்ளவில்லையோ, அவர்கள் தேவ கோபத்திற்கு ஏதுவான வர்களாகக் காணப்படுவார்கள். அவர்கள் இஸ்ரவேல் வம்சத்தில் பிறந்திருந்தாலும் இஸ்ரவேலர் என்றதான அநுபவத்திலே, அந்த வரிசையிலே, அந்த 12 கோத்திரத்திற்கு உட்பட்ட அனுபவத்தோடு காணப்பட்டாலும், விருத்தசேதனத்தைப் பெற்றுக்கொள்ளாமல் இருக்கிற காலம் வரையிலும் அவர்கள் தீட்டானவர்களாக, தேவனுடைய ஜனங்கள் என்று சொல்லத்தக்க உரிமை அற்றவர்களாகக் காணப்பட்டுக் கொண்டே இருப்பார்கள். எப்போது அந்த மாம்சத்திலே விருத்தசேதனம் பெற்றுக் கொள்ளுகிறார்களோ, அதுமுதல் அவர்கள் தேவனுடைய ஜனங்கள் என்றதான அடையாளத்தை அடைந்து கொள்ளுகிறார்கள். குழந்தை பிறந்த 8 வது நாளிலே விருத்தசேதனம் பண்ணப்படவேண்டும் என்பது தேவனுடைய கட்டளை, கற்பனை. அது ஆண்களுக்கு மாத்திரம், பெண்களுக்குக் கிடையாது.

அக்காலத்திலே தேவனுடைய ஜனங்கள் என்றதான அடையாளம் ஆண்களுக்கு மட்டும் கொடுக்கப்பட்டிருந்தது. இக்காலத்திலே (புதிய ஏற்பாட்டின் காலத்திலே) ஆண்களும், பெண்களும் தேவனுக்கேற்ற பரிசுத்தவான்களாக, நீதிமான்களாக, ஒன்றானவர்களாக உலகத்திலே வாழ்கிறதற்கென்று தேவன் மனுக்குலத்தை அழைத்தார். அதற்கென்று விருத்தசேதனத்தை ஏற்படுத்தியிருக்கிறார். இஸ்ரவேல் ஜனங்கள் அத்தனை பேர்களும் விருத்தசேதனமுடையவர்களாய் காணப்பட்ட தினாலே மற்ற ஜனங்களைக் குறித்து அதாவது புறஜாதியார் அத்தனை பேர்களும் விருத்தசேதனம் இல்லாத ஜனங்கள் என்று தீழ்ப்பாகக்

கருதுவார்கள். அவ்விதமாக அக்காலத்திலே மாம்சத்திலே செய்யப்படும் விருத்தசேதனத்திற்குக் கூட ஒரு விசேஷமும் மேன்மையும் இருந்தது. ஆனால் அதைப் பார்க்கிலும் அளவிட முடியாததும் மேன்மையும் விசேஷமானதும் எது என்றால் ஆவிக்குரிய விருத்தசேதனம். ஆவிக்குரிய விருத்தசேதனத்தைப் பெற்றுக்கொள்ளும்போது ஆண்களும் பெண்களும் ஒன்றானவர்களாக, ஒரே உரிமை உடையவர்களாக, தேவனுடைய ஆசீர்வாதத்திற்கும், தேவனுடைய ராஜ்யத்திற்கும் ஒரே உரிமை உடையவர்களாக மாறிவிடுகிறார்கள். அதைக் குறித்து வேதம் சொல்லுகிறது;

> *யூதனென்றும் கிரேக்கனென்றுமில்லை, அடிமையென்றும் சுயாதீனனென்றுமில்லை, ஆணென்றும் பெண்ணென்று மில்லை; நீங்களெல்லாரும் கிறிஸ்து இயேசுவுக்குள் ஒன்றாயிருக்கிறீர்கள்.*
>
> *கலாத்தியர் 3 : 28*

கிறிஸ்து இயேசுவுக்குள் ஒன்றான அனுபவத்திற்காக மனுக்குலத்தை தேவன் அழைத்தார். அதற்கென்று ஆவிக்குரிய விருத்தசேதனத்தை ஏற்படுத்தியிருக்கிறார். ஞானஸ்நானம் என்றால் கிறிஸ்துவைப் பற்றும் விருத்தசேதனம், ஆவிக்குரிய விருத்தசேதனம். இந்த ஞானஸ் நானத்தைப் பெற்றுக்கொள்ளும்போது கிறிஸ்துவைப் பற்றும் ஆவிக்குரிய விருத்தசேதனத்தை அடைந்துகொள்ளுகிறார்கள். அதுமாத்திரமல்ல, பற்றும் என்று சொல்லும்போது அதற்கு விசேஷமான அர்த்தம் கொடுக்கப்பட்டிருக்கிறது. பற்றும் அல்லது பற்று அல்லது பற்றுதல் என்று சொல்லும்போது கிறிஸ்துவை பலமாக உறுதியாக ஊன்ற பிடித்துக்கொள்ளும் அனுபவமாகும். இதில் விசேஷமான அர்த்தங்கள் இருக்கிறது.

ஞானஸ்நானத்தினாலே இந்த அனுபவத்தை பெற்றுக் கொள்ளுகிறார்கள். ஆவிக்குரிய விருத்தசேதனமாகிய கிறிஸ்துவை ஊன்ற உறுதியாய் பலமாய் பிடித்துக்கொள்ளும் அனுபவத்தை உடையவர்களாய் மாறுகிறார்கள். அதுவரை இவர்கள் இரட்சிக்கப்பட்டு இருந்தாலும் பரிசுத்தஆவியின் அபிஷேகம் பெற்றிருந்தாலும் வேறே அனுபவங்கள் இருக்கிறதாக சொல்லிக்கொண்டாலும், கிறிஸ்துவை

ஊன்ற பலமாய் பிடித்துக்கொண்டு வாழும் அனுபவம் அவர்களுக்குக் கிடையாது. இவர்கள் கிறிஸ்துவினால் இரட்சிக்கப்பட்டிருக்கிறார்கள், கிறிஸ்துவின் பிள்ளைகளாய் இருக்கிறார்கள்; கிறிஸ்துவோடு ஒன்றாய் வாழ்கிறதான அனுபவத்தோடு காணப்படுகிறதாக தாங்கள் சொல்லிக் கொள்ளுகிறார்கள். இருந்தாலும், இந்த ஆவிக்குரிய விருத்தசேதன மாகிய ஞானஸ்நானத்தைப் பெற்றுக்கொள்ளாமல் இருக்கிறது வரையிலும் இவர்கள் கிறிஸ்துவைப் பற்றும் அநுபவத்தோடு, ஊன்ற உறுதியாக பலமாகப் பிடித்துக்கொண்டு வாழும் அநுபவத்தோடு காணப்படமுடியாது. அப்படியானால், எவ்வளவு அநுபவம் குறைவுபட்டவர்களாய் இருக்கிறார்கள் என்று கவனித்துப் பாருங்கள்.

கிறிஸ்துவை ஊன்ற உறுதியாய் பலமாய் பிடித்துக் கொள்ளும்போது உலகத்திலே எப்போதும் கம்பீரமான அநுபவத்தோடு காணப்படுவார்கள்; ஜெயகரமான அநுபவத்தோடு காணப்படுவார்கள்; உலகத்தையும் மற்றும் சகலவற்றையும் ஜெயித்து முன்னேறுவார்கள். காரணம் என்னவென்றால், கிறிஸ்துவை இவர்கள் ஊன்ற உறுதியாய் பலமாய் பிடித்துக்கொண்டு இருக்கிறதினாலே. இவர்களுக்கு இனி அசைவே கிடையாது; இவர்கள் ஜீவியத்தில் எந்தவிதமான சோர்புக்கும் இடமில்லை. கிறிஸ்துவிடம் இருந்து இவர்களுக்கேற்ற வல்லமை புறப்பட்டு வந்து எப்போதும் இவர்களை நிறைத்துக்கொண்டே இருக்கிறது. அவ்விதமாக ஏக ஐக்கியத்தோடு கிறிஸ்துவில் நிலைத்திருந்து உலகத்திலே வாழ்கிறார்கள். உலகம் முழுவதும் அதிர்ந்தாலும், உலகம் முழுவதும் தடுமாறினாலும் கூட இவர்கள் பயப்படமாட்டார்கள், அஞ்சமாட்டார்கள், கவலைப்படமாட்டார்கள். எந்தவிதமான சோர்போ, பயமோ, அசைவோ இவர்களுக்குக் கிடையவே கிடையாது. காரணம் என்னவென்றால், இவர்கள் கன்மலையாகிய கிறிஸ்துவை மகா உன்னதமான தேவனாகிய கிறிஸ்துவை, சர்வ வல்லமையும் சர்வ அதிகாரமும் உடைய தேவனாகிய கிறிஸ்துவை, உலகம் கொள்ளமாட்டாத, வானாதி வானம் கொள்ளமாட்டாதவராகிய, மகா மகிமையானவராக, மகா பராக்கிரமம் நிறைந்தவராக, மகா பெரியவராகக் காணப்பட்டுக் கொண்டிருக்கிறதான தேவனாகிய கிறிஸ்துவை இவர்கள் உறுதியாக, ஊன்ற, பலமாய்ப் பிடித்துக் கொள்ளுகிறார்கள், பிடித்துக்கொண்டே ஜீவிக்கிறார்கள்.

இவர்களைக் குறித்து கிறிஸ்து என்ன சொல்லியிருக்கிறார் என்றால், என்னுடைய பராக்கிரமம் நிறைந்த கரம் இவர்களைப் பிடித்திருக்கிறது என்பதாகச் சொல்லியிருக்கிறார்; இவர்கள் கிறிஸ்துவை உறுதியாக, ஊன்ற, பலமாக பிடித்துக்கொண்டு உலகத்திலே வாழ்கிறார்கள். பாக்கியசாலிகளாக வாழ்கிறார்கள். இந்த அனுபவம் ஞானஸ்நானத்தினாலே கிடைக்கிறது. ஞானஸ்நானத்தை ஒரு மனுஷன் பெற்றுக் கொள்ளும்போது ஆவிக்குரிய விருத்தசேதனமாகிய கிறிஸ்துவைப் பற்றும் விருத்தசேதனத்தை அடைந்துகொள்ளுகிறான்.

### *21. மாம்சத்திற்குரிய பாவ சரீரத்தைக் களைந்துவிட்டு ஆவிக்குரிய பரிசுத்தமான சரீரத்தைப் பெற்றுக்கொள்வதே ஞானஸ்நானம் ஆகும்*

ஞானஸ்நானத்தினாலே இவர்கள் மாம்சத்திற்குரிய பாவ சரீரங்களை களைந்து விடுகிறார்கள். இவர்கள் பிதா, குமாரன், பரிசுத்தஆவியின் நாமத்தினாலே தண்ணீருக்குள் மூழ்கி ஞானஸ்நானத்தைப் பெற்றுக்கொள்ளும்போது இவர்களுடைய மாம்சத்திற்குரிய பாவ சரீரத்தை அங்கேயே களைந்துவிட்டு, அடுத்ததான ஆவிக்குரிய ஒரு பரிசுத்தமான சரீரத்தை அடைந்துகொள்ளுகிறார்கள். இவர்கள் ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளாமல் இருக்கிற காலம் வரையிலும் இவர்கள் மாம்சத்துக்குரிய ஒரு பாவசரீரத்தோடு காணப்பட்டுக்கொண்டு இருக்கிறார்கள். இவர்கள் ஞானஸ்நானம் பெற்று, தண்ணீரில் இருந்து கரையேறும்போது இவர்களுடைய மாம்சத்திற்குரிய பாவசரீரம் அங்கேயே களைந்துவிட்டு, இவர்கள் ஆவிக்குரிய ஒரு பரிசுத்த சரீரத்தை அடைந்துகொண்டு எழும்பி வருகிறதான அனுபவத்தை அடைந்துகொள்ளுகிறார்கள்.

### *22. கையால் செய்யப்படாத விருத்தசேதனத்தைக் கிறிஸ்து இயேசுவுக்குள் பெற்றுக்கொள்வதே ஞானஸ்நானம் ஆகும்*

விருத்தசேதனம் என்று முதலில் சொன்னது பழைய ஏற்பாட்டு காலத்திலுள்ள கையால் செய்யப்படும் விருத்தசேதனம். கையால் செய்யப்படும் விருத்தசேதனம் என்பது, தேவனுக்குப் பிரியமில்லாத, அருவருப்பான பாகத்தை வெட்டித் தள்ளுவதே ஆகும். விருத்தசேதனம் பெற்றுக்கொள்ளுகிறவர்கள் தேவனுக்குரியவர்கள்,

மேன்மையானவர்கள் என்றதான அநுபவத்தோடு காணப்படுகிறார்கள். விருத்தசேதனத்தைப் பெற்றுக்கொள்ளாதவர்கள் தேவனிடத்திலிருந்து நீங்கி, கீழ்த்தரமான நிலைமையில் காணப்படுகிறார்கள். அக்காலத்தில் இவ்வளவு மேன்மையான ஒரு காரியத்தைக் கர்த்தர் கொடுத்திருந் தாலும் அவர்கள் தேவனுக்குச் சொந்தமானவர்கள், தேவனுடைய சொந்த பிள்ளைகள் என்ற பூரணமான நிலைக்கு வந்துசேர முடிகிறதில்லை. இயேசுகிறிஸ்து இந்த உலகத்தில் வந்து பாடுபட்டு மரிக்காதிருக்கும் காலம் வரைக்கும் அவர்களுக்கு அந்த அநுபவத்தைச் சொந்தமாக்க இயலாது. கிறிஸ்து இயேசு இந்த உலகத்தில் வந்து, பாடுபட்டு மரித்தபின்புதான் பாவத்துக்குச் செத்து, நீதிக்குப் பிழைத்து தேவனுக்குரியவர்கள், தேவனுடைய சொந்த பிள்ளைகள் என்றதான அந்த மகிமையான நிலைமைக்கு வந்துசேரக்கூடிய சகல பாக்கியங்களும் கிறிஸ்து இயேசுவால் மனுமக்களுக்கு ஆயத்தமாக்கப் பட்டிருக்கிறது. அதைச் சொந்தமாக்கிக் கொண்டு உலகத்தில் காணப்பட வேண்டுமானால் மிக முக்கியமாகக் காணப்படுவது விருத்தசேதனம். இது கையால் செய்யப்படாத விருத்தசேதனம். இருதயத்தின் நுனித்தோல் நீக்கப்பட வேண்டும். பழைய இருதயத்தை அறுத்து வெட்டித்தள்ள வேண்டும். பழைய நாவு (பொய்பேசும் நாவு), தேவனுக்கு மகிமையில்லாத காரியங்களைப் பேசும் நாவு, தேவனுக்குப் பிரியமில்லாத காரியங்களுக்குச் செவிகொடுக்கும் செவிகள், தேவனுக்குப் பிரியமில்லாத காரியங்களை சிந்திக்கும், விரும்பும் இருதயம், இவ்விதமாகக் காணப்படும் உறுப்புகளை எல்லாம் களையவேண்டும்; அதுதான் விருத்தசேதனம். அதனால் இந்த விருத்தசேதனத்தைக் குறித்து ஆயிரக்கணக்கான வருடத்திற்கு முன்பே கர்த்தர் சொல்லியிருக்கிறார்.

> *ஆகையால் நீங்கள் இனி உங்கள் பிடரியைக் கடினப் படுத்தாமல், உங்கள் இருதயத்தின் நுனித்தோலை விருத்த சேதனம்பண்ணுங்கள்.*
>
> *உபாகமம் 10 : 16*

இருயத்தின் நுனித்தோல் பாவத்தைக் குறித்துச் சிந்திக்கும் தன்மையோடு காணப்படுவது மட்டுமல்ல, மனக்கடினத்தை உண்டாக்கும்;

அதுமாத்திரமல்ல, அது அடைக்கப்பட்டதாய் இருக்கிறது; இருதயத்தின் உள்ளே தேவனுடைய வார்த்தையாவது, ஆலோசனையாவது உள்ளே நுழைய விடாமல் இருதயத்தின் வாசலைத் தடுக்கிறதான நுனித்தோல். இவ்விதமாய் காணப்படுகிறதான பழைய இருதயத்தின் நுனித்தோல், அதன் பழைய தன்மையாகிய நுனித்தோலை விருத்தசேதனம் பண்ணவேண்டும்; இது கையால் செய்யப்படாத விருத்தசேதனம்.

> *யூதா மனுஷரே, எருசலேமின் குடிகளே, உங்கள் கிரியைகளுடைய பொல்லாப்பினிமித்தம் என் உக்கிரம் அக்கினியைப் போல எழும்பி, அவிப்பார் இல்லாமல் எரியாதபடிக்கு நீங்கள் கர்த்தருக்கென்று உங்களை விருத்தசேதனம்பண்ணி, உங்கள் இருதயத்தின் நுனித்தோலை நீக்கிப்போடுங்கள்.*
>
> *எரேமியா 4 : 4*

இருதயத்தின் நுனித்தோல் நீக்கிப்போடுதலாகிய விருத்த சேதனத்தை அடைந்துகொள்ளாமல் இருக்கிற காலம் வரையிலும் தேவனுக்கு மகா பயங்கரமான கோபத்தையும் எரிச்சலையும் உண்டாக்கி மகா கொடிய எரிச்சலின் அக்கினியினாலே அழிந்துபோகும் தன்மையான அனுபவத்தோடு காணப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். ஆகையினால் அவர்கள் இருதயத்தின் நுனித்தோலை விருத்தசேதனம் பண்ணி, சுத்த இருதயத்தை அடைந்துகொள்ள வேண்டும். அப்படியே தேவனுக்குப் பிரியமில்லாமல், ஆவிக்குரிய, பரிசுத்த ஜீவியத்துக்கு எதிராகக் கிரியை நடப்பிக்கும் அவயவங்களையெல்லாம் விருத்த சேதனம்பண்ணி, சுத்தமான அநுபவத்தைச் சொந்தமாக்கிக் கொள்ளவேண்டும். இவ்விதமாக இருதயத்தின் நுனித்தோலை நீக்கும் விருத்தசேதனத்தை சொந்தமாக்கிக் கொள்ளுகிறவர்கள் தங்கள் பிடரியைக் கடினப்படுத்துவதில்லை, மனக்கடினத்திற்கு ஏதுவாகக் காணப்படுவதில்லை. எப்போதும் தெய்வ பயத்தோடு உலகத்திலே வாழும் அனுபவத்தோடு, கர்த்தருடைய உபதேசத்தை ஏற்றுக்கொள்ளும் அனுபவத்தோடு, திறந்த இருதயமான அனுபவத்தோடு அவர்கள் காணப்படுகிறார்கள்.

> *ஆதலால் புறம்பாக யூதனானவன் யூதனல்ல, புறம்பாக மாம்சத்தில் செய்யப்படும் விருத்தசேதனமும் விருத்த*

*சேதனமல்ல. உள்ளத்திலே யூதனானவனே யூதன்; எழுத்தின்படி உண்டாகாமல், ஆவியின்படி இருதயத்தில் உண்டாகும் விருத்தசேதனமே விருத்தசேதனம்; இப்படிப்பட்டவனுக்குரிய புகழ்ச்சி மனுஷராலே அல்ல, தேவனாலே உண்டாயிருக்கிறது.*

*ரோமர் 2 : 28, 29*

யதார்த்தமான யூதன், இஸ்ரவேலன் யாரென்றால் இவ்விதமான விருத்தசேதனத்தை அடைந்துகொண்டவன். கையால் செய்யப்படாத விருத்தசேதனத்தை அடைந்தவர்கள் தான் யதார்த்தமான யூதர்கள், யதார்த்தமான இஸ்ரவேலர்கள். இவன் தான் என்னுடைய இஸ்ரவேலன் என்று தேவன் சொல்லுகிறார். கையால் செய்யப்படாத, ஆவியினாலே ஏற்படும் விருத்தசேதனத்தை அடைந்து, இருதயம் மாற்றப்பட்டு புதிய இருதயத்தை உடையவனாகக் காணப்பட்டு, புது சிருஷ்டியின் அனுபவத்தைப் பூரணமாய் பெற்று உலகத்திலே வாழ்கிறவனே இஸ்ரவேலன் என்று தேவன் சொல்லுகிறார். இவனே என்னுடைய இஸ்ரவேலன்; இவனே என்னுடைய யூதன்; என்னுடைய ஜனத்தைச் சேர்ந்தவன்; இவனே சரியான மெய்யான இஸ்ரவேலன் என்று இவ்விதமான விருத்தசேதனத்தை அடைந்தவர்களைக் குறித்துக் கர்த்தர் சொல்லுகிறார். மற்றவர்கள் அந்த கோத்திரத்திலே பிறந்தாலும்கூட அவர்கள் இஸ்ரவேலர்கள் அல்ல என்று கர்த்தர் வேதத்தில் சொல்லியிருக்கிறார்.

*பிதாக்கள் அவர்களுடையவர்களே; மாம்சத்தின்படி கிறிஸ்துவும் அவர்களில் பிறந்தாரே, இவர் என்றென்றைக்கும் ஸ்தோத்திரிக்கப்பட்ட சர்வத்திற்கும் மேலான தேவன். ஆமென். தேவ வசனம் அவமாய்ப் போயிற்றென்று சொல்லக்கூடாது; ஏனென்றால், இஸ்ரவேல் வம்சத்தார் எல்லாரும் இஸ்ரவேலரல்லவே. அவர்கள் ஆபிரகாமின் சந்ததியாரானாலும் எல்லாரும் பிள்ளைகளல்லவே; ஈசாக்கினிடத்தில் உன் சந்ததி விளங்கும் என்று சொல்லியிருக்கிறதே. அதெப்படியென்றால், மாம்சத்தின்படி பிள்ளைகளானவர்கள் தேவனுடைய பிள்ளைகளல்ல, வாக்குத்தத்தத்தின்படி பிள்ளைகளானவர்களே அந்தச் சந்ததி என்றெண்ணப்படுகிறார்கள்.*

*ரோமர் 9 : 5 - 8*

இஸ்ரவேல் வம்சத்தில் பிறந்தால் இஸ்ரவேலர் ஆகமாட்டார்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார். மாம்சத்தின்படி ஆபிரகாமின் சந்ததியில் பிறந்தவர்கள் என்று காணப்பட்டாலும் ஆபிரகாமின் சந்ததியாகிய 12 கோத்திரத்திற்குட்பட்டவர்களாகக் காணப்பட்டாலும், மாம்சத்தின்படி இஸ்ரவேலர், யூதர் என்று சொல்லிக்கொள்ளுகிற அவர்கள், மாம்சத்தின்படி காணப்படுகிற காலம் வரைக்கும் தேவனுடைய பிள்ளைகளாக முடியாது. அவர்கள் ஆபிரகாமின் சந்ததியாரானாலும் எல்லாரும் பிள்ளைகளல்லவே. ஈசாக்கு யார்? வாக்குத்தத்தத்தின்படி உலகத்தில் பிறந்தவன். அவன் பிறக்கிறதற்கு முன்னே வாக்குத்தத்தம் ஆபிரகாமுக்கு அருளப்பட்டது. அந்த வாக்குத்தத்தத்தின்படி ஈசாக்கு உலகத்தில் பிறந்தான். அந்த வாக்குத்தத்தத்தின்படி பிறந்து, ஈசாக்கின் சந்ததி என்ற வரிசையில் வந்துசேர வேண்டுமானால் அவர்களும் வாக்குத்தத்தத்தின்படி பிறந்திருக்கவேண்டும். வாக்குத்தத்தம் எதையெல்லாம் அறிவிக்கிறதோ, அந்த வாக்குத்தத்தத்தை உறுதியாய்ப் பிடித்துக்கொண்டு, வாக்குத்தத்தம் அறிவிக்கிறதான அனுபவத்தை அடைந்து, மறுபிறப்பின் அனுபவத்தை அடைந்தவர்கள் மாத்திரம் தான் யதார்த்தமான இஸ்ரவேலர்கள், யூதர்கள். இவர்கள் யதார்த்தமான தேவனுடைய ஜனம், பரிசுத்தஜாதி என்றதான அவகாசத்தையும், அனுபவத்தையும் சொந்தமாக்கிக் கொள்ளுகிறார்கள். இவ்விதமான விருத்தசேதனத்தைப் பெற்றுக்கொண்டவர்கள் தான் தேவனுடைய சொந்தஜனமாகிய இஸ்ரவேலர்கள். இவர்கள் தான் கையினால் செய்யப்படாத விருத்தசேதனத்தைக் கிறிஸ்துவுக்குள் பெற்றவர்கள். ஆவிக்குரிய ஜீவியத்துக்கும் பரிசுத்த ஜீவிய அநுபவத்துக்கும் விரோதமாக என்னென்ன கிரியைகள் என்னென்ன உறுப்புகளில் காணப்படுகிறதோ அந்த உறுப்புகளை எல்லாம் அகற்றி, சுத்தமான ஆவிக்குரிய அநுபவத்திலே பரிபூரணமான நிலைக்கு வந்து சேருகிறவர்கள், விருத்தசேதனத்தாலே அந்த அநுபவத்தை அடைந்து கொள்ளுகிறார்கள். இவர்கள் கையினால் செய்யப்படாத விருத்த சேதனத்தைக் கிறிஸ்துவுக்குள் பெற்றுக்கொள்கிறார்கள்; இதுதான் ஞானஸ்நானம்.

## 23. இயேசுகிறிஸ்துவோடு கூட அடக்கம்பண்ணப்பட்ட அனுபவத்தை அடைந்துகொள்வதே ஞானஸ்நானம் ஆகும்

*ஞானஸ்நானத்திலே அவரோடே கூட அடக்கம்பண்ணப் பட்டவர்களாகவும், அதிலே அவரை மரித்தோரிலிருந் தெழுப்பின தேவனுடைய செயலின்மேலுள்ள விசுவாசத் தினாலே அவரோடே கூட எழுந்தவர்களாகவும் இருக்கிறீர்கள்.*

*கொலோசெயர் 2 : 12*

பாவத்தில் மரித்த மனுஷனை கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவோடு கூட அடக்கம்பண்ணவேண்டும். கர்த்தராகிய கிறிஸ்து இயேசு மனுமக்களுடைய பாவங்களுக்காகப் பாடுபட்டு மரித்தார், அடக்கம் பண்ணப்பட்டார், மூன்றாம் நாளில் உயிர்த்தெழுந்தார். அதுபோல இரட்சிக்கப்பட்டு பாவத்திற்கு மரித்த அநுபவம் உடையவர்களாகிய இவர்கள் கிறிஸ்துவோடுகூட அடக்கம்பண்ணப்பட்ட அநுபவத்தைச் சொந்தமாக்கவேண்டும்; அடக்கம்பண்ணப்பட்ட அநுபவத்தைச் சொந்தமாக்கும்போது பழைய மனுஷன் அங்கே அடக்கம்பண்ணப்பட்டு, புதிய மனுஷனாக எழும்பி வருவதே ஞானஸ்நானம் ஆகும்.

முற்காலத்தில் ஒரு நாட்டில் ஒரு மனுஷன் இன்னொரு மனுஷனைக் கொலைசெய்தால் அவனுக்கு மரணதண்டனை. அது எப்படியென்றால், அவன் கொலைசெய்த பிரேதத்தைக் கொலை செய்தவன் முதுகிலே வைத்துக் கட்டிவிடுவார்களாம். அவன் அந்தப் பிரேதமாகிய மனுஷனைச் சுமந்து சுமந்து இவனும் மரிப்பான். அந்தப் பிணம் அழுகும், அழுகி புழுக்கும்; அந்த நாற்றத்தினாலே இவனுக்குக் கொஞ்சம் உயிரெல்லாம் போகும்; சுமந்து சுமந்து கொஞ்சம் உயிரெல்லாம் போகும்; பின்பு அந்த அழுகின பிரேதம் இவன் முதுகில் இருந்து இவன் முதுகும் அழுகும்; அந்தப் பிரேதத்திலுள்ள புழு இவன் முதுகையும் துரக்கும். சில நாட்கள் கழிந்து இவனும் அதுபோல பிணமாக மாறுவான். இதே பிரகாரமாக இரட்சிக்கப்பட்ட ஜனங்கள் பாவமனுஷனாகிய செத்துப்போன மனுஷனை சுமந்துகொண்டே நடக்கிறார்கள். இனி கொஞ்சக்காலம் கழியும்போது அந்தப் பிணத்தினால் இவர்களும் மரித்துப்போவார்கள். ஆகவே தான், இரட்சிக்கப்பட்டு பாவத்துக்கு மரித்த அநுபவத்தை உடையதான

ஜனங்கள் அந்தப் பழைய மனுஷன் அடக்கம்பண்ணப்பட்ட அநுபவத்தைச் சொந்தமாக்கவேண்டும். அப்பொழுது பூரணமான ஒரு விடுதலையைச் சொந்தமாக்கிக் கொள்ளுகிறார்கள். பழைய மனுஷன் அங்கே அடக்கம்பண்ணப்பட்டு புதிய மனுஷர்களாக இவர்கள் எழும்பி வருகிறார்கள். மாம்சத்தின்படி ஒரு மனுஷன் மரித்தால் அடக்கம்பண்ணவேண்டும்; அடக்கம்பண்ணாவிட்டால் அது சட்டத்திற்கு விரோதமானது. அதேசமயம் மரிக்காமல் ஒரு மனிதனை அடக்கம்பண்ணினால் அது பெரிய துரோகம். அது பெரிய கொலை கேஸ். இங்கே ஞானஸ்நானம் என்றால் கிறிஸ்துவோடு கூட அடக்கம்பண்ணப்படுவதே ஆகும். அது பாவத்திற்கு மரித்தவர்களுக்குரியது.

*பாவத்துக்கு மரித்த நாம் இனி அதிலே எப்படி பிழைப்போம்?*
*ரோமர் 6 : 2*

பாவத்துக்கு மரித்த அனுபவத்தோடு காணப்படுகிறதான இவர்கள் இயேசுகிறிஸ்துவோடு கூட அடக்கம்பண்ணப்படுகிறதான அனுபவத்தை ஞானஸ்நானத்தின் மூலம் அடைந்துகொள்ள வேண்டும். ஞானஸ்நானத்தினால் தான் இயேசுகிறிஸ்துவோடு அடக்கம் பண்ணப்படும் அனுபவத்தை அடைந்துகொள்ள முடியும். இது ஜீவனோடு எழுந்திருக்கும் அனுபவத்திற்கு ஏற்ற அடக்கமாகவே காணப்படுகிறது. இயேசுகிறிஸ்து பாவிகளுக்காக, பாடுபட்டார், மரித்தார், மூன்றாம் நாளில் உயிர்த்தெழுந்தார்; உயிர்த்தெழுந்த கிறிஸ்து இயேசு அழியாமையுடையவராகக் காணப்படுவதுபோல, இவர்களும் ஆவிக்குரிய ஜீவனை அடைந்து, அழியாமை உடையவர்களாக நல்ல ஆவிக்குரியவர்களாக உயிர்த்தெழுந்து வெளியே வரும் அனுபவத்தை அடைந்துகொள்வதற்கேற்ற ஒரு அடக்கம் இது. கிறிஸ்து இயேசுவோடு அடக்கம்பண்ணப்படாமல் காணப்படும் காலம் வரைக்கும் இவர்கள் அநேக காரியங்களை ஜெயிக்கக்கூடாதவர்களாகக் காணப்படுவார்கள்.

கிறிஸ்து இயேசு அடக்கம்பண்ணப்பட்டதினாலே பாதாளத்தையும், பாதாளத்தின் வல்லமையையும் ஜெயித்து, அந்த மரணத்தின் சங்கிலியைத் தறித்து, முறித்து எறிந்து ஜெயவேந்தராய்

உயிர்த்தெழுந்தார். பாதாளத்திலே அடைக்கப்பட்டிருக்கிற சமயத்திலே பாதாளத்தோடு போராடிக்கொண்டிருந்தார். பாதாளத்தை ஜெயித்தார், பாதாளத்தின் வல்லமையை ஜெயித்தார்; பாதாளத்தின் வல்லமையை ஜெயித்து, அழித்து, ஒழித்தார். அடுத்தபடியாக மரணத்தின் சங்கிலிகளை எல்லாம் துண்டு துண்டாக முறித்து எறிந்து விட்டு மூன்றாம் நாளில் உயிர்த்தெழுந்தார். ஒரு மனுஷன் கிறிஸ்துவோடு கூட அடக்கம் பண்ணப்படும் அனுபவத்தை அடைந்துகொள்ளும்போது, அவனுக்கு எதிராகக் காணப்படும், பாதாளத்தின் வல்லமை மற்றும் வல்லமைகள் எல்லாம் இவனுக்கு நேராகவும் அழிக்கப்பட்டுப்போகிறது. கிறிஸ்து இயேசுவால் அழிக்கப்பட்ட சகல வல்லமைகளும் இவனுக்கு நேராகவும் அழிக்கப்பட்டு ஒழிக்கப்பட்டு நல்ல வெற்றிகரமான அனுபவத்தோடு அவன் கிறிஸ்துவோடுகூட எழுந்திருக்கிறவனாக, உயிர்த்தெழுந்தவனாகக் காணப்பட்டுக் கொண்டே இருக்கிறான். இந்த அநுபவத்தை ஞானஸ்நானத்தினால் தான் பெற்றுக்கொள்ள முடியும்.

## *24. தேவனுடைய செயலின்மேலுள்ள விசுவாசத்தை சொந்தமாக்குவதே ஞானஸ்நானமாகும்*

தேவனுடைய செயல் என்றால் செய்கை என்பதாகும். தேவனைக் குறித்தோ, தேவனுடைய செயலாகிய செய்கையைக் குறித்தோ இவர்களுக்கு ஒருகாலத்தில் விசுவாசம் இல்லாதிருந்தது. இதைக் குறித்த அவிசுவாசத்தோடு காணப்பட்டு, அவிசுவாசத்தின் கிரியையாகிய பாவத்தையும், அக்கிரமங்களையும் நடப்பித்து, அவ்விதமான அவிசுவாசத்தின் பாதையிலே சென்றுகொண்டிருந்ததான இவர்களைக் கர்த்தர் இரட்சித்து சொந்தமாக்கி இருக்கிறார். இப்போது தேவனுடைய செயலைக் குறித்ததான விசுவாசம் உடையவர்களாய் இருக்கிறார்கள். ஆனால் அந்த அநுபவத்தை அடைந்துகொள்வது இல்லை. விசுவாசத்தைக்குறித்து மகா பரிசுத்தமான விசுவாசம் என்று வேதத்திலே சொல்லப்பட்டு இருக்கிறது.

> *நீங்களோ பிரியமானவர்களே, உங்கள் மகா பரிசுத்தமான விசுவாசத்தின்மேல் உங்களை உறுதிப்படுத்திக்கொண்டு, பரிசுத்த ஆவிக்குள் ஜெபம்பண்ணி,*
>
> *யூதா 20*

பூரணமான விசுவாசம் தேவனுடைய செயலினால், தேவனை விசுவாசிக்கிறதினால் கிடைக்கிறது. தேவனுடைய செயலின்மேலுள்ள விசுவாசத்தை அடைந்துகொள்ளும்போது பூரணமான மகா பரிசுத்தமான விசுவாசமும், அதை உறுதிப்படுத்தலாகிய அநுபவமும் இவர்களுக்குக் கிடைக்கிறது. ஞானஸ்நானத்தை ஒரு மனுஷன் பெற்றுக்கொள்ளும் போது அவன் தேவனுடைய செயலின்மேலுள்ள விசுவாசத்தையும் அடைந்துகொள்ளுகிறவனாகக் காணப்படுகிறான்.

### *25. இயேசுகிறிஸ்துவோடு எழுந்திருக்கும் அநுபவத்தை அடைந்து கொள்வதே ஞானஸ்நானமாகும்*

*ஞானஸ்நானத்திலே அவரோடேகூட அடக்கம்பண்ணப்பட்ட வர்களாகவும், அதிலே அவரை மரித்தோரிலிருந்து எழுப்பின தேவனுடைய செயலின்மேலுள்ள விசுவாசத்தினாலே அவரோடே கூட எழுந்தவர்களாகவும் இருக்கிறீர்கள்.*

*கொலோசெயர் 2 : 12*

இயேசுகிறிஸ்து பாவிகளுக்காகப் பாடுபட்டு மரித்து, மூன்றாம் நாள் உயிர்த்தெழுந்தார். உயிர்த்தெழுந்த இயேசுவோடுகூட எழுந்திருக்கும் அநுபவத்தை அடைந்துகொள்ளுவதே ஞானஸ்நானமாகும். ஞானஸ்நானத்தினாலே மாத்திரம்தான் இயேசுகிறிஸ்துவோடு கூட எழுந்திருக்கும் அநுபவத்தை அடைந்துகொள்ள முடியும். இயேசு கிறிஸ்துவோடுகூட எழுந்திருக்கும் அநுபவத்தை அடைந்து கொள்ளாவிடில் முதலாம் உயிர்த்தெழுதலில் பங்குடையவர்களாகக் காணப்படமுடியாது. இயேசுகிறிஸ்து உயிர்த்தெழுந்து அழியாமை உடையவராக இருக்கிறார்; சதாகாலமும் அவர் உயிரோடிருக்கிற வராகவும் இருக்கிறார். ஞானஸ்நானம் பெற்றுக்கொண்டவர்களும் அவ்விதமாக சதாகாலமும் அவரோடுகூட அழியாமை உடைய வர்களாக, அவரோடுகூட ஆளுகை செய்யும் அனுபவத்தை ஞானஸ்நானத்தினாலே பெற்றுக்கொள்ளுகிறார்கள். கிறிஸ்து இயேசு உயிர்த்தெழுந்ததினாலே பரிசுத்தவான்களாக நித்திரையடைந்தவர்கள் சரீர மீட்படைந்து முதலாம் உயிர்த்தெழுதலில் பங்குபெற்று இயேசுகிறிஸ்துவை தரிசிப்பார்கள். இந்த மகிமையான அநுபவமும் கிறிஸ்து இயேசு உயிர்த்தெழுந்ததின் மூலம் வெளிப்படுகிறது. முதலாம்

உயிர்த்தெழுதலுக்கு பங்குள்ளவன் பாக்கியவானும் பரிசுத்தவானுமாய் இருக்கிறான்; இவர்கள் மேல் இரண்டாம் மரணத்திற்கு அதிகாரம் இல்லை என்று வசனம் சொல்லுகிறது. இவ்விதமாக முதலாம் உயிர்த்தெழுதலுக்கு பங்கும் அவகாசமும் உடையவர்களாக மாறுகிறார்கள். இயேசுகிறிஸ்துவோடு எழுந்திருக்கும் அநுபவத்தை பெற்றுக்கொள்ளும்போது பரிசுத்தவான்களின் உயிர்த்தெழுதலிலே பங்கும் அவகாசமும் உடையவர்களாகவும், அந்த அநுபவத்தை உடையவர்களாகவும் காணப்படுகிறார்கள்.

*நீங்கள் கிறிஸ்துவுடன்கூட எழுந்ததுண்டானால், கிறிஸ்து தேவனுடைய வலதுபாரிசத்தில் வீற்றிருக்கும் இடத்திலுள்ள மேலானவைகளைத் தேடுங்கள். பூமியிலுள்ளவைகளையல்ல, மேலானவைகளையே நாடுங்கள்.*

*கொலோசெயர் 3 : 1, 2*

ஒருகாலத்தில் இவர்கள் பூமியிலுள்ள பாவம் அக்கிரமம் அநியாயம் இப்படிப்பட்டதான சகல கிரியைகளையும் தேடித்தேடி, அவைகளையே ஆவலோடு நடப்பிக்கும் தன்மையுடையவர்களாகக் காணப்பட்டுக் கொண்டிருந்தார்கள். இப்பொழுதோ அவையெல்லாவற்றிற்கும் மரித்து, ஞானஸ்நானத்தினால் இயேசுகிறிஸ்துவோடு எழுந்த இவர்கள், கிறிஸ்து தேவனுடைய வலதுபாரிசத்தில் வீற்றிருக்கிற இடத்திலுள்ள மேலானவைகளை அதாவது பரலோகத்திலுள்ள மகிமையான பாக்கியங்களையே தேடும் அநுபவமுடையவர்களாகக் காணப்படு கிறார்கள்.

## 26. மறுஜென்ம முழுக்கினாலே உண்டாக்கப்பட்டு இருக்கிறதான இரட்சிப்பை சொந்தமாக்குவதே ஞானஸ்நானம் ஆகும்

*நாம் செய்த நீதியின் கிரியைகளினிமித்தம் அவர் நம்மை இரட்சியாமல், தமது இரக்கத்தின்படியே, மறுஜென்ம முழுக்கினாலும், பரிசுத்த ஆவியினுடைய புதிதாக்குதலினாலும் நம்மை இரட்சித்தார்.*

*தீத்து 3 : 5*

வேதத்தில் இரண்டு ஜென்மத்தைக் குறித்துச் சொல்லப்பட்டிருக்கிறது. மறுபிறப்பாகிய ஜென்மம்.

1. பாவ ஜென்மம்
2. ஆவிக்குரிய ஜென்மம்

இரண்டு ஜென்மம் ஒரு மனுஷனிடத்தில் இருக்கிறது. பாவத்திலே ஜென்மம் எடுத்திருக்கிற மனுஷன் மறுஜென்மத்தை அடைய வேண்டும், மறுபிறப்பை அடையவேண்டும் என்பது. மறுபடியும் பிறந்தவன் ஆவிக்குரியவனாக, ஆவிக்குரிய ஜென்மம் உடையவனாக இருக்கிறான். ஞானஸ்நானம் என்றால் மறுஜென்ம முழுக்கினாலே கர்த்தராலே ஆயத்தப்படுத்தியிருக்கும் இரட்சிப்பை சொந்தமாக்கிக் கொள்வதே ஆகும். இவர்கள் தண்ணீருக்குள் மூழ்கி பாவ ஜென்மமாகிய பழைய ஜென்மத்தை களைந்து விட்டு, புதிய ஜென்மமாகிய ஒரு ஆவிக்குரிய ஜென்மம் உடையவர்களாக எழுந்திருக்கிறார்கள் என்பதே ஆகும்.

இவர்கள் பாவிகளாகக் காணப்பட்டார்கள்; பாவக்கிரியை உடையவர்களாகக் காணப்பட்டார்கள்; அவ்விதமான பாவத்திலிருந்தும், பாவக் கிரியைகளிலிருந்தும் கர்த்தர் இவர்களை இரட்சித்தார், சொந்தமாக்கினார். இப்போது தேவனுடைய பிள்ளைகள் என்றதான வரிசையில் வந்திருக்கிறார்கள். ஆனாலும் பழைய ஜென்மமாகிய அந்தப் பாவ ஜென்மம் இவர்களிடத்தில் இருந்துகொண்டே இருக்கிறது. அந்த பாவ ஜென்மமாகிய பழைய ஜென்மம் களைந்து ஒரு புதிய ஜென்மமாகிய ஆவிக்குரிய ஜென்மம் உடையவர்களாக மாறவேண்டும் என்பது தேவனுடைய சித்தம். அவ்விதமான ஜென்மத்தை, அந்த இரட்சிப்பை தேவன் உண்டுபண்ணி வைத்திருக்கிறார். அதை ஞானஸ்நானத்தினால்தான் பெற்றுக்கொள்ள முடியும்.

ஞானஸ்நானத்தை இவர்கள் பிதா, குமாரன், பரிசுத்த ஆவியின் நாமத்தினாலே பெற்றுக்கொள்ளும்போது அது அளவிட முடியாத பாக்கியத்தை அளிக்கும், வல்லமையும் அதிகாரமும் உடைய நாமமாக பிதா, குமாரன், பரிசுத்தஆவியின் நாமம் காணப்படுகிறது. சுருக்கமாகச் சொன்னால் தேவனுடைய நாமம் என்று சொன்னாலே போதும். தேவனுடைய நாமம் மகா உன்னதமான பாக்கியத்தை வருவிக்கிறது.

தேவன் சர்வ வல்லமையும் சர்வ அதிகாரமும் உடையவராகக் காணப்படுகிறார். அவ்விதமான தேவனுடைய நாமமான பிதா, குமாரன், பரிசுத்தஆவியின் நாமத்தினாலே இவர்கள் ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ள தண்ணீருக்குள்ளே அமிழ்த்தப்படும்போது, தண்ணீருக்குள்ளே மூழ்கி பாவ ஜென்மமாகிய பழைய சரீரத்தை அங்கே களைந்துவிட்டு, புதிய ஜென்மமாகிய ஒரு பரிசுத்தமான ஜென்மத்தோடு எழுந்திருந்து வெளியே வருகிறார்கள் என்பதே ஆகும். அப்பொழுது இவர்கள் புதிய ஜென்மமாகிய மறுஜென்மத்தை அடைந்து கொள்ளுகிறார்கள்.

### 27. மாம்ச அழுக்கை நீக்குதலாயிராமல் ஆவிக்குரிய அழுக்கை நீக்குதலை அடைந்துகொள்ளும் சுத்திகரிப்பே ஞானஸ்நானம் ஆகும்

*அதற்கு ஒப்பனையான ஞானஸ்நானமானது, மாம்ச அழுக்கை நீக்குதலாயிராமல், தேவனைப்பற்றும் நல்மனச்சாட்சியின் உடன்படிக்கையாயிருந்து, இப்பொழுது நம்மையும் இயேசு கிறிஸ்துவினுடைய உயிர்த்தெழுதலினால் இரட்சிக்கிறது;*

*I பேதுரு 3 : 21*

அதற்கு ஒப்பனையான ஞானஸ்நானம் என்று சொல்லக் காரணம், பழைய ஏற்பாட்டின் காலத்தில், இந்த ஞானஸ்நானத்தை வெளிப்படுத்தும் நிழலாகிய ஞானஸ்நானம் காணப்பட்டுக் கொண்டு இருந்தது என்று வேதத்தில் வாசிக்கிறோம்.

மாம்ச அழுக்கை நீக்குதலாயிராமல் ஆவிக்குரிய அழுக்கை நீக்குதலை அடைந்துகொள்ளும் சுத்திகரிப்பே ஞானஸ்நானம் ஆகும். ஒரு காலத்திலே இவர்கள் மாம்சத்திற்குரியவர்களாய் இருந்து, மாம்சத்திற்குரிய சகல காரியத்திலும் ஈடுபட்டு, மாம்சத்தின் கிரியையாகிய பாவங்களை நடப்பித்து சகல கேடையும் வருவித்துக் கொண்டவர்களாக, ஆத்மீக அழுக்கை வருவித்துக் கொண்டவர்களாக காணப்பட்டுக் கொண்டே இருந்தார்கள். அவ்விதமான நிலைமையிலிருந்து கர்த்தர் இவர்களை இரட்சித்து சொந்தமாக்கினார். ஆனால் இவர்களுக்கு ஆவிக்குரிய மாசு போக ஒரு சுத்திகரிப்பு இன்னும் தேவையாய் இருக்கிறது. ஆவிக்குரிய அழுக்கை நீக்குதலாகிய

ஞானஸ்நானம். மாம்ச அழுக்கை நீக்குகிற ஞானஸ்நானம் அல்ல இது; ஆவிக்குரிய அழுக்கை நீக்கும் ஞானஸ்நானம் என்பது. ஆவிக்குரிய ஜீவியத்தில் ஒரு மாசு கூட இல்லாமல் களிம்பற பூரணமான சுத்திகரிப்பைக் கொடுக்கும் ஞானஸ்நானம் இது என்பதாகும். கர்த்தரால் இவர்கள் இரட்சிக்கப்பட்டு, மீட்கப்பட்டு, ஆவிக்குரிய அநுபவத்தோடு ஆவிக்குரியவர்களாய் இருக்கிறவர்கள், ஆவிக்குரிய அழுக்காகிய மாசு அற சுத்திகரிக்கப்பட்டு, கழுவப்பட்டு ஒரு பூரணமான தூய அநுபவத்தை அடைந்துகொள்வதற்கேற்ற ஒரு கழுவப்படுதல் அல்லது சுத்திகரிப்பை அடைந்துகொள்வதே இந்த ஞானஸ்நானம் ஆகும்

### *28. பழைய ஏற்பாட்டு காலத்திலே ஞானஸ்நானம் போன்ற நிழல் வெளிப்படுத்தி காண்பித்த பொருளாகிய ஞானஸ்நானத்தைப் பெற்றுக்கொள்வதே ஞானஸ்நானமாகும்*

*அந்த ஆவிகள், பூர்வத்திலே நோவா பேழையை ஆயத்தம் பண்ணும் நாட்களிலே, தேவன் நீடிய பொறுமையோடே காத்திருந்தபோது, கீழ்ப்படியாமற்போனவைகள்; அந்தப் பேழையிலே சிலராகிய எட்டுப்பேர்மாத்திரம் பிரவேசித்து ஜலத்தினாலே காக்கப்பட்டார்கள்.*

*I பேதுரு 3 : 20*

நோவாவின் காலத்தில் ஜனங்கள் பாவங்களையும் அக்கிரமங்களையும் நடப்பித்து, தேவகோபத்தை அதிகம் அதிகமாய் வருவிக்கும் தன்மையோடு காணப்பட்டுக்கொண்டிருந்தார்கள். தேவன் நோவாவைக் கொண்டு சுவிசேஷத்தைப் பிரசங்கித்தும் அவர்கள் தேவனை விசுவாசிக்கவோ, தேவனுக்குப் பயப்படவோ, தங்கள் சீர்கேடான பாவங்களை விட்டுத் திரும்பவோ இல்லை. தேவன் நீடிய பொறுமையோடே காணப்பட்டும் அதை அலட்சியம்பண்ணி, துணிகரமாய் பாவம் செய்து, தேவகோபத்தினால் வாரிக்கொள்ளப் பட்டார்கள். அந்தப் பேழையிலே பிரவேசித்த 8 பேரும், பேழைக்குள் வந்த ஜீவராசிகளும் தவிர மற்ற எல்லாருமே அழிக்கப்பட்டார்கள். அந்தப் பேழையிலே ஜனங்கள் பிரவேசித்துக் காக்கப்பட்டது ஞானஸ்நானத்திற்கு ஒப்பிட்டுச் சொல்லப்பட்டிருக்கிறது. இந்த ஞானஸ்நானத்தைக் காண்பிக்கும் நிழலான ஞானஸ்நானம் என்று

இந்த வசனம் வெளிப்படுத்திப் பேசுகிறது. அதற்கு ஒப்பனையான ஞானஸ்நானமானது, அந்த நிழல் வெளிப்படுத்திக் காண்பிக்கும் பொருளான ஞானஸ்நானம் என்பது; பழைய ஏற்பாட்டின் காலத்தில் நிழல் காண்பித்த பொருளாகிய ஞானஸ்நானம் இது.

> *இப்படியிருக்க, சகோதரரே, நீங்கள் எவைகளை அறியவேண்டுமென்றிருக்கிறேனென்றால்; நம்முடைய பிதாக்களெல்லாரும் மேகத்துக்குக் கீழாயிருந்தார்கள், எல்லாரும் சமுத்திரத்தின் வழியாய் நடந்துவந்தார்கள். எல்லாரும் மோசேக்குள்ளாக மேகத்தினாலும் சமுத்திரத்தினாலும் ஞானஸ்நானம்பண்ணப்பட்டார்கள்.*
>
> *I கொரிந்தியர் 10 : 1, 2*

சமுத்திரத்தின் வழியாக நடந்து வந்ததை கூட ஞானஸ்நானத்திற்கு ஒப்பிட்டுச் சொல்லப்பட்டிருக்கிறது. அக்காலத்திலே காணப்பட்ட அவர்களுக்கு ஏற்ற ஒரு ஞானஸ்நானம் என்பது. நோவாவின் காலத்தில் காணப்பட்டதான ஜனங்கள் அழிவுக்குள்ளாகி, மகா நிர்ப்பந்தமான நிலைமையோடு காணப்பட்டு, தடுமாறி தத்தளித்து அலறி சத்தமிட்டு, மாண்டு மடிந்துபோன சமயத்தில் தேவனுடைய ஜனங்கள் பேழையினால் பாதுகாக்கப்பட்டார்கள். இஸ்ரவேல் ஜனங்கள் சிவந்த சமுத்திரத்தில் நடந்து கரையேறினதினாலே பாதுகாக்கப்பட்டார்கள்; மற்றவர்கள் சமுத்திரத்திலே அழிந்தார்கள். இதே போன்று தேவ கோபத்தினால் உலகமும், உலகத்தில் காணப்படுகிறதான தேவகோபத்திற்கேதுவான ஜனங்களும் அழிந்துபோகும்போது, இவர்கள் அழியாமை உடையவர்களாக பாதுகாக்கப்படுவதற்கு ஏற்ற அநுபவத்தோடு, அழியாத ராஜ்யத்திற்குள் பிரவேசித்து சதாகாலமும் தேவனோடு சந்தோஷத்தையும், ஆனந்தத்தையும் அடைந்துகொள்வதற்கென்று இவ்விதமான ஒரு ஞானஸ்நானம் வைக்கப்பட்டிருக்கிறதென்று, அந்தக் காலத்திலே காணப்பட்ட அந்த நிழலாகிய ஞானஸ்நானம் இந்தப் பொருளாகிய ஞானஸ்நானத்தை வெளிப்படுத்திக் காண்பிக்கிறது என்பது தான் அர்த்தம். அதற்கு ஒப்பனையான ஞானஸ்நானம் என்று சொல்லக் காரணம் இது தான். அது ஒப்பான ஞானஸ்நானம் அல்ல, ஒப்பனையானது. அக்காலத்திலுள்ள ஜனங்களுக்கு பாவங்கள், அக்கிரமங்களிலிருந்து விடுதலையும் கிடையாது. இயேசுகிறிஸ்து

உலகத்திலே வந்து, பாடுபட்டு மரிக்கிறது வரையிலும் இரட்சிப்பு, மீட்பு, ஆவிக்குரிய அநுபவங்கள் ஒன்றும் அவர்களுக்குக் கிடைக்கிறதில்லை, கிடைக்க முடியாது. இயேசுகிறிஸ்து எப்பொழுது உலகத்தில் வந்து பாடுபட்டு, மரித்தாரோ, அதுமுதல் தான் பாவமன்னிப்பு, இரட்சிப்பு, மீட்பு, ஆவிக்குரிய அனுபவங்கள் எல்லாம் கிடைக்கும்.

அக்காலத்திலே அவர்களுக்கு அவ்விதமான அநுபவத்தைப் பெற்றுக்கொள்ளுவதற்கு வழி இல்லை. ஆகையினாலே அந்த ஞானஸ்நானம் என்று சொல்லுகிறதான அந்த அனுபவத்தை அவர்களுக்குக் கட்டளையிட்டார். அதே சமயத்தில் அந்த ஞானஸ் நானம் சொல்லுகிற அந்த அநுபவம், புதிய ஏற்பாட்டுக் காலத்தில் நடக்கப்போகிறதான ஞானஸ்நானத்தைக் காண்பித்த நிழல் என்று சொல்லப்பட்டு இருக்கிறது. அந்த நிழலாகிய ஞானஸ்நானம் காண்பித்த பொருளாகிய ஞானஸ்நானம் இது. ஆகையினால் தான் இது ஒப்பனையான ஞானஸ்நானம் என்று சொல்லுகிறது. அது வேறே. இது வேறே. அது நிழல், இது பொருள்.

பொருளாகிய ஞானஸ்நானத்தைப் பெறுகிறவன் சகல காரியத்திலும் புது சிருஷ்டியாய் இருக்கவேண்டும். புதுசிருஷ்டியின் அனுபவத்தை அடைந்தவர்களாய் இருக்கவேண்டும். ஆகையினால் அந்த ஞானஸ்நானம் காண்பித்ததான பொருளாகிய ஞானஸ்நானம் என்று குறிப்பிடத்தக்க அதே வார்த்தையில் அதற்கு ஒப்பனையான ஞானஸ்நானமானது என்று சொல்லப்பட்டிருக்கிறது. பழைய ஏற்பாட்டின் காலத்திலே காணப்பட்ட அந்த நிழலாகிய ஞானஸ்நானம் வெளிப்படுத்தி காண்பிக்கும், பொருளாகிய அநுபவத்தை பெறுவதே ஞானஸ்நானமாகும். இந்தப் பொருளாகிய அனுபவமாகிய ஞானஸ் நானத்தை அடைந்து அந்த பொருளை உடையவர்களாக, காணப்படுவதே ஆகும்.

### *29. தேவனோடு நல்மனச்சாட்சியின் உடன்படிக்கைப் பண்ணிக்கொண்டு வாழ்வதே ஞானஸ்நானம் ஆகும்*

தேவனைப் பற்றும் நல்மனச்சாட்சியின் உடன்படிக்கை என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. ஒரு காலத்தில் இவர்கள் பிசாசோடு

துர்மனச்சாட்சியின் உடன்படிக்கைப் பண்ணிக்கொண்டு, பிசாசோடு நடந்து, பிசாசுக்கேற்றவர்களாக உலகத்திலே கிரியை செய்துகொண்டு இருந்தார்கள். மரணத்தோடும், பாதாளத்தோடும் உடன்படிக்கைப் பண்ணிக் கொண்டவர்கள் என்று நாம் வேதத்தில் வாசிக்கிறோம். இவர்கள் பிசாசோடு கூட இருந்து, துர்க்கிரியைகளை நடப்பித்து மகா கேடையும், நாசத்தையும் வருவித்துக் கொண்டிருந்ததான அந்த நிலைமையிலிருந்து கர்த்தர் அவர்களை இரட்சித்தார். இரட்சிக்கப்பட்டு, தேவனுடைய சொந்த பிள்ளைகள் என்றதான அநுபவத்தில் வந்திருக்கிறார்கள். ஆனால், இவர்கள் இன்னுமொரு உடன்படிக்கைப் பண்ணிக்கொள்ள வேண்டும். தேவனோடு கூட நல்மனசாட்சியின் உடன்படிக்கைப் பண்ணிக்கொண்டு உலகத்திலே வாழவேண்டும். இன்று முதல் உமது பிள்ளையாக, உமக்கு மகிமையானவர்களாக, உமக்கு பிரியமானவர்களாக, உம்முடைய சித்தம் மாத்திரம் செய்து ஜீவிப்போம், பிழைப்போம், உமக்கு ஏற்றவர்களாக மாத்திரம் உலகத்திலே வாழ்வோம் என்றதான சரியான ஒரு நல்மனச்சாட்சியின் உடன்படிக்கை தேவனோடு பண்ணிக்கொள்ள வேண்டும்; அது ஞானஸ்நானத்தினால் தான் முடியும்.

### *30. இயேசுகிறிஸ்துவின் உயிர்த்தெழுதலினாலே ஆயத்தப்படுத்தியிருக்கிறதான இரட்சிப்பை சொந்தமாக்குவதே ஞானஸ்நானம் ஆகும்*

கிறிஸ்து இயேசு உயிர்த்தெழுந்ததினால் ஒரு இரட்சிப்பு, விடுதலை கூட இவர்களுக்கு ஆயத்தப்படுத்தப்பட்டிருக்கிறது. பாவத்திலிருந்தும், சாபத்திலிருந்தும், சகல கேட்டிலிருந்தும் இவர்கள் இரட்சிக்கப் பட்டார்கள், மீட்கப்பட்டார்கள். ஆனால் இயேசுகிறிஸ்துவின் உயிர்த்தெழுதலினால் கூட இவர்களுக்கு ஒரு இரட்சிப்பு தேவையாய் இருக்கிறது. ஆவிக்குரிய ஜீவியத்திற்கு ஏற்ற ஒரு விடுதலை. ஆவிக்குரிய ஜீவியத்திலே வளர்ந்து வளர்ந்து, முன்னேறி, பலத்து, ஓங்கிப் போகும்படியான ஒரு நல்ல சுதந்தரமான விடுதலை, இயேசுகிறிஸ்து உயிர்த்தெழுந்ததினாலே இவர்களுக்குக் கிடைக்கிறது; கிறிஸ்துவுக்குள் சுயாதீனர்களாக உலகத்திலே வாழ்ந்து, சுதந்தரவாளி களாக உலகத்திலே காணப்பட்டு, சகல ஆசீர்வாதத்திற்கும் ஏற்ற

சுதந்தரவாளிகளாகப் பிழைத்து முன்னேறுவதற்கேற்ற ஒரு இரட்சிப்பு, விடுதலை கிறிஸ்து இயேசு உயிர்த்தெழுந்ததினாலே மனுமக்களுக்கு வந்திருக்கிறது. இவர்கள் அந்த இரட்சிப்பை ஞானஸ்நானத்தினால் தான் சொந்தமாக்க முடியும்.

பூரணமான ஆயத்தத்தோடு தகுதியோடு ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளும்போது இவ்விதமான அநுபவங்களாகிய ஆசீர்வாதங்கள் அவர்களுடைய ஜீவியத்தில் ஏற்படும்.

# 3

## ஞானஸ்நானம் எங்கே பெற்றுக்கொள்ள வேண்டும்?

*தங்கள் பாவங்களை அறிக்கையிட்டு, யோர்தான் நதியில் அவனால் ஞானஸ்நானம் பெற்றார்கள்.*

*மத்தேயு 3 : 6*

யோர்தான் நதி கரைபுரண்டு ஓடுகிற ஒரு பெரிய நதி; தண்ணீர் மிகுதியான இடம். இந்த நதியிலே ஏராளமான ஜனங்கள் யோவான் ஸ்நானனால் ஞானஸ்நானம் பெற்றுக்கொண்டார்கள். கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவும் யோர்தான் நதியில் யோவான்ஸ்நானனால் ஞானஸ்நானம் பெற்று மாதிரி காண்பித்தார்.

*அப்பொழுது யோவானால் ஞானஸ்நானம் பெறுவதற்கு இயேசு கலிலேயாவைவிட்டு யோர்தானுக்கு அருகே அவனிடத்தில் வந்தார்.*

*மத்தேயு 3 : 13*

இயேசுகிறிஸ்து ஞானஸ்நானம் பெற்றுக்கொண்டதான அந்த இடம் இன்றைக்கும் மிகவும் பயத்திற்குரியதாகக் காணப்பட்டுக் கொண்டே இருக்கிறது. தண்ணீர் மிகுதியாய் இருந்த இடமாகிய யோர்தான் நதியில் ஜனங்கள் ஞானஸ்நானம் பெற்றார்கள்.

*சாலிம் ஊருக்குச் சமீபமான அயினோன் என்னும் இடத்திலே தண்ணீர் மிகுதியாயிருந்தபடியினால், யோவானும் அங்கே ஞானஸ்நானங்கொடுத்து வந்தான்; ஜனங்கள் அவனிடத்தில் வந்து ஞானஸ்நானம் பெற்றார்கள்.*

*யோவான் 3 : 23*

*இவைகளுக்குப்பின்பு, இயேசுவும் அவருடைய சீஷரும் யூதேயா தேசத்திற்கு வந்தார்கள்; அங்கே அவர் அவர்களோடே சஞ்சரித்து, ஞானஸ்நானங்கொடுத்து வந்தார்.*

*யோவான் 3 : 22*

தண்ணீர் மிகுதியான இடத்திலே ஞானஸ்நானம் கொடுக்கப்பட்டது குறித்து கர்த்தருடைய பரிசுத்தவேதாகமம் தெளிவாக அறிவிக்கிறது. தண்ணீர் மிகுதியான இடம் எதற்காக என்றால், மூழ்கி ஞானஸ்நானம் பெற்றுக்கொள்வதற்காகவே. ஆகவே, தண்ணீர் மிகுதியான இடத்தில் தான் ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ள வேண்டும்.

# 4

## ஞானஸ்நானம் எப்படி பெற்றுக்கொள்ள வேண்டும்?

இயேசுகிறிஸ்து நமக்கு மாதிரியாக தண்ணீருக்குள் இறங்கி ஞானஸ்நானம் பெற்றுக்கொண்டார்.

*இயேசு ஞானஸ்நானம் பெற்று, ஜலத்திலிருந்து கரையேறின வுடனே, இதோ, வானம் அவருக்குத் திறக்கப்பட்டது; தேவ ஆவி புறாவைப்போல இறங்கி, தம்மேல் வருகிறதைக் கண்டார்.*

*மத்தேயு 3 : 16*

*இரதத்தை நிறுத்தச்சொன்னான். அப்பொழுது பிலிப்பும் மந்திரியும் ஆகிய இருவரும் தண்ணீரில் இறங்கினார்கள், பிலிப்பு அவனுக்கு ஞானஸ்நானங் கொடுத்தான். அவர்கள் தண்ணீரிலிருந்து கரையேறினபொழுது, கர்த்தருடைய ஆவியானவர் பிலிப்பைக் கொண்டுபோய் விட்டார். மந்திரி அப்புறம் அவனைக் காணாமல், சந்தோஷத்தோடே தன் வழியே போனான்.*

*அப்போஸ்தலர் 8 : 38, 39*

பிலிப்பு மந்திரிக்கு தண்ணீருக்குள் இறங்கி ஞானஸ்நானம் கொடுத்தான். ஆகவே, தண்ணீர் மிகுதியான இடத்திலே தண்ணீருக்குள் இறங்கி ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ள வேண்டும்.

ஞானஸ்நானம் பெற்று, உன் பாவங்கள் போகக் கழுவப்படு என்று அப்போஸ்தலர் 22:16-ல் சொல்லப்பட்டிருக்கிறது.

மனுஷன் சர்வாங்கமும்(சரீரம் முழுவதும்) பாவம் உடையவனாகக் காணப்படுகிறான். அவ்விதமான பாவத்திலிருந்து கர்த்தர் அவனை இரட்சித்தார். இப்போது சரீரம் முழுவதும் பாவத்தின் மாசு உடையவனாகக் காணப்படுகிறான். அவன் பாவங்கள் போகக் கழுவப்பட வேண்டுமானால், தண்ணீரில் சரியானபடி மூழ்கி, தன்னை முழுவதும் கழுவப்பட்ட பிரகாரமாகவே ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளவேண்டும் என்பது தான்.

*மேலும் பிதாவின் மகிமையினாலே கிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்டதுபோல, நாமும் புதிதான ஜீவனுள்ளவர்களாய் நடந்துகொள்ளும்படிக்கு, அவருடைய மரணத்திற்குள்ளாக்கும் ஞானஸ்நானத்தினாலே கிறிஸ்துவுடனே கூட அடக்கம்பண்ணப் பட்டோம்.*

*ரோமர் 6 : 4*

*ஞானஸ்நானத்திலே அவரோடேகூட அடக்கம்பண்ணப் பட்டவர்களாகவும்........*

*கொலோசெயர் 2 : 12*

இதிலே கிறிஸ்து இயேசுவோடு கூட அடக்கம்பண்ணப்படும் விதமாக ஞானஸ்நானம் பெற்றுக்கொண்டார்கள் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அடக்கம்பண்ணப்படுவது என்றால், குழியைத் தோண்டி குழிக்குள் வைத்து, காணாமல் மண்மூடி புதைப்பதே அடக்கம் செய்தல் என்று சொல்வது. இவ்விதமாக அடக்கம் செய்யப்பட்ட பிரகாரமாக தண்ணீருக்குள் சரீரம் முழுவதும் மூழ்கி ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளவேண்டும்.

அடுத்தபடியாக, மறுஜென்ம முழுக்கு என்று சொல்லப்பட்டு இருக்கிறது.

*நாம் செய்த நீதியின் கிரியைகளினிமித்தம் அவர் நம்மை இரட்சியாமல், தமது இரக்கத்தின்படியே, மறுஜென்ம முழுக்கினாலும், பரிசுத்த ஆவியினுடைய புதிதாக்குதலினாலும் நம்மை இரட்சித்தார்.*

*தீத்து 3 : 5*

மறுஜென்ம முழுக்கு என்றால் தண்ணீருக்குள்ளே மூழ்குகிறது ஆகும். முழுக்கு என்ற வார்த்தையின் அர்த்தம் தண்ணீருக்குள் அமிழ்ந்தி மூழ்குவதே ஆகும்.

*தாம் அதைத் திருவசனத்தைக் கொண்டு தண்ணீர் முழுக்கினால் சுத்திகரித்து, பரிசுத்தமாக்குகிறதற்கும்,*

*எபேசியர் 5 : 26*

ஞானஸ்நானம் தண்ணீருக்குள் இறங்கி, தண்ணீரில் மூழ்கி பெற்றுக்கொள்ள வேண்டும்.

# 5

## ஞானஸ்நானம் எந்த நாமத்தினாலே பெற்றுக்கொள்ள வேண்டும்?

*ஆகையால், நீங்கள் புறப்பட்டுப்போய், சகல ஜாதிகளையும் சீஷராக்கி, பிதா குமாரன் பரிசுத்தஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானங் கொடுத்து, நான் உங்களுக்குக் கட்டளையிட்ட யாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம்பண்ணுங்கள். இதோ, உலகத்தின் முடிவுபரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனேகூட இருக்கிறேன் என்றார். ஆமென்.*

*மத்தேயு 28 : 19, 20*

*பேதுரு அவர்களை நோக்கி: நீங்கள் மனந்திரும்பி, ஒவ்வொருவரும் பாவமன்னிப்புக்கென்று இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுங்கள், அப்பொழுது பரிசுத்தஆவியின் வரத்தைப் பெறுவீர்கள்.*

*அப்போஸ்தலர் 2 : 38*

*இதைக் கேட்டபோது அவர்கள் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றார்கள்.*

*அப்போஸ்தலர் 19 : 5*

கர்த்தராகிய இயேசுகிறிஸ்து, பிதா குமாரன் பரிசுத்தஆவி நாமத்தில் ஞானஸ்நானம் கொடுக்கக் கட்டளையிட்டார்; ஆகவே, அவர்கள் அதன்படியே தான் ஞானஸ்நானம் கொடுத்தார்கள். அவர்கள் இயேசுவின் கட்டளைக்கு மாறாக வேறொரு நாமத்தைச் சொல்லிக் கொடுப்பார்களானால், அவர்கள் இயேசுகிறிஸ்துவின் கட்டளையை மீறுகிறவர்களாவார்கள். அப்படி மீறிச் செய்யும்போது அவர்கள் கொடுப்பது ஞானஸ்நானம் ஆகாது; அவர்களும் தேவனுடைய ஊழியக்காரர்களாக இருக்கமுடியாது. இந்த வசனங்களிலே

இயேசுவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றார்கள் என்று எழுதியிருக்கிறது. அதே சமயத்தில் ஞானஸ்நானம் கொடுத்தது பிதா குமாரன் பரிசுத்தஆவியின் நாமத்தினாலே தான். இயேசுகிறிஸ்து கட்டளையிட்டபடியே ஞானஸ்நானம் கொடுத்துக்கொண்டு கர்த்தராகிய இயேசுவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றார்கள் என்று எழுதக் காரணம் என்னவென்றால், அக்காலத்திலே காணப்பட்ட ஜனங்களுக்குப் பிதாவைக் குறித்தும், குமாரனைக் குறித்தும், பரிசுத்தஆவியைக் குறித்தும் விசுவாசம் உண்டு. ஆனால், இயேசுகிறிஸ்து தான் வருகிறவராகிய குமாரன் அல்லது மேசியா என்று விசுவாசிக்க மாட்டார்கள். மேசியாவாகிய இரட்சகர் வருவார் என்று அவர்களுக்கு விசுவாசம் உண்டு. ஏனெனில் இயேசுகிறிஸ்து திரு அவதாரம் செய்கிறதற்கும் அநேக வருஷங்களுக்கு முன்னதாகவே அநேக தீர்க்கதரிசிகளைக் கொண்டு கிறிஸ்து இயேசுவின் திரு அவதாரத்தைக் குறித்துப் பேசியிருக்கிறதான அந்த வேதவாக்கியங்களை அவர்கள் படித்தவர்கள். அந்த வேதவாக்கியங்கள் எவைகளைச் சொல்லுகிறதோ அதே அநுபவத்திலே திருஅவதாரம் செய்து, அதே அனுபவத்தோடு உலகத்திலே இருந்து கிரியை செய்து, வேதத்தின் நிறைவேறுதலாகவே கிறிஸ்து இயேசு காணப்பட்டும், அவர்கள் அவிசுவாசத்தினால் இயேசுகிறிஸ்துவை ஒரு கசப்பாக, வெறுப்பாக, புறம்பாக்கி விட்டார்கள். இயேசுகிறிஸ்துவைக் குறித்து அவர்கள், இவர் யோசேப்பின் குமாரன், மரியாளின் மகன். இவரை நாங்கள் விசுவாசிக்கமாட்டோம்; வருகிறவரான மேசியாவை விசுவாசிப்போம், ஆனால் இவர் அவர் அல்ல என்று மறுதலித்துக்கொண்டே காணப்பட்டார்கள்.

அப்படியிருந்த ஜனங்கள் தான் இயேசுகிறிஸ்துவே அந்த மேசியா; வரப்போகிறதான மேசியா இவர்தான் என்று விசுவாசித்து ஞானஸ்நானம் பெற்றுக்கொண்டார்கள் என்று வெளிப்படையாக ஜனங்களுக்குத் தெரியவேண்டுமானால், பிதா, குமாரன், பரிசுத்தஆவியின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றார்கள் என்று எழுதினால் இந்த இயேசுவை அந்த குமாரன் என்று விசுவாசித்து, ஏற்றுக்கொண்டார்கள் என்று அந்தத் தெளிவு வராது; ஆகையினால் தான் அப்படி எழுதப் பட்டிருக்கிறது. அப்படியானால் பிதா, குமாரன், பரிசுத்த ஆவியின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெறவேண்டும் என்பதாகும்.

# 6

## எந்த ஊழிய வகுப்பினரிடமிருந்து ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ள வேண்டும்?

ஐந்து வகையான பிரித்தெடுக்கப்பட்ட ஊழியக்காரர்கள் உண்டு. 1.அப்போஸ்தலன், 2. தீர்க்கதரிசி, 3.சுவிசேஷகன், 4. மேய்ப்பன், 5. போதகன். இவர்களில் அப்போஸ்தலர்கள், தீர்க்கதரிசிகள், சுவிசேஷகர்கள், மேய்ப்பர்கள் ஆகிய நான்கு வகுப்பினருக்கு மாத்திரம் ஞானஸ்நானம் கொடுக்கக் கர்த்தர் கட்டளை கொடுத்தார்; மற்றவர்களுக்குக் கிடையாது. போதகன் என்கிறதான வகுப்பை உடையவன், பிரித்தெடுக்கப்பட்ட ஊழியக்கார வகுப்பைச் சேர்ந்தவன்தான். ஆனால் அவனுக்கு ஞானஸ்நானம் கொடுக்கச் சட்டமில்லை. அப்போஸ்தலன், தீர்க்கதரிசி, சுவிசேஷகன், மேய்ப்பன் ஆகிய 4 வகையானவர்களுக்கு மட்டும் தான் ஞானஸ்நானம் கொடுக்கக் கட்டளை கொடுக்கப்பட்டுள்ளது. யோவான்ஸ்நானனை முதல்முதலாக ஞானஸ்நானம் கொடுக்கும்படியாகக் கர்த்தர் உலகத்திலே அனுப்பினார், அவனுடைய அனுபவத்தைக் குறித்து:

> *அவன் கர்த்தருக்கு முன்பாகப் பெரியவனாயிருப்பான், திராட்சரசமும் மதுவும் குடியான், தன் தாயின் வயிற்றிலிருக்கும் போதே பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டிருப்பான்.*
>
> *லூக்கா 1 : 15*

யோவான் ஸ்நானன் உலகத்திலே பிறப்பதற்கு முன்னே தூதனாலே அறிவிக்கப்பட்ட வாக்குத்தத்தம் இது. கர்த்தருடைய ஊழியக்காரர்கள் உலகத்திலே காணப்பட்ட, காணப்படுகிற சகல ஜனங்களைப் பார்க்கிலும் பெரியவர்கள். அவர்களைக் கர்த்தர் அவருடைய ஜீவனாலும் வல்லமையினாலும் நிறைத்து, அவர்களை உலகத்தில் காணப்படுகிற சகல ஜனங்களைப் பார்க்கிலும் பெரியவர்களாக வைக்கிறார்.

*ஒருவன் எனக்கு ஊழியஞ்செய்கிறவனானால் என்னைப் பின்பற்றக்கடவன், நான் எங்கே இருக்கிறேனோ அங்கே என் ஊழியக்காரனும் இருப்பான்; ஒருவன் எனக்கு ஊழியஞ் செய்தால் அவனைப் பிதாவானவர் கனம்பண்ணுவார்.*

*யோவான் 12 : 26*

ஒருவன் கர்த்தராகிய இயேசுவுக்கு ஊழியஞ்செய்தால் பிதாவாகிய தேவனால் கனம் பெற்றவனாய் இருப்பான். பிதா அவனை கனப்படுத்துவார். நல்ல கனமும், உயர்வும், மேன்மையும் உடையவனாக காணப்படுவான்; உலகத்திலே பெரியவனாகவும் இருப்பான்.

கர்த்தருடைய தாசனாகிய மோசேயைக் குறித்து வேதம் என்ன சொல்லுகிறதென்றால், மோசே என்பவர் பார்வோனுடைய ஊழியக்காரருடைய பார்வையிலும், ஜனங்களுடைய பார்வையிலும், மிகவும் பெரியவராயிருந்தார். எகிப்து தேசத்தில் காணப்பட்ட பார்வோன் மகாராஜாவின் கீழ் காணப்பட்ட உத்தியோகஸ்தருடைய பார்வையிலும், அங்கே காணப்பட்ட எகிப்தியருடைய பார்வையிலும் மோசே என்பவர் மிகவும் பெரியவராயிருந்தார். அதாவது எகிப்து தேசத்தில் காணப்பட்ட மகாராஜாவைப் பார்க்கிலும் பெரியவர் என்பதாகும்.

*அப்படியே கர்த்தர் ஜனங்களுக்கு எகிப்தியரின் கண்களில் தயவுகிடைக்கும்படி செய்தார். மோசே என்பவன் எகிப்து தேசத்தில் பார்வோனுடைய ஊழியக்காரரின் பார்வைக்கும் ஜனங்களின் பார்வைக்கும் மிகவும் பெரியவனாயிருந்தான்.*

*யாத்திராகமம் 11 : 3*

கர்த்தருடைய தாசனாகிய மோசே ஒரு காலத்திலே கூலிக்காக ஆடு மேய்த்துக் கொண்டிருந்தான். கொட்டாரத்தில் வளர்க்கப்பட்டாலும் பிறகு அவன் கொட்டாரத்தை விட்டு ஓடினான். ஆடு மேய்த்துக் கொண்டிருந்த அவனைக் கர்த்தர் சந்தித்து, தமது ஊழியக்காரனாக அதிகாரப்படுத்தி எகிப்துக்கு அனுப்பினார். அப்போது எகிப்திலே காணப்பட்டதான பார்வோன் மகாராஜாவின் கீழ் இருந்ததான மந்திரிகள் மற்றும் சகல உத்தியோகஸ்தர் ஆகியோருடைய பார்வையிலும், அங்கு காணப்பட்ட எகிப்தியருடைய பார்வையிலும் இந்த மோசே

மிகவும் பெரியவராய் இருந்தார். மிகவும் பெரியவர் என்றால் பார்வோன் மகாராஜாவைப் பார்க்கிலும் எவ்வளவோ பெரியவர் என்பதாகும்.

> *அவன் என்னை நோக்கி: நீர் என் பிதா, என் தேவன், என் இரட்சிப்பின் கன்மலையென்று சொல்லுவான். நான் அவனை எனக்கு முதற்பேறானவனும், பூமியின் ராஜாக்களைப் பார்க்கிலும் மகா உயர்ந்தவனுமாக்குவேன்.*
>
> *சங்கீதம் 89 : 26, 27*

கர்த்தருடைய ஊழியக்காரர்கள் ராஜாக்களைப் பார்க்கிலும் எவ்வளவு உயர்ந்தவர்கள். பிரித்தெடுக்கப்பட்ட ஐந்து வகையான ஊழியக்காரர்களுக்கு கர்த்தரால் கொடுக்கப்பட்ட வாக்குத்தத்தங்கள் இவைகள். எனக்கு முதற்பேறானவன் என்று சொல்லும்போது சேஷ்டபுத்திரன், மூத்தமகன், மூத்த குமாரன், முதலாவது புத்திரன் என்பது. சேஷ்டபுத்திரன் என்று கர்த்தர் சொல்லக் காரணம் என்னவென்றால், இஸ்ரவேல் ஜனங்களுக்குள்ளே மூத்த மகனுக்கு தான் இரண்டு பங்கு சொத்து. ஒரு குடும்பத்தில் ஏழு பிள்ளைகள் ஒரு தகப்பனுக்கு இருந்தால் அந்தச் சொத்தை பாகம் வைக்கும்போது எட்டாகப் பங்கு வைத்து, மூத்த பிள்ளைக்கு ஒரு பங்கு கூட கொடுக்க வேண்டும்; அதுவே சேஷ்டபுத்திர பாகம். நம்முடைய நாட்டிலே சாதாரணமாகப் பார்க்கும்போது கடைசி பிள்ளைக்கு தான் அதிகமாகச் சொத்து கொடுப்பார்கள். ஆனால் இஸ்ரவேலிலே, முதல் பிள்ளைக்கு இரட்டிப்பான சொத்து கொடுக்கவேண்டும். அதே அர்த்தத்தில் தான் இங்கே சொல்லுகிறார், அவன் எனக்கு முதற்பேறானவன் என்றால், இரட்டிப்பான ஆசீர்வாதங்களுக்கு சொந்தமானவன் ஊழியக்காரன்.

சபைக்குக் கொடுக்கப்படும் ஆவிக்குரிய ஆசீர்வாதங்கள், வரங்கள், வல்லமைகளைப் பார்க்கிலும், பரலோகத்திலே சபைக்கு வைக்கப் பட்டிருக்கும் சொத்தைப் பார்க்கிலும் ஊழியக்காரனுக்கு ஒரு பங்கு கூட இருக்கும். சகல ஆசீர்வாதங்களிலும் ஒரு பங்கு கூட ஊழியக்காரனுக்கு; அந்த அர்த்தத்தில் தான் சொல்லுகிறார். இவ்விதமான ஆசீர்வாதத்திற்கு உரியவர்கள் கர்த்தருடைய ஊழியக்காரர்கள். இவர்கள் பூரணமான பிரதிஷ்டையோடு காணப்பட்டவர்கள்; கர்த்தராலே பூரணமாக பரிசுத்தமாக்கப்பட்டவர்கள்;

கர்த்தருடைய வல்லமையை அளவில்லாமல் பெற்றவர்கள்; கர்த்தருடைய வரங்களினாலும், கிருபைகளினாலும் அளவில்லாமல் நிரப்பப்பட்ட அனுபவத்தோடு உலகத்திலே காணப்பட்டதினால், கர்த்தருடைய கனம் பூலோகத்திலே காணத்தக்கதான அனுபவத்தோடு கர்த்தருடைய ஊழியக்காரர்கள் ஜீவனம்பண்ணுகிறார்கள். ஊழியக் காரர்களுடைய செய்கை, கிரியை மற்றும் சகலமும் பார்க்கும்போது இவர்கள் தேவனாலே கனமாக்கப்பட்டவர்கள் என்றும், பூமியின் ராஜாக்களைப் பார்க்கிலும் மிகவும் உயர்ந்தவர்கள் என்றும் மற்றவர்களுக்கு விளங்கத்தக்க அளவிலே, அந்த தெய்வீகம் எப்பொழுதும் வெளிப்படையாகக் கிரியை செய்துகொண்டே இருக்கும். தேவனிடத்தில் இருந்து பெற்றுக்கொண்டதான சகல தெய்வீக ஆசீர்வாதங்களும், கிருபா வரங்கள், வல்லமைகள் மற்றும் அனைத்தும் இவ்விதமாக வெளிப்படையாகக் கிரியை செய்துகொண்டே இருக்கும்.

இவ்விதமாக, பூமியில் காணப்பட்டதான சகல ஜனங்களைப் பார்க்கிலும் பெரியவனாய் இருந்தான் கர்த்தருடைய தாசனாகிய யோவான்ஸ்நானன். அவன் தாயின் கர்ப்பத்தில் இருக்கும்போதே பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டிருந்தான். இவ்விதமாக பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தினால் நிறைக்கப்பட்டு ஆவியின் பெலனை அளவில்லாமல் பெற்று தெய்வீகமான சகல வரங்கள் வல்லமை யினாலும் நிறைக்கப்பட்டு அளவில்லாத ஆசீர்வாதங்களோடு உலகத்திலே காணப்பட்டு தேவனுடைய கனம், தேவனுடைய மகிமை மற்றும் தெய்வீகம் உலகத்திலே வெளிப்படத்தக்க அளவிலே உலகத்திலே நடக்கிறவன், ஜீவிக்கிறவன், கிரியை செய்கிறவனாகிய ஊழியக்காரனிடமிருந்து ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ள வேண்டும் என்பது. கர்த்தருடைய ஊழியக்காரன் பூரண பிரதிஷ்டையோடு காணப்பட்டான் என்று நாம் வேதத்தில் வாசிக்கிறோம்.

> *அப்பொழுது பேதுரு அவரை நோக்கி: இதோ, நாங்கள் எல்லாவற்றையும் விட்டு, உம்மைப் பின்பற்றினோமே, என்று சொல்லத்தொடங்கினான். அதற்கு இயேசு பிரதியுத்தரமாக: என்னிமித்தமாகவும், சுவிசேஷத்தினிமித்தமாகவும், வீட்டை யாவது, சகோதரரையாவது, சகோதரிகளையாவது, தகப்பனையாவது, தாயையாவது, மனைவியையாவது,*

*பிள்ளைகளையாவது, நிலங்களையாவது விட்டவன் எவனும், இப்பொழுது இம்மையிலே, துன்பங்களோடேகூட நூறத்தனை யாக, வீடுகளையும், சகோதரரையும், சகோதரிகளையும், தாய்களையும், பிள்ளைகளையும், நிலங்களையும், மறுமையிலே நித்தியஜீவனையும் அடைவான் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்.*

*மாற்கு 10 : 28 - 30*

இந்த பேதுரு, யாக்கோபு என்பவர்கள் இரட்சிக்கப்படுவதற்கு முன்னே குடும்ப வாழ்க்கையோடு காணப்பட்டவர்கள். அவர்கள் கர்த்தருடைய சித்தத்தையும், அழைப்பையும் அறிந்தவுடனே பூரணமான சன்னியாசப் பிரதிஷ்டையோடு எல்லாவற்றையும் விட்டு வெறுத்தவர்களாகக் கர்த்தரைப் பின்பற்றினார்கள். யோவான் அப்போஸ்தலனோ விவாகம் ஆகாத மனுஷன். கர்த்தர் எல்லோருக்கும் ஒரே பிரகாரமான கட்டளையைக் கொடுத்திருக்கிறார். இவர்கள் மனைவியை விட்டவர்கள், மக்களை விட்டவர்கள், நிலங்களை விட்டவர்கள், வீட்டை விட்டவர்கள், தாய், தகப்பன், சகோதரர்கள் எல்லாவற்றையும் விட்டவர்கள். இவைகளை விடாத ஒருவன், அவருக்கு ஊழியக்காரனாய் இருக்க முடியாது என்று கர்த்தர் சொல்லியிருக்கிறார். இவ்விதமாய் எல்லாவற்றையும் விட்டுவிடுகிறவனுக்கு நூறத்தனையாய் வீடுகள் கிடைக்கும்; நிலங்கள் கிடைக்கும்; ஆவிக்குரிய பிள்ளைகள் சகோதரர்கள், சகோதரிகள், தாய் எல்லாமே ஆத்மீக பிரகாரமாக நூறத்தனையாகக் கிடைக்கும்; மனைவி மாத்திரம் இல்லை. அப்போஸ்தலர்களுக்குத் தகப்பனும் கிடையாது.

*யாதொருவன் என்னிடத்தில் வந்து, தன் தகப்பனையும் தாயையும் மனைவியையும் பிள்ளைகளையும் சகோதரரையும் சகோதரிகளையும், தன் ஜீவனையும் வெறுக்காவிட்டால் எனக்குச் சீஷனாயிருக்கமாட்டான். தன் சிலுவையைச் சுமந்துகொண்டு எனக்குப் பின்செல்லாதவன் எனக்குச் சீஷனாயிருக்கமாட்டான். அப்படியே உங்களில் எவனாகிலும் தனக்கு உண்டானவைகளையெல்லாம் வெறுத்துவிடாவிட்டால் அவன் எனக்குச் சீஷனாயிருக்கமாட்டான்.*

*லூக்கா 14 : 26, 27, 33*

இவ்விதமாக எல்லாவற்றையும் வெறுத்து விட்டவர்கள் தான் கர்த்தருடைய ஊழியக்காரர்கள் என்றதான அனுபவத்தை உடைய வர்கள்; விவாகம் இல்லாதவர்கள் கர்த்தருடைய ஊழியக்காரர்கள்.

> *நீங்கள் கவலையற்றவர்களாயிருக்க விரும்புகிறேன். விவாகமில்லாதவன் கர்த்தருக்கு எப்படிப் பிரியமாயிருக்க லாமென்று, கர்த்தருக்குரியவைகளுக்காகக் கவலைப்படுகிறான். விவாகம்பண்ணினவன் தன் மனைவிக்கு எப்படிப் பிரியமா யிருக்கலாமென்று, உலகத்திற்குரியவைகளுக்காகக் கவலைப் படுகிறான். அதுபோல, மனைவியானவளுக்கும் கன்னிகைக் கும் வித்தியாசமுண்டு. விவாகமில்லாதவள் சரீரத்திலும் ஆத்துமாவிலும் பரிசுத்தமாயிருக்கும்படி, கர்த்தருக்குரியவை களுக்காகக் கவலைப்படுகிறாள்; விவாகம்பண்ணினவள் தன் புருஷனுக்கு எப்படிப் பிரியமாயிருக்கலாமென்று, உலகத்திற் குரியவைகளுக்காகக் கவலைப்படுகிறாள்.*
>
> *I கொரிந்தியர் 7 : 32 - 34*

இவர்கள் மனைவி இல்லாதவர்கள் என்று வசனம் சொல்லுகிறது. ஊழியக்காரர்கள் மனைவி இல்லாதவர்கள். இவர்கள் கர்த்தருக்கு எப்படி பிரியமாயிருக்கலாம் என்று கர்த்தருக்குரியவைகளுக்காகக் கவலைப்படுகிறார்கள்; இவர்கள் தான் ஊழியக்காரர்கள். விவாகம் பண்ணிக்கொண்டவர்கள் தன் மனைவிக்கு எப்படி பிரியமாயிருக்கலாம் என்று உலகத்திற்குரியவைகளுக்காகக் கவலைப்படுகிறார்கள். கர்த்தருக்காகக் கவலைப்பட இவர்களால் முடியாது. ஊழியக்காரர்கள் கர்த்தரோடு இருக்கவேண்டியவர்கள். இவர்கள் கர்த்தரோடு இருக்கவேண்டுமானால் ஆவி ஆத்துமா சரீரம் மூன்றும் பரிசுத்தமான அநுபவத்தோடு காணப்படவேண்டும். அவர்கள் சரீரத்தில் அசுசி இருக்கக்கூடாது. குடும்ப வாழ்க்கையில் ஈடுபட்டுக்கொண்டிருக்கிற வர்களுக்கு சரீரம் அசுசி உடையதாயிருக்கிறது.

கர்த்தராகிய இயேசுகிறிஸ்து ஊழியக்காரர்களைப் பார்த்து: நீங்கள் மனந்திரும்பி, சிறுபிள்ளைகளைப்போல் ஆகாவிட்டால் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்கமாட்டீர்கள் என்று சொன்னார். மனந்திரும்பி, சிறுபிள்ளைகளைப் போன்ற அனுபவத்தை அடைந்து

கொண்டவர்கள் இவர்கள். சிறுபிள்ளைகள் என்றால் 1 அல்லது 2 வயது குழந்தைக்கு விவாகத்தைப் பற்றியோ மற்றும் அசுத்தமான காரியங்கள், கிரியைகளைப் பற்றியோ நினைவில் கூட வருகிறதில்லை. கர்த்தருடைய வரத்தைப் பெற்றவன், சிறுகுழந்தையின் அனுபவத்தைப் பெற்றவன்தான் கர்த்தருடைய ஊழியக்காரன். பரலோகராஜ்யம் பிரவேசிக்க வேண்டுமானால், ஊழியக்காரன் மனந்திரும்பி சிறு பிள்ளையின் அனுபவத்தை அடையவேண்டும். இல்லாவிட்டால் மற்றவர்களைப் பரிசுத்தப்படுத்த அவனால் முடியாது. இவர்களுக்குள் பரிசுத்தம் நிரம்பி வழிகிற அநுபவத்தோடு காணப்பட்டால்தான் மற்றவர்களைப் பரிசுத்தப்படுத்த முடியும். ஆதிசபையில் காணப்பட்ட கர்த்தருடைய ஊழியக்காரர்கள் இவ்விதமான அனுபவத்தோடு காணப்பட்டார்கள். கர்த்தராலே கட்டளை பெற்ற, இவ்விதமான அனுபவத்தோடுள்ள ஊழியக்காரர்கள் கொடுக்கிறதே ஞானஸ் நானமாகும். இவ்விதமான ஊழியக்காரர்கள் தான் ஞானஸ்நானம் கொடுக்கும்படியாகக் கர்த்தர் கட்டளை கொடுத்திருக்கிறார்.

> *யோவானைப்பார்க்கிலும் இயேசு அநேகம் பேரைச் சீஷராக்கி ஞானஸ்நானங்கொடுக்கிறாரென்று பரிசேயர் கேள்விப்பட்டதாகக் கர்த்தர் அறிந்தபோது, யூதேயாவைவிட்டு மறுபடியுங் கலிலேயாவுக்குப் போனார். இயேசு தாமே ஞானஸ்நானங் கொடுக்கவில்லை, அவருடைய சீஷர்கள் கொடுத்தார்கள்.*
>
> *யோவான் 4 : 13*

தமது சீஷர்களைக் கொண்டு கர்த்தர் ஞானஸ்நானம் கொடுத்தார். அதேசமயத்திலே, இயேசுகிறிஸ்துவினிடத்தில் பெற்றுக்கொண்டார்கள் என்று எண்ணத்தக்க அளவில், சொல்லத்தக்க அளவில் அந்த ஞானஸ்நானம் மகிமையாய் இருந்தது என்பது. இவ்விதமான அநுபவத்தோடு காணப்பட்ட, கர்த்தராலே கட்டளை பெறப்பட்ட ஊழியக்காரர்களிடமிருந்து ஞானஸ்நானம் பெறவேண்டும்.

இனி இரண்டு வகுப்பான ஊழியக்காரர்கள், குடும்ப வாழ்க்கையில் ஈடுபட்டு கர்த்தருடைய ஊழியத்திலே உதவிசெய்கிறவர்கள். இவர்கள்தான் கண்காணி, உதவிக்காரன் என்பவர்கள். இவர்களைக் குறித்து Iதீமோத்தேயு 3 ஆம் அதிகாரத்திலும், தீத்து 1 : 5-9 ஆகிய

வசனங்களிலும் சொல்லப்பட்டிருக்கிறது. இவர்கள் கர்த்தரால் அழைக்கப்பட்டவர்கள் அல்ல, வரம் பெற்றவர்களும் அல்ல. இவர்கள் ஒரே மனைவியை உடைய புருஷர்கள், குடும்ப ஜீவியம் செய்கிறவர்கள், விசுவாசிகளிலிருந்து தெரிந்தெடுக்கப்பட்டவர்கள். கர்த்தருடைய தாசனாகிய பவுலுடைய கட்டளையின்படி உடன் ஊழியக்காரர்களாகிய தீமோத்தேயு, தீத்து என்பவர்களால் தெரிந்துகொள்ளப்பட்டவர்கள். அப்போஸ்தலன், பரிசுத்தஆவியின் நடத்துதலின்படி கட்டளை கொடுத்து, மூப்பன், உதவிக்காரன், கண்காணி வகுப்பைச் சேர்ந்த மூப்பன் என்று ஏற்படுத்தும்படியாக உடன் ஊழியக்காரர்களிடம் சொல்லி அனுப்பி, பவுலுடைய கட்டளையின்படியும், பரிசுத்தஆவியின் நடத்துதலின்படியும் விசுவாசிகளிலிருந்து தெரிந்துகொள்ளப்பட்ட வர்கள். அவர்களுக்குரிய கற்பனைகள், பிரமாணங்கள் எல்லாம் வேதபுஸ்தகத்தில் சரியாகச் சொல்லப்பட்டிருக்கிறது. இவர்கள் குடும்ப வாழ்க்கையில் ஈடுபட்டு, குடும்பத்தையும் பிள்ளைகளையும் நன்றாய் நடத்தி, ஊழியத்திலே உதவியாகவும் காணப்படவேண்டும்.

மூப்பர்களிலும் இரண்டு வகுப்பு உண்டு. அப்போஸ்தல வகுப்பைச் சேர்ந்த மூப்பன், கண்காணி வகுப்பைச் சேர்ந்த மூப்பன். கண்காணி வகுப்பைச் சேர்ந்த மூப்பனின் முதல் வேலை என்னவென்றால், விசுவாசிகளுக்கிடையே பிரிவினைகள் இருந்தால் அதை விசாரிக்கிறதும், விசுவாசிகளுக்கு விவாக சம்பந்தமான காரியங்கள் விசாரித்து நடத்திவைக்கிறதும், அதற்கப்புறம் கூட்டங்கள் ஆராதனை களும் நடத்தலாம். உதவிக்காரனுடைய வேலை என்னவென்றால், முதல் நூற்றாண்டு காலத்தில் விதவைகள் சங்கம் என ஒரு சங்கம் இருந்தது. அதில் பந்திவிசாரணை செய்கிறதுதான் அவர்கள் முதல் வேலை, அதன்பின் ஊழியத்தில் உதவிசெய்து ஆராதனைகளும் நடத்தலாம். இவர்கள் ஞானஸ்நானம் கொடுக்க கர்த்தரால் ஏற்படுத்தப்பட்டவர்கள் அல்ல. ஆனால் இக்காலத்தில் குடும்ப வாழ்க்கையோடு காணப்படுகிற இவர்கள் ஞானஸ்நானத்தைக் கொடுத்துக் கொண்டு, தாங்கள் செய்கிறது சரியானது தான் என்று சொல்லி வசனத்தைப் புரட்டிப் பேசிக்கொண்டு இருக்கிறார்கள்.

## 7

## ஞானஸ்நானம் எத்தனை உண்டு?

*ஒரே கர்த்தரும், ஒரே விசுவாசமும், ஒரே ஞானஸ்நானமும்,*
*எபேசியர் 4 : 5*

ஞானஸ்நானம் ஒன்று தான் உண்டு.

> *அப்பொல்லோ என்பவன் கொரிந்து பட்டணத்திலே இருக்கையில், பவுல் மேடான தேசங்கள் வழியாய்ப் போய், எபேசுவுக்கு வந்தான்; அங்கே சில சீஷரைக் கண்டு; நீங்கள் விசுவாசிகளானபோது, பரிசுத்தஆவியைப் பெற்றீர்களா என்று கேட்டான். அதற்கு அவர்கள்: பரிசுத்தஆவி உண்டென்பதை நாங்கள் கேள்விப்படவே இல்லை என்றார்கள். அப்பொழுது அவன்: அப்படியானால் நீங்கள் எந்த ஞானஸ்நானம் பெற்றீர்கள் என்றான். அதற்கு அவர்கள்: யோவான் கொடுத்த ஞானஸ்நானம் பெற்றோம் என்றார்கள். அப்பொழுது பவுல்: யோவான் தனக்குப்பின் வருகிறவராகிய கிறிஸ்து இயேசுவில் விசுவாசிகளாயிருக்கவேண்டும் என்று ஜனங்களுக்குச் சொல்லி, மனந்திரும்புதலுக்கு ஏற்ற ஞானஸ்நானத்தைக் கொடுத்தானே என்றான். அதைக் கேட்டபோது அவர்கள் கர்த்தராகிய இயேசுவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றார்கள்.*

*அப்போஸ்தலர் 19 : 1- 5*

அக்காலத்தில் யோவான்ஸ்நானனுடைய சீஷர் என்று சொல்லிக் கொண்டு, மனம்போல் மீறி நடந்த அநேகர் ஞானஸ்நானம் கொடுத்துக் கொண்டே நடந்தார்கள். அவ்விதமான ஜனங்களிடமிருந்து ஞானஸ்நானம் பெற்றுக்கொண்ட ஜனங்கள், கர்த்தருடைய தாசனாகிய பவுல் ஞானஸ்நானத்தைக் குறித்துப் பிரசங்கித்தபோது அதைக் கேட்டு, தாங்கள் பெற்றுக்கொண்டது ஞானஸ்நானமல்ல என்று

அறிந்ததினாலே ஞானஸ்நானம் பெற்றார்கள். ஆகவே, யாரிடத்திலிருந் தாவது பெற்றுக்கொள்வது ஞானஸ்நானம் ஆகாது. இங்கு அறிவிக்கப் பட்டிருக்கிற சகல வசனங்களையும் அறிவித்து, இவைகளின்படியான அநுபவத்தைச் சொந்தமாக்கிக்கொண்டவர்களும், எவ்விதமான அநுபவமுடைய ஊழியக்காரனிடத்திலிருந்து பெற்றுக்கொள்ளவேண்டு மென்று அறிந்து, அதன்படி பெற்றுக்கொள்வதுமே ஞானஸ்நானம் ஆகும்.

ஆனால் அநேகர் ஞானஸ்நானம் என்றால் என்ன என்று அறியாதிருக்கிறார்கள். கர்த்தராலே கட்டளை பெற்ற ஊழியக்காரர்கள், கர்த்தருடைய கட்டளையின்படியும், பிரமாணத்தின்படியும் ஜீவிக்கிற வர்கள், கர்த்தராலே வழிநடத்தப்படும் ஊழியக்காரர்கள், கர்த்தருடைய சித்தம் என்ன என்று அறிந்து, அதையே செய்துகொண்டு, கர்த்தராகிய இயேசுகிறிஸ்து உலகத்திலே ஊழியஞ்செய்த மாதிரியைக் கடைபிடித்து, தன் ஜீவனை வெறுத்து முழுதியாகியாகக் காணப்பட்டு, கிறிஸ்துவின் அடிச்சுவடை தொடர்ந்துபோய்க் கொண்டு காணப்படுகிற ஊழியக்காரனே, கர்த்தராலே ஞானஸ்நானம் கொடுக்கக் கட்டளை பெற்ற ஊழியக்காரன். அவ்விதமான ஊழியக்காரனிடமிருந்து பெற்றுக்கொள்வதே ஞானஸ்நானம் ஆகும்.

# 8

# ஞானஸ்நானம் எந்த அனுபவத்தை உடையவர்கள் பெற்றுக்கொள்ள வேண்டும்?

### *1. மனந்திரும்பி, பாவமன்னிப்பையும், இரட்சிப்பையும் அடைந்து கொண்டவன் ஞானஸ்நானம் பெறத் தகுதியானவன்*

> *பேதுரு அவர்களை நோக்கி: நீங்கள் மனந்திரும்பி, ஒவ்வொருவரும் பாவமன்னிப்புக்கென்று இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுங்கள், அப்பொழுது பரிசுத்தஆவியின் வரத்தைப் பெறுவீர்கள்.*
>
> *அப்போஸ்தலர் 2 : 38*

மனந்திரும்பி, பாவமன்னிப்பை சொந்தமாக்கிக் கொண்டவர்கள் ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளத் தகுதியானவர்கள்.

> *அவர் ஸ்திரீயை நோக்கி: உன் விசுவாசம் உன்னை இரட்சித்தது, சமாதானத்தோடே போ என்றார்.*
>
> *லூக்கா 7 : 50*

இரட்சிக்கப்பட்ட அனுபவத்தை உடையவர்கள் ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளத் தகுதியானவர்கள்.

> *அவராலேயன்றி வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை; நாம் இரட்சிக்கப்படும்படிக்கு வானத்தின் கீழெங்கும், மனுஷர்களுக் குள்ளே அவருடைய நாமமேயல்லாமல் வேறொரு நாமம் கட்டளையிடப்படவும் இல்லை என்றான்.*
>
> *அப்போஸ்தலர் 4 : 12*

பாவமன்னிப்பு, இரட்சிப்பு என்று சொல்லும்போது அவனுடைய ஜீவியத்தில் இருக்கிற பாவங்கள் எல்லாம் அகற்றப்பட்டுப்போனது அவன் முகத்தில் பார்த்தாலே தெரியும். பூரணமான பாவம் அற்ற

நிலைமையோடு காணப்படுவது அவன் ஜீவியத்திலும் தெரியும்; அதை மற்றவர்களும் காண்பார்கள்.

### 2. பாவத்திற்கு மரித்தவர்கள் ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளத் தகுதியானவர்கள்

*பாவத்துக்கு மரித்த நாம் இனி அதிலே எப்படிப் பிழைப்போம்?*
*ரோமர் 6 : 2*

*நாம் பாவங்களுக்குச் செத்து, நீதிக்குப் பிழைத்திருக்கும்படிக்கு, அவர் தாமே தமது சரீரத்திலே நம்முடைய பாவங்களைச் சிலுவையின்மேல் சுமந்தார்; அவருடைய தழும்புகளால் குணமானீர்கள்.*

*I பேதுரு 2 : 24*

ஞானஸ்நானம் பெற பாவத்துக்கு மரித்து நீதிக்குப் பிழைக்கிற அனுபவத்தோடு காணப்படவேண்டும்.

### 3. உலகத்தின் வழிபாடுகளுக்கு மரித்தவர்கள் ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளத் தகுதியானவர்கள்

*நீங்கள் கிறிஸ்துவுடனேகூட உலகத்தின் வழிபாடுகளுக்கு மரித்ததுண்டானால், இன்னும் உலக வழக்கத்தின்படி பிழைக்கிற வர்கள்போல,*

*கொலோசெயர் 2 : 20*

உலகத்தின் வழிபாடுகள் அநேகம் இருக்கிறது. இரட்சிக்கப்பட்டு ஆவிக்குரியவர்கள் என்று சொல்லுகிறதான அநேகர் நாள் பார்க்கிறார்கள், குறி கேட்கிறார்கள், சகுனம், எதிர்ப்பு, நச்செலி சாஸ்திரம், பல்லி சாஸ்திரம், ஜோசியம் ஆகியவை பார்க்கிறார்கள். ராகுகாலம் பார்க்கிறார்கள். இப்படிப்பட்ட அசுத்தக் கிரியைகளுக்கு உட்பட்டு, அஞ்ஞானிகளாக உலகத்தோடு ஒட்டிக்கொண்டு இருக்கிற வர்கள் உண்டு. இவர்களும் நாங்கள் இரட்சிக்கப்பட்டிருக்கிறோம் என்று சொல்லுகிறார்கள். ஒருவன் இரட்சிக்கப்பட்ட அனுபவத்தோடு இருக்கிறான் என்றால், அவன் கிறிஸ்துவோடுகூட உலக வழிபாடு களுக்கு மரித்தவனாக இருக்கவேண்டும். பாரம்பரிய கொள்கைகளை விட்டு விலகினவர்களாகக் காணப்படவேண்டும்.

## 4. மனுஷருடைய கற்பனைகள், போதனைகளை விட்டு விலகினவர்கள் ஞானஸ்நானம் பெறத் தகுதியானவர்கள்

*மனுஷருடைய கற்பனைகளின்படியும் போதனைகளின்படியும் நடந்து: தொடாதே, ருசிபாராதே, தீண்டாதே என்கிற கட்டளைகளுக்கு உட்படுகிறதென்ன?*

*கொலோசெயர் 2 : 21*

மனுஷருடைய கற்பனைகள், பிரமாணங்களை விட்டு நீங்கி, கர்த்தருடைய கட்டளைகளுக்கும், பிரமாணங்களுக்கும் பூரணமாகக் கீழ்ப்படிகிறவர்கள் ஞானஸ்நானம் பெற வேண்டும், மற்றவர்கள் பெறக் கூடாது.

*நீங்கள் தேவனுடைய கட்டளையைத் தள்ளிவிட்டு, மனுஷருடைய பாரம்பரியத்தைக் கைக்கொண்டுவருகிற வர்களாய், கிண்ணங்களையும் செம்புகளையும் கழுவுகிறீர்கள்; மற்றும் இப்படிப்பட்ட அநேக சடங்குகளையும் அனுசரித்து வருகிறீர்கள் என்றார்.*

*மாற்கு 7 : 8*

மனுஷரால் உண்டாக்கப்பட்ட பாரம்பரிய கொள்கைகளை நிலைநாட்டிக்கொண்டு, தேவவசனத்தை அவமாக்கி, தேவ கட்டளையை வியர்த்தமாக்கிக் கொண்டு பாரம்பரியத்தைப் போதித்து நடத்துகிற வர்கள் உலகத்திலே இருந்துகொண்டே இருக்கிறார்கள். அவ்விதமான நிலைமையிலிருந்து நீங்கினவர்களாய் காணப்படுகிறவர்கள் ஞானஸ்நானம் பெறவேண்டும்.

*பின்னும் அவர் அவர்களை நோக்கி: நீங்கள் உங்கள் பாரம்பரியத்தைக் கைக்கொள்ளும்படிக்குத் தேவனுடைய கட்டளைகளை வியர்த்தமாக்கினது நன்றாயிருக்கிறது. நீங்கள் போதித்த உங்கள் பாரம்பரியத்தினால் தேவவசனத்தை அவமாக்குகிறீர்கள். இதுபோலவே நீங்கள் மற்றும் அநேகக் காரியங்களையும் செய்கிறீர்கள் என்று சொன்னார்.*

*மாற்கு 7 : 9, 13*

ஞானஸ்நானம் பெற்றுக்கொள்கிறவர்கள் இந்த உலகத்தின் சடங்காச்சாரங்களுக்கும், கொள்கைகளுக்கும் மரித்தவர்களாய் இருக்கவேண்டும். பரிசுத்த வேதாகமத்தில் புருஷன் மனைவி எப்படி காணப்படவேண்டும் என்றதான காரியங்கள் தெளிவாகச் சொல்லப்பட்டுள்ளது.

*இப்படி இருக்கிறபடியினால், அவர்கள் இருவராயிராமல், ஒரே மாம்சமாயிருக்கிறார்கள்; ஆகையால், தேவன் இணைத்ததை மனுஷன் பிரிக்காதிருக்கக்கடவன் என்றார்.*

*மத்தேயு 19 : 6*

*அப்பொழுது அவர்: எவனாகிலும் தன் மனைவியைத் தள்ளிவிட்டு, வேறொருத்தியை விவாகம்பண்ணினால், அவன் அவளுக்கு விரோதமாய் விபசாரஞ்செய்கிறவனாயிருப்பான். மனைவியும் தன் புருஷனைத் தள்ளிவிட்டு, வேறொருவனை விவாகம்பண்ணினால், விபசாரஞ்செய்கிறவளாயிருப்பாள் என்றார்.*

*மாற்கு 10 : 11, 12*

*விவாகம்பண்ணிக்கொண்டவர்களுக்கு நானல்ல, கர்த்தரே கட்டளையிடுகிறதாவது: மனைவியானவள் தன் புருஷனை விட்டுப் பிரிந்துபோகக்கூடாது. பிரிந்துபோனால் அவள் விவாகமில்லாதிருக்கக்கடவள், அல்லது புருஷனோடே ஒப்புரவாகக்கடவள்; புருஷனும் தன் மனைவியைத் தள்ளிவிடக்கூடாது. மனைவியானவள் தன் புருஷன் உயிரோடிருக்குங்காலமளவும் பிரமாணத்தினால் கட்டப் பட்டிருக்கிறாள்; தன் புருஷன் மரித்தபின்பு தனக்கு இஷ்டமானவனாயும் கர்த்தருக்குட்பட்டவனாயுமிருக்கிற எவனையாகிலும் விவாகம்பண்ணிக்கொள்ள விடுதலையா யிருக்கிறாள்.*

*I கொரிந்தியர் 7 : 10, 11, 39*

மனைவியானவள் தேவனுடைய பிரமாணத்தால் புருஷனோடு கட்டப்பட்டிருக்கிறாள்; இந்த பந்தம் மிகவும் முக்கியமானது. இதற்கு மாறாக திருமணச் சங்கிலி அல்லது ஒரு நூல் இவைகள் மூலமாக

எடுத்துக்காட்டுவார்கள். இவ்விதமான கலாச்சார திட்டங்களெல்லாம் கர்த்தருடைய வேதபுஸ்தகத்தில் இல்லை. ஆதியில் ஏதேனில் தேவன்தான் ஆதாம் ஏவாள் என்பவர்களின் திருமணத்தை ஏற்படுத்தி வைத்தார். ஏதேன் தோட்டத்தில் பொன் வெள்ளி எல்லாம் ஏராளம் உண்டு; என்றாலும் தேவன் ஆதாமிடம் அடையாளமாக எதையாவது கட்டச் சொல்லவில்லை. இதெல்லாம் தேவனுடைய ஜனங்களுக்கு அடாதது. உலகத்தார் இதுபோன்ற அநேக பாரம்பரிய கொள்கைகளை உண்டுபண்ணி வைத்துக்கொண்டு போதனைபண்ணுகிறார்கள்; அவர்கள் அநேக சடங்குகளையும் அநுசரிக்கிறார்கள். தேவனுடைய கட்டளைகளையோ வியர்த்தமாக்கி, பயனற்றதாகத் தள்ளிவிட்டார்கள். இவர்களுக்குக் கர்த்தருடைய கட்டளை, பிரமாணம், சட்டம், உபதேசம் இவைகளில் விசுவாசமே கிடையாது. கர்த்தருடைய கட்டளைகளை புறக்கணிக்கிறது கர்த்தரையே புறக்கணிக்கிறது ஆகும் என்று வேதம் சொல்லுகிறது. அநேக சடங்குகள், கொள்கைகளை உண்டுபண்ணி வைத்து பைபிளில் கையும் வைத்துக்கொண்டு பலவிதமான சுய அறிவினாலும், ஆராய்ச்சியினாலும், இதுவும் தேவ ஆராதனை தான், இதுவும் தேவனுடைய சபை தான் என்று வீணாகப் பேசிக்கொண்டு இருக்கிறார்கள். இவ்விதமான சபைகளை விட்டும், பாரம்பரிய கொள்கையான உபதேசங்களை விட்டும், சத்தியத்திற்கு மாறான சகல கொள்கைகளை விட்டும் சரியானபடி வேறுபட்டவர்கள் ஞானஸ்நானம் பெறத் தகுதியானவர்கள்.

### 5. *வீணான ஆராதனைகளை விட்டு வேறுபட்டவர்கள் ஞானஸ்நானம் பெறத் தகுதியானவர்கள்*

> *மனுஷருடைய கற்பனைகளை உபதேசங்களாகப் போதித்து, வீணாய் எனக்கு ஆராதனை செய்கிறார்கள் என்று, ஏசாயா தீர்க்கதரிசி நன்றாய்ச் சொல்லியிருக்கிறான் என்றார்.*
>
> *மத்தேயு 15 : 9*

வீணான ஆராதனை என்றால், அந்த ஆராதனையின் மூலம் என்றைக்காவது அவர்களுக்கு பாவத்தைக் குறித்ததான உணர்வோ, பாவமன்னிப்புக்கு ஏதுவான ஒரு நிலைமையோ, ஆவிக்குரிய அனுபவத்திற்கேற்ற எதுவும் உண்டாகிறதில்லை. எல்லாமே மாம்ச

சம்பந்தமானது. மாம்சத்தைப் பேணுவதற்கேதுவானது. மாம்சப் பிரகாரமாக குடித்து வெறித்து, அடுத்தவர்கள் பொருளை இச்சித்து இவைகளை நடப்பித்துக்கொண்டு, பாவம் போக எந்த இடமுமில்லாத படி மாம்சத்தைப் பேணுகிறதற்கேற்ற ஆராதனைகள்.

> *இப்படிப்பட்ட போதனைகள் சுய இஷ்டமான ஆராதனையையும், மாயமான தாழ்மையையும், சரீர ஒடுக்கத்தையும் பற்றி ஞானமென்கிற பேர்கொண்டிருந்தாலும், இவைகள் மாம்சத்தைப் பேணுகிறதற்கே ஒழிய மற்றொன்றிற்கும் பிரயோஜனப்படாது.*
>
> *கொலோசெயர் 2 : 23*

இவ்விதமான வீணான ஆராதனைகளை விட்டு வேறுபட்டவர்களாய் இருக்கவேண்டும்.

### 6. மாறுபாடான சந்ததியை விட்டு விலகினவர்கள் ஞானஸ்நானம் பெறத் தகுதியானவர்கள்

> *இன்னும் அநேக வார்த்தைகளாலும் சாட்சிகூறி, மாறுபாடுள்ள இந்தச் சந்ததியை விட்டு விலகி உங்களை இரட்சித்துக் கொள்ளுங்கள் என்றும் புத்திசொன்னான். அவனுடைய வார்த்தையைச் சந்தோஷமாய் ஏற்றுக்கொண்டவர்கள் ஞானஸ்நானம் பெற்றார்கள். அன்றையதினம் ஏறக்குறைய மூவாயிரம்பேர் சேர்த்துக்கொள்ளப்பட்டார்கள்.*
>
> *அப்போஸ்தலர் 2 : 40, 41*

மாறுபாடான சந்ததியை விட்டு விலகவேண்டும்; இவ்விதமான அனுபவத்தோடு காணப்படுகிறவர்கள் தான் ஞானஸ்நானம் பெற தகுதியானவர்கள். இவர்கள்தான் தாங்கள் பெற்றுக்கொண்ட இரட்சிப்பைக் காத்துக்கொள்வார்கள். மற்றவர்கள் மறுபடியும் கெட்டுப்போவார்கள். மாறுபாடானவர்கள் என்றால் வேறுவிதமாய் ஜீவிக்கிறவர்கள்; கர்த்தருடைய கட்டளைகள், பிரமாணங்கள், சட்டங்கள் இவைகளை விட்டு வேறுவிதமாய் ஜீவிக்கிறவர்கள். கர்த்தராலே வரும் மனந்திரும்புதல், பாவமன்னிப்பு, இரட்சிப்பு, ஆவிக்குரிய அனுபவங்கள் இவைகளை விட்டு வேறுபட்ட அனுபவத்தோடு

உலகத்திலே காணப்படுகிறவர்கள். இப்படிப்பட்டவர்களையும் இவ்விதமான ஆராதனையையும் விட்டு வேறுபட்டவர்கள், ஞானஸ்நானம் பெற தகுதியானவர்கள்.

### *7. உலகத்திற்கொத்த வேஷம் தரியாதவர்கள் ஞானஸ்நானம் பெற தகுதியானவர்கள்*

> *நீங்கள் இந்தப் பிரபஞ்சத்திற்கு ஒத்த வேஷந்தரியாமல், தேவனுடைய நன்மையும் பிரியமும் பரிபூரணமுமான சித்தம் இன்னதென்று பகுத்தறியத்தக்கதாக, உங்கள் மனம் புதிதாகிறதினாலே மறுரூபமாகுங்கள்.*
>
> *ரோமர் 12 : 2*

இப்பிரபஞ்சத்தின் வேஷத்தை விட்டு விலகினவர்களாக இருக்க வேண்டும். ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுகிறவர்கள் இப்பிரபஞ்சத்தின் வேஷமாகிய இந்த உலக வேஷத்தை ஒழித்து, மனம் புதிதாகி மறுரூபமான அனுபவத்தோடு காணப்படவேண்டும். முதல் ரூபம் நகை, நட்டு எல்லாம் போட்டுக்கொண்டு அவ்விதமான அலங்கரிப்போடு அசுத்தமான ரூபத்தோடு காணப்பட்ட இவர்கள், அந்த ரூபத்தை எல்லாம் மாற்றி மறுரூபமான அனுபவம், மனம் புதிதாகிறதினாலே மறுரூபம் ஆனவர்களாகக் காணப்படவேண்டும்.

> *பின்னும் கர்த்தர் சொல்லுகிறதாவது: சீயோன் குமாரத்திகள் அகந்தையாயிருந்து, கழுத்தை நெறித்து நடந்து, கண்களால் மருட்டிப் பார்த்து, ஒய்யாரமாய் நடந்து, தங்கள் கால்களில் சிலம்பு ஒலிக்கத் திரிகிறார்கள்.*
>
> *ஏசாயா 3 : 16*

தங்கள் நடை, வேஷம், பார்வை எல்லாம் தெய்வபக்திக்கு உரியதாகக் காணப்படவேண்டும். தெய்வபக்தியாக இருக்கிறோம் என்று சொல்லிக்கொண்டு அசுத்தமாக நடந்து, கழுத்தை ஸ்டைலாக வைத்து, கண்களால் சரித்துப் பார்த்து இப்படி நடக்கிறவர்கள் தேவனுடைய ஜனங்கள் அல்ல. இவ்விதமாக நடக்கிறவர்கள் தேவகோபத்தை வருவிக்கும் அனுபவத்தோடு காணப்படுகிறவர்கள்.

தங்களைக் குறித்த அகந்தையான எண்ணத்தோடு காணப்படுவது கூடாது; தன்னுடைய குடும்பத்தைப் பற்றியோ. சொத்தைப் பற்றியோ, படிப்பைப் பற்றியாவது, உத்தியோகத்தைப் பற்றியாவது மற்றும் உலகப்பிரகாரமான காரியத்தை எல்லாம் நினைத்து, அதைப் பெருமையாக நினைத்து அதிலே அகங்காரமான நிலைமையோடு காணப்படுகிற எண்ணம் இருக்கக் கூடாது, தாழ்மையோடு காணப்பட வேண்டும் என்பது.

அநேக இரட்சிக்கப்பட்ட ஜனங்கள் கழுத்தை நெறித்து நடக்கிறார்கள். பெண்கள்தான் அதிகமாக இப்படி நடப்பார்கள். இப்படிப்பட்டவர்கள் ஞானஸ்நானம் பெற தகுதியற்றவர்கள். ஏனென்றால் அவர்களுக்குள்ளே ஆவிக்குரிய அனுபவங்களோ, தெய்வ பக்தியோ கிடையாது. கண்களால் மருட்டிப் பார்க்கிறார்கள். இவர்களுக்குள்ளே பாவம் கிரியைசெய்து, மற்றவர்களை பாவத்திற்கு நேராக இழுக்கும் தன்மை. அவர்கள் இவர்களை விரும்ப வேண்டும்; அப்படிப்பட்ட மோசமான ஒரு இச்சையோடு கூட இதையெல்லாம் செய்கிறார்கள்; இதெல்லாம் பிசாசின் வேலை. தேவனுடைய ஜனங்கள் யோக்கியதையாக, நேர்மையாக, தேவ பக்தியுள்ளவர்கள் என்று மற்றவர்கள் காணத்தக்க அளவில் நேர்மையாக நடக்கவேண்டும். பெண்கள் ஒய்யாரமாய் நடக்கிறார்கள்; அநேகர் ஸ்டைலாக நடந்து நடந்து நொண்டிகளைப் போல மாறி இருக்கிறார்கள். ஒய்யாரமாய் நடக்கிறதை மற்றவர்கள் கண்டு மோசமான இச்சையோடு இவர்களை கவர்ச்சி பண்ணத்தக்க அளவிலே காணப்படுகிறார்கள். இவர்கள் தேவனுடைய ஜனங்கள் அல்ல; இவர்கள் ஞானஸ்நானம் பெற தகுதியுடையவர்களும் அல்ல.

பெரிய பணக்காரர்கள் விலையுயர்ந்த மாணிக்கம், முத்துகளை வைத்து சிலம்பு அணிந்திருப்பார்கள். இவர்கள் நடக்கும்போது ஒரு ஒலி வந்துகொண்டே இருக்கும். இக்காலத்திலே இது கிடையாது. இப்போது கொலுசு ஒன்று இருக்கிறது. அதைப் போட்டுக்கொண்டு நடக்கும்போது கிலுங்குகிறது. இப்படிப்பட்ட கிரியைகளினிமித்தம் பயங்கரமான தேவ கோபத்தை வருவிக்கிறார்கள். ஆகையினால் இப்படிப்பட்டவர்களின் தலையை கர்த்தர் மொட்டையாக்குவார்; இவர்கள் மானத்தைக் குலைப்பார். பொன் வெள்ளி இவைகளெல்லாம்

நாணயங்களாக உபயோகப்படுத்தும்படியாகக் கர்த்தர் கொடுத்தது. மனுஷர்கள் பாவஞ்செய்து கெட்டுப்போனபின்பு, அவைகளை ஆபரணங்களாக உண்டுபண்ணிக் கொண்டார்கள். இரும்பு வேலைக் காரன் ஆயுதங்களை உபயோகத்திற்காகச் செய்து கொடுக்கிறான்; அதைக்கொண்டு மனுஷனைக் கொலைசெய்வதுபோல இதையும் தீமைக்கேதுவாக மாற்றிவிட்டார்கள்.

> *ஆதலால் ஆண்டவர் சீயோன் குமாரத்திகளின் உச்சந் தலையை மொட்டையாக்குவார்; கர்த்தர் அவர்கள் மானத்தைக் குலைப்பார். அந்நாளிலே ஆண்டவர் அவர்களுடைய ஆபரணங்களாகிய சிலம்புகளையும், சுட்டிகளையும், பிறைச்சிந்தாக்குகளையும், ஆரங்களையும், அஸ்தகடகங்களை யும், தலைமுக்காடுகளையும், சிரபூஷணங்களையும், பாதசரங் களையும், மார்க்கச்சைகளையும், சுகந்த பரணிகளையும், தாயித்துகளையும், மோதிரங்களையும், மூக்குத்திகளையும், விநோத வஸ்திரங்களையும், சால்வைகளையும், போர்வை களையும், குப்பிகளையும், கண்ணாடிகளையும், சல்லாக்களை யும், குல்லாக்களையும், துப்பட்டாக்களையும் உரிந்து போடுவார்.*
>
> *ஏசாயா 3 : 17 - 23*

சுகந்தபரணி என்றால் பவுடர் போன்ற வாசனைத் திரவியங்களால் தங்களை அலங்கரிக்கும் பரணி.

இரட்சிக்கப்பட்டவர்கள் ஸ்டைல் பார்க்கிறது தேவனுக்கு விரோத மான பாவம். தங்களுக்குள்ளே பாவ இச்சை இருக்கிறதினாலே இப்படி பார்க்கிறார்கள். இவையெல்லாம் தேவபக்திக்கு உரியது அல்ல; தேவ கோபத்திற்கு ஏதுவானது. மீசை, கிருதா, கண்ணாடி பார்த்து முகத்தைச் சிங்காரிக்கிறது. அப்படிப்பட்ட கண்ணாடிகளையும், சல்லாக்களையும், குப்பிகளையும் கர்த்தர் நொறுக்கிப்போடுவார்.

> *அப்பொழுது, சுகந்தத்துக்குப் பதிலாகத் துர்க்கந்தமும், கச்சைக்குப் பதிலாகக் கயிறும், மயிர்ச்சுருளுக்குப் பதிலாக*

*மொட்டையும், ஆடம்பரமான வஸ்திரங்களுக்குப் பதிலாக இரட்டுக்கச்சும், அழகுக்குப் பதிலாகக் கருகிப்போகுதலும் இருக்கும்.*

*ஏசாயா 3 : 24*

இந்த நிலையிலே சரீரத்தை அலங்கரித்தால் பின்பு நாற்றமாகிப் போகும். தலைமுடியை சுருள் ஆக்குவது, அழகு பார்த்து, ஸ்டைல் பார்த்து வைப்பது, இப்படிப்பட்டவர்கள் எல்லாரும் ஞானஸ்நானம் பெறத் தகுதியானவர்கள் அல்ல. தேவசித்தத்திற்கு மாறாக தேவகோபத்திற்கேதுவாக யார் யார் என்னென்ன அலங்காரத்தோடு காணப்படுகிறார்களோ அதற்குப் பதிலாகக் கிடைப்பது பயங்கரமான தேவகோபம்தான். தங்கள் சரீர ரூபத்தைக் குறித்து பெரிதாக எண்ணிக் கொள்ளுகிறவர்கள் யாருமே ஞானஸ்நானம் பெற தகுதியில்லாதவர்கள். இவையெல்லாம் விக்கிரக ஆராதனையைச் சேர்ந்தது. இவ்விதமான விக்கிரக ஆராதனையோடு காணப்படுகிறவர்கள் ஞானஸ்நானம் பெற தகுதியானவர்கள் அல்ல. தேவனுடைய ஜனங்களுக்கு இவையெல்லாம் இருக்கக்கூடாது. தேவனுக்கு ஏற்ற நடை, தேவனுக்கேற்ற பார்வை, தெய்வ பக்திக்கு ஏற்ற வேஷம், தெய்வ பக்திக்கு ஏற்ற போக்கு, தெய்வபக்திக்கு ஏற்ற ஜீவியம், அதாவது தன்னை ஒரு பொருட்டென்று நினைக்காதபடி தங்களைத் தாழ்த்தி வெறுமையாக்கிக் கொண்டு, தேவனுடைய பார்வையிலே தேவனுக்குப் பிரியமானதை மாத்திரம் செய்து, தேவன் மாத்திரம் தன்னைக் குறித்து பிரியப்படத்தக்க அளவிலே நடந்து கொள்ளவேண்டும். தேவனுக்குப் பிரியமில்லாத கிரியைகளை விட்டுச் சரியானபடி நீங்கி, பூரணமான மாற்றம் உடையவர்களாக ஞானஸ்நானம் பெறுகிறவர்கள் காணப்படவேண்டும்.

*ஆனாலும், வழியிலே நான் உங்களை நிர்மூலம்பண்ணாதபடிக்கு, நான் உங்கள் நடுவே செல்லமாட்டேன், நீங்கள் வணங்காக்கழுத்துள்ள ஜனங்கள் என்றார். துக்கமான இவ்வார்த்தைகளை ஜனங்கள் கேட்டபோது, ஒருவரும் தங்கள் ஆபரணங்களைப் போட்டுக்கொள்ளாமல் துக்கித்துக் கொண்டிருந்தார்கள். ஏனென்றால், நீங்கள் வணங்காக் கழுத்துள்ள ஜனங்கள், நான் ஒரு நிமிஷத்தில் உங்கள் நடுவில்*

*எழும்பி, உங்களை நிர்மூலம்பண்ணுவேன்; ஆகையால், நீங்கள் போட்டிருக்கிற உங்கள் ஆபரணங்களைக் கழற்றிப்போடுங்கள்; அப்பொழுது நான் உங்களுக்குச் செய்யவேண்டியதை அறிவேன் என்று இஸ்ரவேல் புத்திரருக்குச் சொல் என்று கர்த்தர் மோசேயோடே சொல்லியிருந்தார். ஆகையால், இஸ்ரவேல் புத்திரர் ஓரேப் மலையருகே தங்கள் ஆபரணங்களைக் கழற்றிப்போட்டார்கள்.*

*யாத்திராகமம் 33 : 3 - 6*

இஸ்ரவேல் ஜனங்கள் தேவனால் வாக்குத்தத்தம்பண்ணப்பட்ட கானானுக்கு நேராக தேவனாலே வழிநடத்தப்பட்டு, அந்த நாட்டிற்கு நேராக வந்து கொண்டிருந்தார்கள். கடைசியாக, தேவ கோபத்திற்கு ஏதுவான அலங்கரிப்பு அவர்களிடம் இருந்ததினால் கர்த்தர் சொன்னது:

*கர்த்தர் மோசேயை நோக்கி: நீயும், எகிப்து தேசத்திலிருந்து நீ அழைத்துக் கொண்டுவந்த ஜனங்களும் இவ்விடத்தை விட்டுப் புறப்பட்டு, உன் சந்ததிக்குக் கொடுப்பேன் என்று நான் ஆபிரகாமுக்கும் ஈசாக்குக்கும் யாக்கோபுக்கும் ஆணையிட்டுக் கொடுத்த பாலும் தேனும் ஓடுகிற தேசத்துக்குப் போங்கள். நான் ஒரு தூதனை உங்களுக்கு முன்பாக அனுப்பி, கானானியனை யும் எமோரியனையும் ஏத்தியனையும் பெரிசியனையும் ஏவியனையும் எபூசியனையும் துரத்திவிடுவேன். ஆனாலும், வழியிலே நான் உங்களை நிர்மூலம்பண்ணாதபடிக்கு, நான் உங்கள் நடுவே செல்லமாட்டேன், நீங்கள் வணங்காக் கழுத்துள்ள ஜனங்கள் என்றார்.*

*யாத்திராகமம் 33 : 1- 3*

நகை நட்டுகளினால் அலங்கரித்துக்கொண்டு காணப்படுகிற ஜனங்கள் தேவனுடைய பார்வையிலே வணங்காக்கழுத்துள்ள ஜனங்கள். இது எவ்வளவு பயங்கரமான தேவ கோபத்திற்கேற்ற காரியம் என்று ஜனங்கள் உணர்ந்து கொள்ளாதிருக்கிறார்கள். தேவனுடைய வசனத்தைக் குறித்து நம்பிக்கை இல்லை.

யாத்திராகமம் 11 : 2, 3; யாத்திராகமம் 12 : 35,36-ல் சொல்லப் பட்டிருக்கிறது என்னவென்றால், இஸ்ரவேல் ஜனங்கள் எகிப்திலிருந்து

புறப்படும்போது கர்த்தர் மோசேயிடம்: அவனவன் தன்தன் அயலானிடம் வெள்ளியுடைமைகளையும்,பொன்னுடைமைகளையும், வஸ்திரங் களையும் எல்லாம் கேட்டு வாங்கச் சொல்லு என்று சொன்னார். காரணம் என்னவென்றால், இஸ்ரவேல் ஜனங்கள் அங்கு செய்த வேலைக்குரிய கூலியைக் கொடுக்காமல், எகிப்தியர் மிகவும் கஷ்டப்படுத்தினார்கள். அதனால் இவைகளைக் கர்த்தர் வாங்கச் சொன்னது மட்டுமல்லாமல், ஜனங்களுடைய கண்களில் கிருபை கிடைக்கவும் செய்தார். கர்த்தர் கிரியை செய்ததினாலே இவர்கள் கேட்டவைகளையெல்லாம் கொடுத்தார்கள். இவர்கள் இதுதான் நல்ல காரியம் என்று சொல்லி, ஆண்கள் வாங்கினதை ஆண்கள் போட்டார்கள், பெண்கள் வாங்கினதை பெண்கள் போட்டார்கள். எல்லாவற்றையும் போட்டு அலங்கரித்துக்கொண்டு நடந்து வந்துகொண்டிருந்தார்கள். இவர்கள் தேவனுடைய கிரியைகளையும், தேவனுடைய வழிநடத்துதலையும் கண்டும், பின்னும் பின்னும் அலங்கரித்துக்கொண்டு நடந்ததால், ஆபரணங்களை கழற்றினால் தான் நான் உங்களை வழிநடத்துவேன்; இல்லாவிட்டால் நான் உங்களை நிர்மூலம்பண்ணுவேன். ஒரு நிமிஷத்திலே நான் எழும்பி உங்களை அழித்துப்போடுவேன் என்று கர்த்தர் சொன்னார். ஆகவே நகை நட்டுகளால் தங்களை அலங்கரிப்பது எவ்வளவு தேவகோபத்திற்கு ஏதுவான காரியம் என்பதைக் குறித்து ஜனங்கள் அறிந்துகொள்ள வேண்டும்; தேவனுடைய ஜனங்கள் இவைகளை விட்டு விலகின வர்களாக இருக்கவேண்டும்.

சரியான இரட்சிப்பு ஒரு மனுஷனுக்குள்ளே வரும்போது இருதயத்தில் தானாகவே ஒரு வெறுப்பு உண்டாகும்; அது தான் அனுபவம். அடுத்தவர்கள் காதுகளில் இருப்பதைப் பார்த்து இச்சையோடு நன்றாய் இருக்கிறதே என்று எண்ணி எண்ணி இருப்பதல்ல மாற்றுகிறது. மனம் புதிதாகி, யார் பூரணமான இரட்சிப்பின் அனுபவத்திற்குள் வந்திருக்கிறார்களோ அவர்களுக்குத் தேவனுக்குப் பிரியமில்லாத காரியங்களிலும், சத்தியத்திற்கு மாறான காரியங்களிலும் தானாகவே வெறுப்பு வரும்; அதுதான் இரட்சிப்பு. இஸ்ரவேல் ஜனங்கள் வெளியே உள்ள விக்கிரகத்தை மாற்றியிருக்கிறார்கள். இந்த அருவருப்பான விக்கிரகம் உள்ளத்திலே நாட்டப்பட்டிருக்கிறது என்று

எசேக்கியேல் தீர்க்கதரிசியைக் கொண்டு கர்த்தர் பேசியிருக்கிறார். வெளியரங்கமாக மாற்றிக்கொண்டு, இருதயத்தின் உள்ளே நகையின்மேல் ஆசையும் வைத்துக்கொண்டு இருப்பார்களானால் பிரயோஜனமில்லை. உள்ளத்திலே வைத்து வெளியிலே மாற்றி பிரயோஜனம் இல்லை. அந்த அநுபவத்தோடு பெற்றுக்கொள்வது ஞானஸ்நானமுமல்ல. நகைநட்டுகளில் வெறுப்புடையவர்கள் தான் கழற்றலாம்; மற்றவர்கள் கழற்றக்கூடாது.

*உன் சுரூபங்களை மூடிய வெள்ளித்தகட்டையும், உன் விக்கிரகங்களின் பொன் ஆடையாபரணத்தையும் தீட்டாக எண்ணி, அவைகளைத் தீட்டுப்பட்ட வஸ்திரம்போல எறிந்து விட்டு, அதைச் சீ! போ என்பாய்.*

*ஏசாயா 30 : 22*

அவ்வளவு அருவருப்பானது என்று கர்த்தர் சொல்லுகிறார். சொரூபம் - ரூபம், விக்கிரகத்திற்கு சரீரம் என்றும் அர்த்தம் இருக்கிறது. இந்த உடம்பை உயிரற்ற ஒரு உலோகத்தைப் போல மாற்றி வைத்திருக்கிறார்கள். அலங்கரிப்பினாலே தங்களை ஒரு சொரூபமாக்கி, விக்கிரகமாக்கி, சொரூபம் போல விக்கிரகம்போல அலங்கரித்து வைத்துக்கொண்டு நானும் தேவனுடைய பிள்ளை என்று சொல்லுகிறார்கள். அசுத்தமான, அருவருப்பான, தீட்டுப்பட்ட வஸ்திரம் போல அருவருத்து, எறியவேண்டிய பொருள்களினாலே தங்களை அலங்கரித்து வைத்துக்கொண்டிருக்கிறார்கள். இது பயங்கரமான தேவகோபத்திற்கேற்ற காரியம் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

அநேகர் இரட்சிக்கப்பட்டு இருப்பார்கள், பரிசுத்த ஆவியின் அபிஷேகம் பெற்றிருப்பார்கள். அதே சமயத்தில் தங்களை ஒரு சொரூபம்போல அலங்கரித்துக் கொண்டிருப்பார்கள். இவர்கள் என் தேவனே என்று கூப்பிட்டால் இவர்களை மகனே, மகளே என்று கர்த்தர் சொல்லுவாரா? இவர்கள் அசுத்தமான, அலங்கரிப்போடு காணப்பட்டுக் கொண்டிருக்கிற காலம் வரையிலும் மகனே என்று கர்த்தரால் சொல்ல முடியுமா? முடியாது.

*அவள் பாகால்களுக்குத் தூபங்காட்டி, தன் நெற்றிப்பட்டங் களினாலும் தன் ஆபரணங்களினாலும் தன்னைச்*

*சிங்காரித்துக்கொண்டு, தன் நேசரைப் பின்தொடர்ந்து, என்னை மறந்துபோன நாட்களினிமித்தம் அவளை விசாரிப்பேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்.*

*ஓசியா 2 : 13*

இவ்விதமாய் நகை நட்டுகளினால் அலங்கரித்துக்கொண்டு காணப்படுகிறவர்கள் பிசாசையே பின்பற்றி, பிசாசையே பிரியப்படுத்திக் கொண்டு தேவனை மறந்து உலகத்திலே கிரியை செய்கிறவர்கள். இது நியாயத்தீர்ப்புக்கேதுவான காரியமுமாகும்.

*புருஷரின் உடைகளை ஸ்திரீகள் தரிக்கலாகாது, ஸ்திரீகளின் உடைகளைப் புருஷர் தரிக்கலாகாது; அப்படிச் செய்கிறவர்கள் எல்லாரும் உன் தேவனாகிய கர்த்தருக்கு அருவருப்பான வர்கள்.*

*உபாகமம் 22 : 5*

ஸ்திரீகள் எப்படிப்பட்ட அலங்காரத்தோடு காணப்படவேண்டுமென்றால்,

*ஸ்திரீகளும் மயிரைப் பின்னுதலினாலாவது, பொன்னினா லாவது, முத்துக்களினாலாவது, விலையேறப்பெற்ற வஸ்திரத் தினாலாவது தங்களை அலங்கரியாமல், தகுதியான வஸ்திரத்தி னாலும், நாணத்தினாலும், தெளிந்த புத்தியினாலும், தேவபக்தியுள்ளவர்களென்று சொல்லிக்கொள்ளுகிற ஸ்திரீகளுக்கு ஏற்றபடியே நற்கிரியைகளினாலும் தங்களை அலங்கரிக்கவேண்டும்.*

*I தீமோத்தேயு 2 : 9, 10*

ஸ்திரீகள் தலைமுடியைப் பின்னக்கூடாது. இப்போது தலைமுடியைப் பலவிதமாக ஸ்டைல் பண்ணுகிறார்கள். இப்படிப்பட்டவைகள் ஒன்றும் தேவனுடைய ஜனங்களுக்குக்கூடாது.

*மயிரைப் பின்னி, பொன்னாபரணங்களை அணிந்து, உயர்ந்த வஸ்திரங்களை உடுத்திக்கொள்ளுதலாகிய புறம்பான அலங்கரிப்பு உங்களுக்கு அலங்காரமாயிராமல், அழியாத அலங்கரிப்பாயிருக்கிற சாந்தமும் அமைதலுமுள்ள ஆவியாகிய இருதயத்தில் மறைந்திருக்கிற குணமே உங்களுக்கு அலங்கார*

*மாயிருக்கக்கடவது; அதுவே தேவனுடைய பார்வையில் விலையேறப்பெற்றது. இப்படியே பூர்வத்தில் தேவனிடத்தில் நம்பிக்கையாயிருந்த பரிசுத்த ஸ்திரீகளும் தங்களுடைய புருஷர்களுக்குக் கீழ்ப்படிந்து தங்களை அலங்கரித்தார்கள்.*

*I பேதுரு 3 : 3 - 5*

முற்காலங்களில் தேவனுக்குக் கீழ்ப்படிந்த தேவனுடைய பிள்ளைகள் தங்கள் புருஷர்களுக்குக் கீழ்ப்படிந்து, இப்படி தான் தங்களை அலங்கரித்தார்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார். இவர்கள் இரட்சிக்கப்பட்டு ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளும்போது தேவ மகிமையினால் அலங்கரிக்கப்பட்டவர்களாக உலகத்தில் காணப்படுவார்கள். தேவனுடைய ஜனங்கள் தேவபக்திக்கேற்ற நல்ல ஒழுங்கான வஸ்திரங்களை உடுத்திக்கொண்டு, மகிமையால் நிறைக்கப்பட்டு, தேவ மகிமையினால் உடுத்துவிக்கப்பட்டவர்களாக இங்கேயும் காணப்படுவார்கள்; பின்பு பரலோகராஜ்யத்தில் அவர்கள் அநுபவிக்கப்போகிற மகிமைக்கு அளவே கிடையாது. அந்த விசுவாசத்தோடே இவர்கள் வாழ்கிறார்கள். நகை நட்டுகளினாலே அலங்கரிக்கும் அனுபவத்தோடு காணப்படுகிறவர்கள் பூரணமான மனமாற்றத்தோடு காணப்படாத ஜனங்கள்; இவர்கள் ஞானஸ்நானம் பெறத் தகுதியானவர்கள் அல்ல.

*அப்பொழுது இதோ, வேசியின் ஆடையாபரணந்தரித்த தந்திரமனமுள்ள ஒரு ஸ்திரீ அவனுக்கு எதிர்ப்பட்டாள்.*

*நீதிமொழிகள் 7 : 10*

இவ்விதமான அலங்கரிப்புகள் தேவனுடைய ஜனங்களுக்கு உரியதல்ல; கேவலமான மோசமானவர்களுக்கு உரியது.

வெளிப்படுத்தல் 17-ம் அதிகாரத்தை வாசிக்கும்போது,

இவ்விதமான அலங்கரிப்புகள் அந்திக்கிறிஸ்துவாகிய சாத்தானுடைய மணவாட்டிகளுக்கு உரியது என்று சொல்லப்பட்டு இருக்கிறது. இவ்விதமான அலங்கரிப்பு தேவனுடைய ஜனங்களுக்கு உரியது அல்ல.

வேதத்தில் இருக்கிற கர்த்தருடைய வார்த்தையை யார் விசுவாசிக்கிறார்களோ அவர்கள் சகல கேட்டிலிருந்தும் பூரணமான விடுதலையை கர்த்தராலே பெற்றுக்கொள்வார்கள்.

**4 வகையான ஆடைகள் தேவனுடைய ஜனங்கள் உபயோகிக்கக் கூடாது என்று வேதத்தில் சொல்லப்பட்டு இருக்கிறது.**

- **வேசியின் ஆடை**(நீதிமொழிகள் 7:10)

இப்பொழுது பார்த்தால் பரிதாபமான நிலைமையிலே உலகம் முழுவதும் மாறி இருக்கிறது. வேசியின் ஆடை என்றால் சரீரம் வெளியே காணத்தக்கதான வஸ்திரங்கள், அப்படிப்பட்டதான மெல்லிய வஸ்திரம் என்பதாகும்; இன்றைக்கு உலகத்தில் பெரும்பாலும் காணப்படுவது இதுதான். அதைப் பெண்கள் நாணமற்று உபயோகிக்கிறார்கள். இவ்விதமாக வெறும் மோசமான நிலைமையோடு ஜனங்கள் மாறியிருக்கிறார்கள். இது சாத்தானுடைய பயங்கரமான தந்திரமான கிரியை என்பதை ஜனங்கள் உணரவில்லை.

ஆதிமனுஷனாகிய ஆதாமும் ஏவாளும் தேவ மகிமையினால் உடுத்துவிக்கப்பட்டிருந்தார்கள். தேவ கட்டளையை மீறி பாவஞ்செய்தபோது, மகிமையின் வஸ்திரம் அவர்களை விட்டு நீங்கிப்போனது. அப்பொழுது தாங்கள் வஸ்திரம் இல்லாத நிர்வாணிகள் என்று கண்டு, விருட்சங்களினிடையில் ஒளித்துக்கொண்டார்கள். அப்பொழுது தேவன் இவர்களுக்குத் தோலுடைகளை உடுத்துவித்தார். இன்னும் ஒரு கால அளவு வந்தபோது பஞ்சுநூலினால் துணி நெய்து, நல்ல நிலைமையில் உடுத்திக்கொள்ள ஆரம்பித்தார்கள். ஆதியில் மகிமையின் வஸ்திரத்தை சாத்தான் உரிந்தெடுத்ததுபோல, இப்பொழுது சாத்தான் இந்த வஸ்திரத்தையும் எடுத்துப்போட்டான். வஸ்திரத்தை தேவன் மனுஷர்களின் மானத்தைக் காப்பாற்றும்படியாக உண்டு பண்ணிக் கொடுத்தார். சாத்தான் இப்போது மனுஷர்களை மிகவும் கேவலமான நிலைமையில் மிருகங்களைப்போல ஆக்கிக்கொண்டிருக் கிறான். மனுஷன் எப்படி உடுத்திக்கொள்ள வேண்டும் என்று கர்த்தர் வேதத்தில் கற்பனை கொடுத்திருக்கிறார்; ஆனால் அதை ஜனங்கள் அறியாமலிருக்கிறார்கள்.

*நல்லொழுக்கமுள்ள ஸ்திரீ மானத்தைக் காப்பாள்; பராக்கிரம சாலிகள் ஐசுவரியத்தைக் காப்பார்கள்.*

*நீதிமொழிகள் 11 : 16*

இந்த நல்ல வஸ்திரங்கள் நல்லொழுக்கத்தை உண்டாக்கவும் மானத்தை காப்பாற்றவும் உதவுகிறது. ஆனால், இப்போது மானம் கெட்ட நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இது எல்லாம் தேவனுடைய ஜனங்களுக்கு உரியதல்ல. ஒழுங்கு, நல்லொழுக்கம் உடையவர்களாய் காணப்படவேண்டும் என்று சபைக்குக் கர்த்தர் கட்டளை கொடுத்திருக்கிறார்.

*விநோத வஸ்திரங்களையும், சால்வைகளையும், போர்வை களையும், குப்பிகளையும்,*

*ஏசாயா 3 : 22*

- **விநோத வஸ்திரம்**

விநோத வஸ்திரம் என்றால் பலவிதமான சித்திர பணிகள் உள்ளது. மாடு, காளை, பாம்பு, சிங்கம், பறவை போன்ற படங்கள் உள்ளது. இப்படிப்பட்ட வஸ்திரங்கள், விக்கிரக சால்வைகள், போர்வைகளை தேவனுடைய ஜனங்கள் உபயோகிக்கக்கூடாது. இவைகள் தேவனுடைய கோபத்திற்கு ஏதுவானது.

- **ஆடம்பரமான வஸ்திரம்**(ஏசாயா 3:24)

ஆடம்பரமான வஸ்திரம் தேவனுடைய ஜனங்களுக்கு உரியதல்ல. இது பட்டும் பகட்டுமான வஸ்திரம்; இவ்விதமான அலங்கரிப்பை உடையவர்கள் ஞானஸ்நானம் பெறத் தகுதியானவர்கள்அல்ல.

- **விலையேறப்பெற்ற வஸ்திரம்**(I தீமோத்தேயு 2:9)

இது தேவனுடைய ஜனங்களுக்கு உரியதல்ல. தேவபக்திக்கு ஏற்ற தகுதியான வஸ்திரத்தை உடுத்திக்கொண்டு, தேவபக்திக்கு உரியவர்களாக மாத்திரம் வாழவேண்டும் என்று தேவன் கட்டளை கொடுத்திருக்கிறார். இவ்விதமான வேசியின் ஆடை, விநோதமான சால்வை, போர்வை, ஆடம்பரமான வஸ்திரம், விலையேறப்பெற்ற வஸ்திரம் ஆகிய 4 வகையான வஸ்திரங்கள் தேவனுடைய

ஜனங்களுக்கு உரியதல்ல. இவ்விதமான அலங்கரிப்பை உடையவர்கள் ஞானஸ்நானம் பெற தகுதியானவர்கள் அல்ல.

### 8. சரீரத்தை தேவனுக்கென்று ஜீவபலியாக ஒப்புக்கொடுத்தவர்கள் ஞானஸ்நானம் பெறத் தகுதியானவர்கள்

*அப்படியிருக்க, சகோதரரே, நீங்கள் உங்கள் சரீரங்களைப் பரிசுத்தமும் தேவனுக்குப் பிரியமுமான ஜீவபலியாக ஒப்புக்கொடுக்கவேண்டுமென்று, தேவனுடைய இரக்கங்களை முன்னிட்டு உங்களை வேண்டிக்கொள்ளுகிறேன்; இதுவே நீங்கள் செய்யத்தக்க புத்தியுள்ள ஆராதனை.*

*ரோமர் 12 : 1*

சரீரம் கர்த்தருக்குச் சொந்தமானது வேறு ஒரு இச்சைக்கோ, பாவத்திற்கோ, அக்கிரமத்திற்கோ, ஒழுங்கீனமான அலங்கரிப்புக்கோ உரியது அல்ல. அது கர்த்தருக்குரியது. கர்த்தருக்குப் பிரியமான காரியம் மாத்திரம் அவர்கள் சரீரத்தில் நடக்கவேண்டும்.

*உங்கள் சரீரங்கள் கிறிஸ்துவின் அவயவங்களென்று அறியீர்களா? அப்படியிருக்க, நான் கிறிஸ்துவின் அவயவங் களை வேசியின் அவயவங்களாக்கலாமா? அப்படிச் செய்யலாகாதே.*

*I கொரிந்தியர் 6 : 15*

வேசியைப்போன்று ஆடை உடுத்திக்கொள்கிறவர்களும் அதே பாவத்தைச் செய்தவர்கள் ஆகிறார்கள். பாவஇச்சை அவர்களிடம் இருக்கிறதினாலே அந்தக் கேடை இருதயத்தில் வைத்திருக்கிறார்கள். இரட்சிக்கப்பட்டவர்களோ கிறிஸ்துவின் அவயவங்களாய் இருக்கிறார்கள். கிறிஸ்துவின் அவயவங்களாக இருந்துகொண்டு அதை மாற்றி வேசியின் அவயவங்களாக்குகிறது நியாயத்தீர்ப்புக்கு ஏதுவான பாவம் என்பதை அறிந்துகொள்ளவேண்டும். இரட்சிக்கப்பட்டு ஞானஸ்நானம் பெற்று உலகத்திலே காணப்படுகிறவர்கள் கிறிஸ்துவின் சரீரத்தில் உள்ள ஒரு அவயவமாய் காணப்படுகிறார்கள். அப்படிப்பட்ட வர்கள் இவ்விதமான ஸ்டைலையோ, அந்தஸ்தையோ விரும்புவார்கள்

என்றால் அவர்கள் அந்த அவயவத்தை வேசியின் அவயவமாக்கு கிறார்கள்.

> *அப்படியிருக்க, சகோதரரே, நீங்கள் உங்கள் சரீரங்களைப் பரிசுத்தமும் தேவனுக்குப் பிரியமுமான ஜீவபலியாக ஒப்புக்கொடுக்க வேண்டுமென்று, தேவனுடைய இரக்கங்களை முன்னிட்டு உங்களை வேண்டிக்கொள்ளுகிறேன்; இதுவே நீங்கள் செய்யத்தக்க புத்தியுள்ள ஆராதனை.*
>
> *ரோமர் 12 : 1*

நாம் நம் சரீரங்களை கர்த்தருக்கென்று ஒப்புவிக்கவேண்டும். "மகனே, என் நெஞ்செனக்குத் தாராயோ" என்று ஆத்துமாவை மட்டும் தானே கர்த்தர் கேட்கிறார், அதனால் சரீரத்தை எப்படி வைத்திருந்தாலும் ஒன்றுமில்லை என்று சிலர் சொல்லுகிறார்கள். ஆனால் ஆத்துமாவை மாத்திரம் அல்ல, ஆவியையும், சரீரத்தையும்கூட கர்த்தருக்கென்று ஒப்புவிக்கவேண்டும்; கர்த்தருக்காக ஜீவபலியாக பிரதிஷ்டை பண்ணவேண்டும்; கர்த்தருக்கென்று அப்படியே காணிக்கையாக படைக்கவேண்டும். ஆவி, ஆத்துமா, சரீரம் மூன்றையும் படைக்கவேண்டும். இவர்கள் தான் புத்தியுள்ள ஆராதனை செய்கிறவர்கள். இவர்கள் தான் புத்தியுள்ள கன்னிகைகள்.

> *உங்கள் சரீரமானது நீங்கள் தேவனாலே பெற்றும் உங்களில் தங்கியும் இருக்கிற பரிசுத்த ஆவியினுடைய ஆலயமாயிருக்கிற தென்றும், நீங்கள் உங்களுடையவர்களல்லவென்றும் அறியீர்களா? கிரயத்துக்குக் கொள்ளப்பட்டீர்களே; ஆகையால் தேவனுக்கு உடையவைகளாகிய உங்கள் சரீரத்தினாலும் உங்கள் ஆவியினாலும் தேவனை மகிமைப்படுத்துங்கள்.*
>
> *I கொரிந்தியர் 6 : 19, 20*

சரீரம் உனக்கு சொந்தமானது அல்ல என்று கர்த்தர் சொல்லுகிறார். ஒருவன் இரட்சிக்கப்பட்டு, தேவனுடைய மனுஷன் என்ற வரிசையில் வந்திருக்கிறான் என்றால் அவர்கள் தேவனுக்கு உடையவர்களா யிருக்கிறார்கள். இவர்களுக்குச் சொந்தமானவர் கர்த்தர் மாத்திரம்; இவர்களும் கர்த்தருக்குச் சொந்தமானவர்கள். கர்த்தர் இவர்களை கிரயத்துக்கு(விலைக்கு) வாங்கியிருக்கிறார். தம்முடைய இரத்தத்தைச்

சிந்தி, தம்முடைய ஜீவனையும் கிரயமாகக் கொடுத்து, இவர்களை சொந்தமாக வாங்கிக்கொண்டார். இரத்தக் கிரயத்தைக் கொடுத்து உன்னை வாங்கினார்; சொந்த ஜீவனையும் கொடுத்து, அவரையே முழுதுமாக உனக்காகக் கொடுத்து சொந்தமாக வாங்கி இருக்கிறார் என்பதைக் குறித்து மறந்து போகக்கூடாது. ஆகவே இவர்கள் தாங்கள் தேவனுக்கு மகிமையாய் மாத்திரம் வாழும்படியாக தேவனால் இந்த உலகத்தில் வைக்கப்பட்டிருக்கிறோம் என்று அறியவேண்டும். தங்கள் ஆவியினாலும், ஆத்துமாவினாலும், சரீரத்தினாலும் தேவனுக்கு மகிமையான காரியங்கள் மாத்திரம் நடக்கவேண்டும். தேவனுக்கு மகிமையாய் உலகத்தில் பிழைக்கும்படியாக தேவன் உலகத்தில் வைத்திருக்கிறார் என்று அறிந்து, தேவனுக்கு மகிமையானதை மாத்திரம் செய்யவேண்டும்.

தாங்கள் பரிசுத்த ஆவியானவருடைய ஆலயமாக கருதப்பட வேண்டுமானால் தேவனை மாத்திரம் உலகத்திலே பிரியப்படுத்தி வாழ்கிற அனுபவத்தோடு காணப்படவேண்டும். தேவன் மாத்திரம் இவர்களை பார்த்துப் பிரியப்படவேண்டும். இப்படிப்பட்ட பூரணமான பிரதிஷ்டையோடு யார் ஜீவிக்கிறார்களோ, அவர்கள் தான் பரிசுத்த ஆவியானவருடைய ஆலயமாகக் கருதப்படுகிறவர்கள்; மற்றவர்கள் அல்ல. தேவன் மறுபடியும் புதிதாக சிருஷ்டித்து உன்னை வைத்திருக்கிறார். உன் சரீரத்தின் பழைய நிலைமையை எல்லாம் மாற்றி புதிதாக அமைத்து, புதிதான சிருஷ்டியாக்கி உனக்குக் கொடுத்திருக்கிறார். ஆகவே, சரீரம் உனக்குச் சொந்தமானது அல்ல. அப்படியானால் உன் மனம்போல எப்படி அலங்கரிக்கலாம். சுய இஷ்டத்தின்படி செய்வாயானால் நியாயத்தீர்ப்புக்கு ஏற்ற காரியம் என்பதை அறிந்து கொள். நீ தேவனுடைய ஆலயத்தைக் கெடுத்தால் தேவன் உன்னைக் கெடுப்பார் என்று வசனம் சொல்லுகிறது.

> *நீங்கள் தேவனுடைய ஆலயமாயிருக்கிறீர்களென்றும், தேவனுடைய ஆவி உங்களில் வாசமாயிருக்கிறாரென்றும் அறியாதிருக்கிறீர்களா? ஒருவன் தேவனுடைய ஆலயத்தைக் கெடுத்தால், அவனை தேவன் கெடுப்பார்; தேவனுடைய ஆலயம் பரிசுத்தமாயிருக்கிறது; நீங்களே அந்த ஆலயம்.*
>
> *I கொரிந்தியர் 3 : 16, 17*

இரட்சிக்கப்பட்டவர்கள் தேவனுக்கு மகிமையாக மாத்திரம் வாழ வேண்டும்; ஜீவிக்க வேண்டும். தேவனை மகிமைப்படுத்தும் ஆவி, ஆத்துமா, சரீரம் உடையவர்களாகக் காணப்படவேண்டும். இவ்விதமான அனுபவத்தோடு காணப்படுகிறவர்களே ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ள தகுதியானவர்கள்.

### *9. முழு இருதயத்தோடு கர்த்தரை விசுவாசிக்கிறவர்கள் ஞானஸ்நானம் பெறலாம்*

*அதற்குப் பிலிப்பு: நீர் முழு இருதயத்தோடும் விசுவாசித்தால் தடையில்லையென்றான். அப்பொழுது அவன்: இயேசு கிறிஸ்துவை தேவனுடைய குமாரனென்று விசுவாசிக்கிறேன் என்று சொல்லி; இரதத்தை நிறுத்தச் சொன்னான்.*

*அப்போஸ்தலர் 8 : 37, 38*

முழு இருதயத்தோடு விசுவாசிக்கிறவர்கள் ஞானஸ்நானம் பெறத் தகுதியானவர்கள். முழு இருதயத்தோடு விசுவாசிப்பது என்றால், இயேசுகிறிஸ்துவை எல்லாவற்றிற்கும் எல்லாமானவராக ஏற்றுக் கொள்வது. அவர் நல்ல பரிகாரியாக இருக்கிறார், சொஸ்தமாக்குகிற வராக இருக்கிறார், குணமாக்குகிறவராக இருக்கிறார். இந்த விசுவாசம் தான் முழு இருதயத்தோடு அவரை விசுவாசிக்கிறது. அவ்விதமான பூரணமான விசுவாசத்தோடு இவர்கள் ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ள வேண்டும். இரட்சிக்கப்பட்டு, விசுவாசி என்ற பேர் பெற்றுக்கொண்டு மருந்து எடுக்கிறவர்கள்,தேவனுக்கு வைத்தியனாக மாறுகிறார்கள்; அவருடைய சரீரத்திற்கு மருந்து செய்கிறார்கள்; இது மன்னிக்கப்படாத பாவம். இவ்விதமான அவிசுவாசத்தோடு காணப்படுகிறவர்கள் ஞானஸ்நானம் பெற தகுதியானவர்கள் அல்ல.

ஒருவன் வியாதிப்பட்டால் என்ன செய்யவேண்டுமென்றால்;

*உங்களில் ஒருவன் வியாதிப்பட்டால், அவன் சபையின் மூப்பர்களை வரவழைப்பானாக; அவர்கள் கர்த்தருடைய நாமத்தினாலே அவனுக்கு எண்ணெய்பூசி, அவனுக்காக ஜெபம்பண்ணக்கடவர்கள். அப்பொழுது விசுவாசமுள்ள ஜெபம்*

*பிணியாளியை இரட்சிக்கும்; கர்த்தர் அவனை எழுப்புவார்; அவன் பாவஞ்செய்தவனானால் அது அவனுக்கு மன்னிக்கப் படும். நீங்கள் சொஸ்தமடையும்படிக்கு, உங்கள் குற்றங்களை ஒருவருக்கொருவர் அறிக்கையிட்டு, ஒருவருக்காக ஒருவர் ஜெபம்பண்ணுங்கள். நீதிமான் செய்யும் ஊக்கமான வேண்டுதல் மிகவும் பெலனுள்ளதாயிருக்கிறது.*

*யாக்கோபு 5 : 14 - 16*

விசுவாசியாய் காணப்படுகிற ஒருவனுக்கு நோயோ, வியாதியோ வந்தால் அவன் சபையின் ஊழியக்காரர்களை கூப்பிடவேண்டும். அவர்கள் வந்து எண்ணெய் பூசி ஜெபம்பண்ணவேண்டும். இதுவே தேவன் கொடுத்திருக்கிற கற்பனை. தேவனுடைய நாமத்தின்மேல் விசுவாசம் வைத்து உலகத்திலே காணப்படுகிறவர்கள் பரலோகராஜ்யம் போவார்கள், மற்றவர்கள் நரகத்திற்குப் போவார்கள். யாவரும் பரலோகராஜ்யம் போகவேண்டும் என்பதற்காகத் தான் கர்த்தராகிய இயேசுகிறிஸ்து இந்த உலகத்தில் வந்து பாடுபட்டார்; பரலோகராஜ்யம் பிரவேசிப்பதற்கான இவ்விதமான வழிமுறைகளை ஏற்படுத்தி இருக்கிறார். இன்னும் கர்த்தர் அவருடைய சபையிலே அற்புதங்கள், குணமாக்கும் வரங்களை வைத்திருக்கிறார். ஆகையினால் கர்த்தருடைய சபையார் வேறு பரிகாரத்தைத் தேட அவசியமில்லை.

*தேவனானவர் சபையிலே முதலாவது அப்போஸ்தலரையும், இரண்டாவது தீர்க்கதரிசிகளையும், மூன்றாவது போதகர் களையும், பின்பு அற்புதங்களையும், பின்பு குணமாக்கும் வரங்களையும், ஊழியங்களையும், ஆளுகைகளையும், பலவித பாஷைகளையும் ஏற்படுத்தினார்.*

*I கொரிந்தியர் 12 : 28*

அக்கிரமங்களை மன்னித்து நோய்களை குணமாக்குகிறவர் என்றும் கர்த்தரைக் குறித்து சொல்லப்பட்டிருக்கிறது. அவர் பரிகாரியாகிய கர்த்தர்,

*அவர் தாமே நம்முடைய பெலவீனங்களை ஏற்றுக்கொண்டு, நம்முடைய நோய்களைச் சுமந்தார் என்று, ஏசாயா*

*தீர்க்கதரிசியினால் உரைக்கப்பட்டது நிறைவேறும்படி இப்படி நடந்தது.*

*மத்தேயு 8 : 17*

அவர் பாவங்களை மாத்திரமல்ல, பெலவீனங்களை ஏற்றுக்கொண்டு நோய்களை சுமந்தார். பூரணமான விடுதலையை கர்த்தராகிய இயேசுகிறிஸ்து பாடுபட்டு ஆயத்தம்பண்ணி வைத்திருக்கிறார். இவ்விதமான பூரணமான விசுவாசத்தோடு காணப்படுகிறவர்களே, முழு இருதயத்தோடு விசுவாசிக்கிறவர்கள். இவர்களே ஞானஸ்நானம் பெறத் தகுதியானவர்கள்.

## *10. சீஷர்களான அனுபவத்தோடு காணப்படுகிறவர்கள் ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளலாம்*

*இயேசு தம்மை விசுவாசித்த யூதர்களை நோக்கி: நீங்கள் என் உபதேசத்தில் நிலைத்திருந்தால் மெய்யாகவே என் சீஷராயிருப்பீர்கள்;*

*யோவான் 8 : 31*

உபதேசத்தில் நிலைத்திருக்கிறவர்கள் சீஷர்கள். கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை குருவாக ஏற்றுக்கொண்டு, அவரைக் குருவாக மதித்து, அவருக்குப் பயந்து, குரு உபதேசம் எதுவோ அதை அப்படியே ஆம் என்று பூரணமான பணிவோடும் விசுவாசத்தோடும் ஏற்றுக்கொண்டு ஜீவிக்கிறவர்கள் தான் சீஷர்கள். அவருடைய உபதேசத்தில் இருக்கிற கட்டளை, பிரமாணங்கள் எல்லாவற்றையும் ஏற்றுக்கொண்டு அவைகளைக் கைக்கொண்டு ஜீவிக்கிறவனே சீஷன்.

*ஆகையால், நீங்கள் புறப்பட்டுப்போய், சகல ஜாதிகளையும் சீஷராக்கி, பிதா குமாரன் பரிசுத்தஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானங் கொடுத்து, நான் உங்களுக்குக் கட்டளையிட்ட யாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம்பண்ணுங்கள். இதோ, உலகத்தின் முடிவுபரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனேகூட இருக்கிறேன் என்றார். ஆமென்.*

*மத்தேயு 28 : 19, 20*

பூரணமான கீழ்ப்படிதலோடு, சகல உபதேசங்களையும் ஏற்றுக்கொண்டு, அவைகளைக் கைக்கொண்டு காணப்படுகிறவர்களே ஞானஸ்நானம் பெற தகுதியானவர்கள். இவ்விதமான பூரணமான அனுபவங்கள் ஜீவியத்தில் இருந்தால் ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளலாம்.

> *பரிசேயரும் நியாயசாஸ்திரிகளுமோ அவனாலே ஞானஸ் நானம் பெறாமல் தங்களுக்குக் கேடுண்டாக தேவனுடைய ஆலோசனையைத் தள்ளிவிட்டார்கள்.*
>
> *லூக்கா 7 : 30*

இவ்விதமான அனுபவத்தைப் பெற்றுக்கொண்டும் ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ள மனமில்லாமல் அசதியோடு காணப்படுவார்களானால் அது தங்களுக்குக் கேடுண்டாக்குகிற செயல் என்று சொல்லப்பட்டு இருக்கிறது. இந்த அனுபவத்தைப் பெறாமல் ஞானஸ்நானம் பெறுகிறவர்களும் பயங்கரமான ஆக்கினைத்தீர்ப்புக்கு ஏதுவாகக் காணப்படுவார்கள்.

# 9

## குழந்தைகளுக்கு ஞானஸ்நானம் கொடுக்கலாமா?

குழந்தைகள் பரிசுத்தமாகத்தானே இருக்கிறது; ஆகவே குழந்தைகளுக்கு ஞானஸ்நானம் கொடுக்கலாம் என்று சொல்லிக் கொள்ளுகிறார்கள். குழந்தைகளுக்கு ஞானஸ்நானம் கொடுக்க கர்த்தர் வேதத்தில் சொல்லவில்லை. அப்படி ஞானஸ்நானம் கொடுக்கக் கர்த்தர் கட்டளை கொடுக்கவும் இல்லை. ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளத் தகுதியானவர்கள் யார் என்று இங்கு அறிவிக்கப்பட்டிருக்கிற தின்படியான அநுபவங்களை அடைந்தவர்களே ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளத் தகுதியானவர்கள். கர்த்தராகிய இயேசுகிறிஸ்து சீஷரானவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுக்கக் கட்டளையிட்டார்.

> *ஆகையால் நீங்கள் புறப்பட்டுப்போய், சகல ஜாதிகளையும் சீஷராக்கி, பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானங்கொடுத்து, நான் உங்களுக்கு கட்டளையிட்ட யாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம் பண்ணுங்கள்...*
>
> *மத்தேயு 28 : 19, 20*

ஒரு சிறுகுழந்தைக்கு தேவனுடைய உபதேசங்களை அறிந்து கொள்ளவோ, அவருடைய சீஷன் என்ற நிலைக்கு வரவோ முடியாது. பரிசுத்தவேதாகமத்தில் லீதியாளும் அவள் வீட்டாரும் ஞானஸ்நானம் பெற்றதைக் குறித்தும், சிறைச்சாலைக்காரனும் அவன் வீட்டாரும் ஞானஸ்நானம் பெற்றதைக் குறித்தும், ஸ்தேவானுக்கும் அவன் வீட்டாருக்கும் பவுல் ஞானஸ்நானம் கொடுத்ததாக சொல்லியதை வைத்தும், அந்த வீட்டில் குழந்தைகளும் இருந்திருப்பார்கள்; ஆகவே அவர்களும் ஞானஸ்நானம் பெற்றிருப்பார்கள் என்றெல்லாம் அநேகர் வீணாகப் பேசிக்கொண்டு இருக்கிறார்கள். ஸ்தேவானின் வீட்டிலும்,

லீதியாளின் வீட்டிலும், சிறைச்சாலைக்காரனின் வீட்டிலும் குழந்தைகள் இருந்திருக்கலாம் அல்லது இல்லாமலும் இருந்திருக்கலாம்; இதை நாம் அறியோம். ஆகவே, நாம் வேதவசனத்தைச் சரியான முறையில் அறிந்துகொள்ள வேண்டும். அவர்கள் கர்த்தராகிய இயேசுகிறிஸ்து கொடுத்த கட்டளையின்படியே மத்தேயு 28: 19, 20 ல் சொல்லப்பட்டபடியே சீஷர்களாக்கி ஞானஸ்நானம் கொடுத்தார்கள். வீட்டார் என்பது அந்த வீட்டிலுள்ள குடும்பத்தாரைக் குறிக்கும்.

> ஏனெனில், என் சகோதரரே, உங்களுக்குள்ளே வாக்குவாதங்கள் உண்டென்று குலோவேயாளின் வீட்டாரால் உங்களைக் குறித்து எனக்கு அறிவிக்கப்பட்டது.
>
> *I கொரிந்தியர் 1 : 11*

குலோவேயாளின் வீட்டாரால் உங்கள் வாக்குவாதங்களைக் குறித்து அறிவிக்கப்பட்டது என்று சொல்லப்பட்டிருப்பதால் குலோவேயாளின் வீட்டிலுள்ள அத்தனை பேரும் சொன்னார்கள் என்று அர்த்தமல்ல. இரண்டு பேராவது மூன்றுபேராவது சொன்னால் அதன் பொருள், அந்த வீட்டாரால் அறிந்தேன் என்பது. இதற்கப்புறம் வேதவசனம் என்றால் என்ன? அது எவ்விதமான ஜீவனுள்ள வார்த்தை? கர்த்தர் யார் யாருக்கெல்லாம் ஞானஸ்நானம் கொடுக்கக் கட்டளையிட்டிருக்கிறார்? அக்காலம் முதல் கர்த்தருடைய ஊழியக்காரர்கள் எவ்விதமான அனுபவத்தோடு கிறிஸ்துவைப் பின்பற்றி ஊழியம்செய்து, கிறிஸ்துவுக்கு மகிமையாய் உலகத்தில் வாழ்ந்து, கிறிஸ்துவாலே மகிமையும் மகத்துவமுமான காரியங்களை நடப்பித்து, பரலோகராஜ்யத்திற்கேற்ற அனுபவத்தோடு காணப்பட்டார்கள் என்பதைக் குறித்து அறியாதிருக்கிறார்கள்.

ஆதிசபையில் காணப்பட்ட ஊழியக்காரர்கள் தேவசித்தம் மாத்திரம் செய்து, தேவனுடைய வார்த்தைகளை மாத்திரம் ஏற்றுக்கொண்டு, கர்த்தருடைய கட்டளைகள் பிரமாணங்கள் எதுவோ அதற்கு மாத்திரம் கீழ்ப்படிந்து, அதில் நிலைநின்று அவைகளில் ஒரு வள்ளியோ புள்ளியோ வித்தியாசமாகாதபடி கண்ணும் கருத்துமாய்க் காணப்பட்டு, அதையே செய்து நிறைவேற்றினார்கள். ஆகையினால் தான் கர்த்தர் அவர்களை உண்மையும் உத்தமமுமான ஊழியக்காரர்களே

என்னுடைய தாசனே என்று அழைத்தார். அவர்கள் ஆவிக்குரிய ஜீவியத்தில் தாங்களும் வளர்ந்து, மற்றவர்களும் வளரத்தக்க அளவிலே சாட்சிகளாய் காணப்பட்டு, வரவர முன்னேறி முன்னேறி விசேஷமாக தேவனால் வழிநடத்தப்பட்டு, உலகத்துக்குப் பெரியவர்களாக விளங்கினார்கள் என்று நாம் வேதத்தில் படிக்கிறோம். அவர்கள் கர்த்தருடைய கற்பனைகள் பிரமாணங்களிலே நிலைத்திருந்து கர்த்தர் என்ன சொல்லியிருக்கிறாரோ அதை வித்தியாசப்படுத்தாதபடி அதை அப்படியே செய்து முன்னேறியதால் பாக்கியமான அனுபவத்தோடு காணப்பட்டார்கள். வேதத்தைப் புரட்டி, அவிசுவாசமாக எண்ணி, தன் சுய இஷ்டத்தின்படி ஒருவன் நடப்பானானால் அது நியாயத்தீர்ப்புக்கு ஏற்ற பாவம் என்று வேதத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

> *வேதப்புரட்டனாயிருக்கிற ஒருவனுக்கு இரண்டொருதரம் புத்தி சொன்னபின்பு அவனைவிட்டு விலகு. அப்படிப்பட்டவன் நிலைதவறி, தன்னிலேதானே ஆக்கினைத்தீர்ப்புடைய வனாய்ப் பாவஞ்செய்கிறவனென்று அறிந்திருக்கிறாயே.*
>
> *தீத்து 3 : 10, 11*

வேதப்புரட்டனாயிருக்கிற ஒருவனுக்கு இரண்டொருதரம் புத்தி சொன்னபின்பு அவனை விட்டு விலகவேண்டும். அதன் பிறகு அவனுடன் தொடர்பு கொள்ளாதே என்பதே; வேதத்தை ஒருவன் புரட்டி தன் இஷ்டத்தின்படி, அதற்குத் தவறான அர்த்தம் கொடுத்து உபயோகிப்பானானால் அவனுக்கு பயங்கரமான நியாயத்தீர்ப்பு; நரகத்துக்கும் தப்பமுடியாது என்று வசனமே சொல்லுகிறது. பயங்கரமான நியாயத்தீர்ப்புக்கு ஏற்ற பாவம். இதை ஒன்றும் அறியாதபடி நியாயம் பேசிக்கொள்கிறார்கள். குழந்தைகளுக்கு ஞானஸ்நானம் கொடுக்க கர்த்தர் கற்பிக்கவில்லை; அப்படிக் கொடுக்கவும் கூடாது; கொடுத்ததுமில்லை. கர்த்தராகிய இயேசுகிறிஸ்து இரட்சகராக இருந்த காலத்தில் நமக்கு மாதிரியாக ஞானஸ்நானம் பெற்றார்; அவர் ஞானஸ்நானம் பெற்றபோது ஏறக்குறைய முப்பது வயதுள்ளவரானார் என்று வேதத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. குழந்தைகளுக்கு ஞானஸ்நானத்தைக் குறித்து ஒன்றுமே தெரியாது.

ஆகையினால் குழந்தைகளுக்கு ஞானஸ்நானம் கொடுப்பது மகா ஆபத்தான காரியம். விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான்; விசுவாசியாதவனோ ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவான் என்று வேதம் சொல்லுகிறது. அப்படியானால் அந்தக் குழந்தைக்கு ஞானஸ்நானம் என்று ஒன்றைக் கொடுக்கிறதினால் அந்தக் குழந்தைக்கு ஆக்கினையை வருவிக்கிறார்கள்; ஆக்கினைக் குட்படுத்துகிறார்கள் என்பதே.

## 10

## ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ள வேண்டியதின் அவசியம் என்ன?

*ஆகையால், நீங்கள் புறப்பட்டுப்போய், சகல ஜாதிகளையும் சீஷராக்கி, பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானங்கொடுத்து, நான் உங்களுக்குக் கட்டளையிட்ட யாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம்பண்ணுங்கள். இதோ, உலகத்தின் முடிவுபரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனே கூட இருக்கிறேன் என்றார். ஆமென்.*

*மத்தேயு 28 : 19, 20*

கர்த்தராகிய இயேசுகிறிஸ்து தம்முடைய சீஷர்களுக்குக் கொடுத்த கடைசி கட்டளை இதுவாகும். கர்த்தருடைய ஊழியக்காரர்கள் சுவிசேஷத்தை அறிவிக்கவேண்டும் என்பதையும் அந்தச் சுவிசேஷத்தைக் கேட்கிறவர்கள், சுவிசேஷத்தின்படியான அநுபவங் களை அடைந்து ஞானஸ்நானத்தைப் பெற்றுக்கொள்ள தகுதி உடையவர்களாய் காணப்படவேண்டும் என்பதையும் தேவன் எதிர்பார்க்கிறார். அநேகருக்கு இரட்சிக்கப்படவேண்டும் என்றோ ஞானஸ்நானத்தைப் பெற்றுக்கொள்ளவேண்டும் என்றோ எந்த உணர்வும் கிடையாது. மனுஷனுடைய வாழ்நாளானது காலையிலே பூத்து மாலையிலே உலர்ந்துபோகிற புல்லின் பூவைப்போல காணப்படுகிறது. என்றாலும் தங்கள் வாழ்நாளைக் குறித்தோ, பரலோகராஜ்யம் போகவேண்டும் என்றோ எண்ணமற்றவர்களாகக் காணப்படுகிறார்கள். எல்லா ஜனங்களும் இரட்சிக்கப்பட்டு, ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ள வேண்டும் என்பது தேவகட்டளை. இரட்சிக்கப்பட்ட ஜனங்களை கர்த்தர் ஞானஸ்நானத்தின் மூலமாக சபையிலே சேர்க்கிறவரா யிருக்கிறார். கர்த்தராகிய இயேசுகிறிஸ்து அவருடைய இரகசிய

வருகையில் சபையாராய் மாற்றப்பட்ட பரிசுத்தவான்களை தான் தம்மோடு எடுத்துக்கொள்ளுவார்.

*எல்லா மனுஷரும் இரட்சிக்கப்படவும், சத்தியத்தை அறிகிற அறிவை அடையவும், அவர் சித்தமுள்ளவராயிருக்கிறார்.*

*I தீமோத்தேயு 2 : 4*

எல்லா ஜனங்களும் இரட்சிக்கப்பட்டு ஞானஸ்நானம் பெற்று சபையாராய் மாறவேண்டும் என்பது தேவனுடைய சித்தம். இந்த தேவசித்தத்தை நிறைவேற்றாத எந்த மனுஷனும் பாவிதான். அவர்கள்மேல் தேவகோபம் தான் இருக்கும். வயதுசென்ற பிறகு இரட்சிக்கப்படுவதல்ல; வாலிபப் பருவத்தில் இரட்சிக்கப்பட்டு, நம் சரீரத்தில் இருக்கிற பெலனை ஆண்டவருக்கென்று செலவுபண்ண வேண்டும்.

இயேசு ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ள யோவான் ஸ்நான னிடத்தில் சென்றபோது, யோவான் ஸ்நானன் இயேசுவிடம்: நான் உம்மாலே ஞானஸ்நானம் பெறவேண்டியதாயிருக்க நீர் என்னிடத்தில் வரலாமா என்று தடைபண்ணினான். அதற்கு இயேசு: இப்பொழுது நீ இடங்கொடு, நான் தேவநீதியை நிறைவேற்றவேண்டியதிருக்கிறது என்று சொன்னார். அப்படியானால் மனுஷனாகப் பிறந்த யாவருமே இரட்சிக்கப்பட்டு ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளவேண்டும் என்பது தேவநீதி. ஆகவே தான் இயேசு தடை ஏற்பட்டபிறகும் இப்பொழுது இடங்கொடு, தடைபண்ணாதே என்று சொன்னார். ஆகவே இரட்சிக்கப்பட்டு ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ள தகுதி உள்ளவர்கள் கட்டாயமாக ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ள வேண்டும் என்பதாகும்.

*இப்பொழுது நீ தாமதிக்கிறதென்ன? நீ எழுந்து கர்த்தருடைய நாமத்தைத் தொழுதுகொண்டு, ஞானஸ்நானம் பெற்று, உன் பாவங்கள் போகக் கழுவப்படு என்றான்.*

*அப்போஸ்தலர் 22 : 16*

பவுல் என்ற சவுலுக்கு கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவைக் குறித்துத் தெரியாது; அவர் தேவசந்திப்பைப் பெற்றபோது இயேசுகிறிஸ்துவைக்

குறித்து அறிந்துகொண்டார். அப்பொழுது தேவன் அனனியாவுக்கு ஒரு தரிசனத்தைக் கொடுத்து, நீ போய், சவுலுக்காக ஜெபம்பண்ண வேண்டும்; அப்பொழுது அவன் குணமடைவான், அவனுக்கு ஞானஸ்நானமும் கொடுக்கவேண்டும் என்று அறிவித்தார். அனனியா சவுலிடத்தில் சென்று, சவுலின்மேல் கையை வைத்து ஜெபம்பண்ணின போது அவன் பார்வையடைந்தான். ஞானஸ்நானம் பெற்றுக்கொள்வதற் கேற்ற அநுபவம் இருந்தும் சவுல் தயங்கியபோது அனனியா சவுலிடம்: இப்பொழுது நீ தாமதிக்கிறதென்ன? நீ எழுந்து ஞானஸ்நானம் பெற்று, உன் பாவங்கள்போகக் கழுவப்படு என்றான். அப்பொழுது சவுல் ஞானஸ்நானம் பெற்றுக்கொண்டான். அநேகர் இரட்சிக்கப்பட்டு ஞானஸ்நானம் பெற்றுக்கொள்வதற்கேற்ற அநுபவம் இருந்தும், அதைப் பெற்றுக்கொள்ளாமல் நாட்களைக் கடத்துகிறவர்களாயிருக்கிறார்கள். இது வேதவசனத்திற்கு மாறான வாழ்க்கையாகும். இந்த வாழ்க்கை ஆசீர்வாதமாக இருக்காது.

அநேக இரட்சிக்கப்பட்டவர்கள், கர்த்தருடைய உபதேசத்தின்படி ஜீவிக்கப் பயப்படுகிறார்கள்.

> *பயப்படுகிறவர்களும், அவிசுவாசிகளும், அருவருப்பான வர்களும், கொலைபாதகரும், விபசாரக்காரரும், சூனியக் காரரும், விக்கிரகாராதனைக்காரரும், பொய்யர் அனைவரும் இரண்டாம் மரணமாகிய அக்கினியும் கந்தகமும் எரிகிற கடலிலே பங்கடைவார்கள் என்றார்.*
>
> *வெளி 21 : 8*

நான் ஞானஸ்நானம் எடுத்தால் கடைசிவரை நிலைநிற்பேனா? முடிவுபரியந்தம் நிலைநிற்பவனே இரட்சிக்கப்படுவான் என்று சொல்லப்பட்டிருக்கிறதே, அப்படி நிலைநிற்க முடியுமா என்று சந்தேகப்படுகிறார்கள். இப்படிப்பட்ட பயமும், அவிசுவாசமும் உடையவர்கள் நியாயந்தீர்க்கப்பட்டு நரகத்தில் தள்ளப்படுவார்கள்.

> *ஆகையால், மேகம்போன்ற இத்தனை திரளான சாட்சிகள் நம்மைச் சூழ்ந்துகொண்டிருக்க, பாரமான யாவற்றையும்,*

*நம்மைச் சுற்றி நெருங்கிநிற்கிற பாவத்தையும் தள்ளிவிட்டு, விசுவாசத்தைத் துவக்குகிறவரும் முடிக்கிறவருமாயிருக்கிற இயேசுவை நோக்கி, நமக்கு நியமித்திருக்கிற ஓட்டத்தில் பொறுமையோடே ஓடக்கடவோம்;*

*எபிரெயர் 12 : 1*

கிறிஸ்தவ வாழ்க்கை என்பது, பின்மாற்றம் அடைந்தவர்களைப் பார்க்கிறதல்ல, அவர்கள் மேலே ஏறிநின்று யுத்தம்பண்ணுவதாகும். இயேசுகிறிஸ்து இரவு முழுவதும் ஜெபம்பண்ணி 12 அப்போஸ்தலர் களைத் தெரிந்தெடுத்தார்; அதிலும் ஒருவன் விழுந்துபோனான். அவனுக்கு அப்படி ஆகிப்போனதே என்று மற்ற அப்போஸ்தலர்கள் பின்வாங்கிப் போகவில்லை. கர்த்தருக்குப் பயப்படுகிற மனுஷன் ஒருபோதும் வெட்கப்பட்டுப் போவதில்லை. அவர்கள் எப்போதும் முன்னோக்கிப் போய்க்கொண்டே இருப்பார்கள்.

*இஸ்ரவேலே, நீ பாக்கியவான்; கர்த்தரால் ரட்சிக்கப்பட்ட ஜனமே, உனக்கு ஒப்பானவன் யார்? உனக்குச் சகாயஞ்செய்யும் கேடகமும் உனக்கு மகிமை பொருந்திய பட்டயமும் அவரே; உன் சத்துருக்கள் உனக்கு இச்சகம் பேசி அடங்குவார்கள்; அவர்கள் மேடுகளை மிதிப்பாய், என்று சொன்னான்.*

*உபாகமம் 33 : 29*

நாம் கர்த்தரையே உறுதியாய்ப் பிடித்துக்கொண்டு ஜீவிப்போமானால், அந்த வாழ்க்கை மிகவும் விசேஷமானதாகக் காணப்படும். கர்த்தரே நம்முடன்கூட இருந்து, கரம்பிடித்து வழிநடத்துவார். நாம் விழுந்துபோனவர்களைப் பார்க்கிறதல்ல, கர்த்தரை உறுதியாய்ப் பின்பற்றி ஜீவித்த சாட்சிகளைப் பார்க்கவேண்டும். அவிசுவாசத்தையும் பயத்தையும் உண்டாக்கக்கூடிய ஜனங்களுடன் உள்ள தொடர்பை எல்லாம் விடவேண்டும். நமக்குள் விசுவாசத்தைத் துவக்குகிறவரும் முடிக்கிறவருமாகிய இயேசுவை நோக்கி நமக்கு நியமித்திருக்கிற ஓட்டத்தில் பொறுமையோடே ஓடவேண்டும். ஒவ்வொரு நாளும் ஜெபம்பண்ணி, கர்த்தருக்குப் பயந்து நடந்த எந்த மனுஷனும் ஆவிக்குரிய ஜீவியத்தில் விழுந்துபோனதாகச் சரித்திரமே இல்லை.

பாவிகளாய் காணப்படுகிற மனுஷர்கள்மேல் தேவகோபம் இருக்கிறது. ஆனால் மனந்திரும்பி, இரட்சிக்கப்பட்டு, ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளும்போது தேவகோபம் நீங்கிப்போகிறது.

*இப்பொழுதே கோடரியானது மரங்களின் வேர் அருகே வைத்திருக்கிறது; ஆகையால் நல்ல கனிகொடாத மரமெல்லாம் வெட்டுண்டு அக்கினியிலே போடப்படும் என்றான்.*

*லூக்கா 3 : 9*

இந்த உலகத்தில் அநேகர் தேவகோபத்தினால் பிடிக்கப்பட்டு, நோய் வியாதிகளினாலும், குடும்பங்களில் சமாதானமில்லாமலும் கஷ்டப்படுகிறார்கள். அவர்கள் இந்த உலக வாழ்க்கையை முடித்த பிறகு நியாயந்தீர்க்கப்பட்டு, நரகத்தில் தள்ளப்படுவார்கள். மனந்திரும்பாமலும் இரட்சிக்கப்படாமலும் காணப்படுகிற ஒவ்வொருவர்மேலும் தேவகோபம் காணப்படுகிறது. இவர்கள் இரட்சிக்கப்படும்படியாகக் கர்த்தர் தவணை கொடுத்திருக்கிறார். என்றாலும் இவர்கள் இன்னும் இரட்சிக்கப்படாவிட்டால் வெட்டுண்டு அக்கினியிலே போடப்படுவதற்கேற்ற நிலைமையோடு காணப்படுவார்கள்.

*நீ நன்மைசெய்தால் மேன்மை இல்லையோ? நீ நன்மை செய்யாதிருந்தால் பாவம் வாசற்படியில் படுத்திருக்கும்; அவன் ஆசை உன்னைப் பற்றியிருக்கும், நீ அவனை ஆண்டு கொள்வாய் என்றார்.*

*ஆதியாகமம் 4 : 7*

நன்மை செய்வது என்றால், முதலாவது அவரவரும் அவரவர் ஆத்துமாவுக்கு நன்மை செய்யவேண்டும். ஆத்துமா பாவத்திலிருந்தும் சகல கேடுகளிலிருந்தும் விடுவிக்கப்பட்டால் வாசற்படியில் பாவம் இருக்காது. அப்பொழுது, இரட்சிக்கப்பட்ட அந்த மனுஷன் அல்லது மனுஷியினிமித்தம் அந்தக் குடும்பத்துக்கும் ஆசீர்வாதம் உண்டாகிறது, தேவசமாதானமும் உண்டாகிறது. சமாதானம்தான் மிகப்பெரிய பொக்கிஷம். உலகம் கொடுக்கக்கூடாத சமாதானத்தைத் தருகிறேன் என்று கர்த்தர் வாக்குப்பண்ணியிருக்கிறார். இந்த சமாதானம் இப்போது எங்கேயும் இல்லாத ஒன்றாகக் காணப்படுகிறது.

*ஆயிரம் தலைமுறைகளுக்கும் கிருபை செய்கிறவரும், பிதாக்களுடைய அக்கிரமத்தை அவர்களுடைய பின்னடியார் பிள்ளைகளின் மடியிலே சரிக்கட்டுகிறவருமாகிய சேனைகளின் கர்த்தர் என்னும் நாமமுள்ள மகத்துவமும் வல்லமையுமுள்ள தேவனே,*

*எரேமியா 32 : 18*

ஒரு நாணயத்தில் இரண்டு பக்கங்கள் இருப்பதுபோல ஆண்டவரும் இரக்கமுள்ளவர் மட்டுமல்ல, சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படியாமல், இரட்சிக்கப்படாமல் சாக்குப்போக்குச் சொல்லிக்கொண்டு காணப்படுகிற வர்களுக்குக் கர்த்தர் நீதியைச் சரிக்கட்டுகிறவர். ஆகவே, இரட்சிக்கப் படாமலும், இரட்சிக்கப்பட்டும் ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளாமலும் இருப்பதால் உண்டாகும் விளைவுகளை அறிந்து யாவரும் இரட்சிக்கப்பட்டு, பிதா, குமாரன், பரிசுத்த ஆவியின் நாமத்தினால் மூழ்கி ஞானஸ்நானம் பெற்று கர்த்தருடைய சபையாராய் மாற பிரயாசப்படவேண்டியது அவசியமாகும்.

# 11

## ஞானஸ்நானம் பெற்றுக்கொண்டவர்கள் எப்படி காணப்பட வேண்டும்?

*நீங்கள் கிறிஸ்துவுடனேகூட எழுந்ததுண்டானால், கிறிஸ்து தேவனுடைய வலதுபாரிசத்தில் வீற்றிருக்கும் இடத்திலுள்ள மேலானவைகளைத் தேடுங்கள். பூமியிலுள்ளவைகளையல்ல, மேலானவைகளையே நாடுங்கள். ஏனென்றால், நீங்கள் மரித்தீர்கள், உங்கள் ஜீவன் கிறிஸ்துவுடனே தேவனுக்குள் மறைந்திருக்கிறது. நம்முடைய ஜீவனாகிய கிறிஸ்து வெளிப்படும்போது, நீங்களும் அவரோடேகூட மகிமையிலே வெளிப்படுவீர்கள்.*

*கொலோசெயர் 3 : 1- 4*

ஞானஸ்நானம் பெற்றுக்கொண்டவர்கள் அதன்பிறகு பூமிக்குரியவைகளை நாடுகிறவர்களாகக் காணப்படக்கூடாது. மேலான பரலோகராஜ்யத்துக்கு ஏற்றவைகளை, தேவனுக்குப் பிரியமானவைகளை மாத்திரமே நாடித்தேடி, உன்னத தேவனை தரிசிக்க ஏற்றபடி பேச்சு, நடக்கை மற்றும் சகல காரியங்களிலும் காணப்பட வேண்டும். ஏனென்றால், ஞானஸ்நானம் பெற்றுக்கொண்ட தேவனுடைய ஜனங்களின் ஜீவன் கிறிஸ்துவுக்குள் மறைந்து காணப்படுகிறது. ஆகவே, இவர்களுக்குக் கிறிஸ்துவாகிய தேவனுக்குள் இருக்கிறதான சகல ஆசீர்வாதங்களும் பூரணம் பரிபூரணம் சம்பூரணமாகக் கிடைக்கும். ஜீவனாகிய கிறிஸ்து பரிசுத்தவான்களாகிய அவருடைய சபையாரை எடுத்துக்கொள்ள வரும்போது அவரோடு எடுத்துக்கொள்ளப்படும் மகிமையான பாக்கியமும் உண்டாகிறது.

*இப்படியிருக்க, சகோதரரே, நீங்கள் எவைகளை அறியவேண்டுமென்றிருக்கிறேனென்றால்; நம்முடைய பிதாக்களெல்லாரும் மேகத்துக்குக் கீழாயிருந்தார்கள், எல்லாரும்*

*சமுத்திரத்தின் வழியாய் நடந்துவந்தார்கள். எல்லாரும் மோசேக்குள்ளாக மேகத்தினாலும் சமுத்திரத்தினாலும் ஞானஸ்நானம்பண்ணப்பட்டார்கள். எல்லாரும் ஒரே ஞானபோஜனத்தைப் புசித்தார்கள். எல்லாரும் ஒரே ஞானபானத்தைக் குடித்தார்கள். எப்படியெனில், அவர்களோடே கூடச் சென்ற ஞானக்கன்மலையின் தண்ணீரைக் குடித்தார்கள்; அந்தக் கன்மலை கிறிஸ்துவே.*

*I கொரிந்தியர் 10 : 1- 4*

கிறிஸ்துவைப் பின்பற்றுகிற ஜனங்களுக்கு இந்த உலகம் அநுகூலமாகக் காணப்படாது. கர்த்தர் அவருடைய தாசனாகிய மோசே மூலமாக இஸ்ரவேல் ஜனங்களை எகிப்தின் அடிமைத் தனத்திலிருந்து விடுவித்து வாக்குத்தத்தம்பண்ணப்பட்ட கானான் தேசத்திற்கு நேராக வழிநடத்தினார். அவர்கள் எகிப்திலிருந்து புறப்பட்டதும் நாம் தப்பிவிட்டோம், இனி ராஜவாழ்க்கைதான் என்று நினைத்தார்கள். அப்படி போகும்போதுதான் செங்கடல் குறுக்கிட்டது. அவர்களுக்குப் பின்னால் எகிப்தின் ராஜாவும் தன் சேனைகளோடு வந்தான். அப்பொழுது இஸ்ரவேல் ஜனங்கள் மிகவும் பயந்து, கலங்கி தேவனை நோக்கிக் கூப்பிட்டார்கள். அப்பொழுது மோசே கர்த்தரை நோக்கிக் கூப்பிட்டார். கர்த்தர் தம்முடைய தாசனாகிய மோசே மூலமாக செங்கடலைப் பிளந்து வெட்டாந்தரை வழியாக அவர்களை வழிநடத்தினார். கர்த்தருடைய வல்லமையான செயலினால் தண்ணீர் சுவர்போல் நின்றது.

*பின்பு மோசே இஸ்ரவேல் ஜனங்களைச் சிவந்த சமுத்திரத்திலிருந்து பிரயாணப்படுத்தினான். அவர்கள் சூர் வனாந்தரத்துக்குப் புறப்பட்டுப்போய், மூன்று நாள் வனாந்தரத்தில் தண்ணீர் கிடையாமல் நடந்தார்கள். அவர்கள் மாராவிலே வந்தபோது, மாராவின் தண்ணீர் கசப்பாயிருந்த தினால் அதைக் குடிக்க அவர்களுக்குக் கூடாதிருந்தது; அதினால் அவ்விடத்துக்கு மாரா என்று பேரிடப்பட்டது. அப்பொழுது ஜனங்கள் மோசேக்கு விரோதமாய் முறுமுறுத்து: என்னத்தைக் குடிப்போம் என்றார்கள். மோசே கர்த்தரை நோக்கிக் கூப்பிட்டான்; அப்பொழுது கர்த்தர் மோசேக்கு ஒரு*

*மரத்தைக் காண்பித்தார்; அதை அவன் தண்ணீரில் போட்ட வுடனே, அது மதுரமான தண்ணீராயிற்று. அவர் அங்கே அவர்களுக்கு ஒரு நியமத்தையும் ஒரு நியாயத்தையும் கட்டளையிட்டு, அங்கே அவர்களைச் சோதித்து:*

*யாத்திராகமம் 15 : 22 - 25*

செங்கடலைக் கடந்து வெளியே வந்து கானான் தேசத்தை நோக்கி மறுபடியும் பிரயாணம்பண்ணிக்கொண்டிருக்கும்போது, சூர் வனாந்தரத்துக்குப் புறப்பட்டுப்போய், மூன்று நாள் வனாந்தரத்தில் தண்ணீர் இல்லாமல் நடந்தார்கள். 6 லட்சம் ஜனங்களுக்கு வனாந்தரமான இடத்தில் தண்ணீர் இல்லாவிட்டால் எவ்வளவு கஷ்டமாக இருக்கும்? ஆனால் அதையும் கடந்து மாராவில் வரும்போது தண்ணீர் இருந்தும் குடிக்க முடியாமல் கசப்பாக இருந்தது. அப்பொழுது மோசே கர்த்தரை நோக்கிக் கூப்பிட்டார். கர்த்தர் மோசேக்கு ஒரு மரத்தைக் காண்பித்தார்; அதை மோசே தண்ணீரில் போட்டதும், அது மதுரமான தண்ணீராயிற்று.

*பின்பு அவர்கள் ஏலிமுக்கு வந்தார்கள்; அங்கே பன்னிரண்டு நீரூற்றுகளும் எழுபது பேரீச்சமரங்களும் இருந்தது; அங்கே தண்ணீர் அருகே பாளயமிறங்கினார்கள்.*

*யாத்திராகமம் 15 : 27*

பின்பு ஏலிமுக்கு வந்தபோது அங்கே நல்ல செழிப்பாக இருந்தது. தண்ணீர், ஆகாரம், தங்குவதற்கேற்றபடி நிழல் எல்லாவற்றையும் கொடுத்தார்.

அதுபோல, தேவன் நமக்குத் தருகிற இரட்சிப்பு, விடுதலை என்பது சாதாரணமான காரியம் அல்ல. கர்த்தர் நம்மை பாவத்தின் அடிமைத்தனத்திலிருந்தும், உலகத்தின் அடிமைத்தனத்திலிருந்தும், மாம்சத்தின் சகல அடிமைத்தனத்திலிருந்தும் விடுவித்து ஞானஸ்நானத்தின் மூலமாக கர்த்தருடைய சபையார் என்ற நிலைமைக்குள் நம்மைக் கொண்டு வருகிறார். நம்முடைய பிரயாணம் வாக்குத்தத்தம்பண்ணப்பட்ட பரம கானானாகிய பரலோகராஜ்யத்தை நோக்கியதாகக் காணப்படுகிறது. நமக்கும் நாம் நினைக்கிறதுபோல் எப்பொழுதும் சந்தோஷமாய் காணப்பட முடியாது. நாம் நினையாத

விதமாக பல தடைகள் நம் வாழ்க்கையிலும் குறுக்கிடும். அப்படிப்பட்ட சூழ்நிலைகளில் நாம் கர்த்தருடைய ஊழியக்காரர்களிடம் அறிவிக்க வேண்டியவைகளை அறிவித்து, கர்த்தரையும் கர்த்தருடைய ஊழியக்காரர்களையும் சார்ந்து காணப்படும்போது சகல தடைகளும் மாறிப்போகும்; நாம் பரலோகத்தை நோக்கிய நம்முடைய பிரயாணத்திலும் முன்னேறிப் போகலாம்.

கிறிஸ்தவ வாழ்க்கை என்பது கஷ்டமில்லாத வாழ்க்கை என்று நினைக்கக்கூடாது; அது சிலுவையை எடுத்துக்கொண்டு கிறிஸ்துவைப் பின்செல்லுகிறதான வாழ்க்கை; இடுக்கமும், நெருக்கமும் நிறைந்த வாழ்க்கையாகும். கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவே நமக்கு வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறார். ஆகவே, என்ன கஷ்டமானாலும், நஷ்டமானாலும் கிறிஸ்துவுக்குப் பின்செல்லுகிறவர்களாய் காணப்படவேண்டும் என்கிற மனநிலை நமக்கு வரவேண்டும். அப்படியானால் எந்த நிலையிலும் அவர் நம்மோடு கூட இருந்து நம்மை இரட்சிக்க வல்லமையுள்ளவராயிருக்கிறார்.

மத்தேயு 4:1-11-ல் வாசிக்கும்போது, ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து ஞானஸ்நானம் பெற்றபின், சாத்தானால் சோதிக்கப்பட்டதைக் குறித்து சொல்லப்பட்டிருக்கிறது. என்றாலும், அவர் சோதனைக்காரனாகிய சாத்தானை ஜெயித்தார். அதுபோல, ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளுகிற ஜனங்களுக்கும் சோதனைகள் நேரிடும். இயேசுகிறிஸ்து இந்த உலகத்தில் இருந்தபோது சோதிக்கப்பட்டுப் பாடுபட்டதினாலே, சோதிக்கப்படுகிறவர்களாகிய அவருடைய ஜனங்களுக்கும் அவர் உதவிசெய்து அவர்களுக்கு மகிமையான விடுதலையை கொடுக்க வல்லவராயிருக்கிறார். அவருடைய ஜனங்களும் தங்களை அவர் சோதனைக்கு விலக்கிப் பாதுகாக்கும்படியாக தினமும் அவரை நோக்கி ஜெபம்பண்ணவேண்டியது அவசியமாயிருக்கிறது.

> *கட்டுகளும் உபத்திரவங்களும் எனக்கு வைத்திருக்கிறதென்று பரிசுத்த ஆவியானவர் பட்டணந்தோறும் தெரிவிக்கிறதை மாத்திரம் அறிந்திருக்கிறேன். ஆகிலும் அவைகளில் ஒன்றையுங் குறித்துக் கவலைப்படேன்; என் பிராணனையும் நான் அருமையாக எண்ணேன்; என் ஓட்டத்தைச் சந்தோஷத்*

*தோடே முடிக்கவும், தேவனுடைய கிருபையின் சுவிசேஷத்தைப் பிரசங்கம்பண்ணும்படிக்கு நான் கர்த்தராகிய இயேசுவினிடத்தில் பெற்ற ஊழியத்தை நிறைவேற்றவுமே விரும்புகிறேன்.*

*அப்போஸ்தலர் 20 : 23, 24*

பவுல் அப்போஸ்தலர் கர்த்தருடைய நாமத்தில் அடையாளங்கள், அற்புதங்கள் நடப்பித்தார். ஆனால் அவர் சுற்றித் திரிந்து ஊழியம் செய்யும்போது, உமக்குக் கட்டுகளும் உபத்திரவங்களும்தான் இருக்கிறது என்று பரிசுத்த ஆவியானவர் அறிவித்தார். உடனே அவர் எனக்குக் கிறிஸ்துவோ, கிறிஸ்தவமோ, ஊழியமோ வேண்டாம் என்று சொல்லவில்லை. எதைக்குறித்தும் கவலைப்படாமல், தன் பிராணனையும் அருமையாக எண்ணாமல், அந்தப் பாதையிலே முன்னேறிச் சென்றார்.

அநேகர், தங்களுடைய வாழ்க்கையில் சிறிதான ஒரு கஷ்டம் வந்தாலே பின்மாறிப் போகிறார்கள். உண்மையாய் கிறிஸ்துவைப் பின்பற்றி ஜீவிக்கிறவர்களுக்கு இந்த உலகத்தில் நெருக்கம், கஷ்டம் எல்லாம் உண்டு. அந்தச் சூழ்நிலைகளிலும், என் ராஜ்யம் இந்த உலகத்திற்கு உரியதல்ல, என் சொந்த தேசம் பரலோகராஜ்யம் என்ற எண்ணத்தோடு காணப்படுகிறவர்களால் மட்டுமே சகல கஷ்டங்களிலும், நஷ்டங்களிலும் கிறிஸ்துவைப் பின்பற்றி முன்னோக்கிப் போகமுடியும். நாம் நம்மை ஜீவபலியாக கர்த்தருக்கென்று ஒப்புக்கொடுக்கவும் வேண்டும்.

*ஆகையால், நீங்கள் இனி அந்நியரும் பரதேசிகளுமாயிராமல், பரிசுத்தவான்களோடே ஒரே நகரத்தாரும் தேவனுடைய வீட்டாருமாயிருந்து, அப்போஸ்தலர் தீர்க்கதரிசிகள் என்பவர்களுடைய அஸ்திபாரத்தின்மேல் கட்டப்பட்டவர்களுமாயிருக்கிறீர்கள்; அதற்கு இயேசுகிறிஸ்து தாமே மூலைக் கல்லாயிருக்கிறார்;*

*எபேசியர் 2 : 19, 20*

இரட்சிக்கப்பட்டு ஞானஸ்நானம் பெற்றுக்கொண்ட ஜனங்கள், இனி அந்நியரோ பரதேசிகளோ கிடையாது. இவர்கள் தேவனுடைய வீட்டார். சாதாரணமாக ஒரு வீட்டில், அந்த வீட்டிலுள்ளவர்களுக்குத் தேவையான பொக்கிஷங்கள் காணப்படுவதுபோல, தேவனுடைய

வீட்டாராகிய ஜனங்களுக்கும் தேவையான சரீரப்பிரகாரமான ஆசீர்வாதங்களையும், ஆவிக்குரிய ஆசீர்வாதங்களையும், உலகப்பிரகாரமான ஆசீர்வாதங்களையும் தேவன் தருகிறவராக இருக்கிறார். தேவனுடைய வீட்டார், தேவனுடைய பிள்ளைகள் என்ற வரிசையில் வந்திருக்கிற நாம் இனி நம் விருப்பம் போல் ஜீவிக்கமுடியாது.

*அவர்கள் அப்போஸ்தலருடைய உபதேசத்திலும், அந்நியோந்நியத்திலும், அப்பம் பிட்குதலிலும், ஜெபம்பண்ணுதலிலும் உறுதியாய்த் தரித்திருந்தார்கள்.*

*அப்போஸ்தலர் 2 : 42*

அநேகர், நாம் ஒருமுறை இரட்சிக்கப்பட்டு ஞானஸ்நானம் பெற்றுவிட்டால். அதன்பிறகு தான் என்ன பாவம் செய்தாலும், இயேசுகிறிஸ்துவின் இரத்தத்தால் அவை எல்லாம் கழுவப்பட்டுப் போய்விடும் என்று நினைக்கிறார்கள். ஆனால், கர்த்தருடைய வேதம் அப்படிச் சொல்லவில்லை. பிழைக்கவே பிழைப்பாய் என்று கர்த்தர் நீதிமானுக்குச் சொல்லும்போது, அவன் தன் நீதியை நம்பி அநியாயஞ்செய்தால், அவனுடைய நீதியில் ஒன்றும் நினைக்கப் படுவதில்லை; அவன் செய்த தன் அநியாயத்திலே சாவான் என்று கர்த்தருடைய வேதம் சொல்லுகிறது. ஆகவே, கர்த்தருடைய ஊழியக்காரர்கள் மூலமாகக் கொடுக்கப்படுகிற உபதேசங்களைக் கருத்தாய் கேட்டு, அதன்படியே நம் ஜீவிய அநுபவங்களைக் காத்துக்கொள்ளவேண்டும்; கர்த்தருடைய சபையார் இராப்போஜனம் பண்ணுதலில் பங்குபெறுவதற்கேற்ற ஆயத்தத்தோடு எப்பொழுதும் காணப்படவேண்டும்; ஒருவருக்கொருவர் சகோதர சிநேகத்தோடு காணப்படவேண்டும்; ஜெபம்பண்ணுதலிலும் உறுதியாய்த் தரித்திருக்க வேண்டும். யாருக்கு ஜெபம்பண்ண முடியவில்லையோ அப்படிப்பட்ட வர்களைச் சாத்தான் வஞ்சிப்பான். ஆகவே,ஜெபத்திலே உறுதியாய்த் தரித்திருக்க வேண்டும். ஆதிசபையார் ஜெபம்பண்ணுதலில் உறுதியாய்த் தரித்திருந்தார்கள். ஜெபம்பண்ணாவிட்டால் நிலைநிற்கமுடியாது என்று அறிந்து, அவர்கள் கிடைக்கிற சமயங்களில் எல்லாம் ஜெபம் பண்ணினார்கள். நம்பிக்கையிலே சந்தோஷமாயிருந்தார்கள்; விசுவாசத் திலே நல்ல ஸ்திரமுடையவர்களாயிருந்தார்கள்; உபத்திரவத்திலே பொறுமையாயிருந்தார்கள். ஜெபம்பண்ணினால் எந்த உபத்திரவம்

வந்தாலும் அதைச் சகிக்க பெலன் கிடைக்கும். முழங்காலில் நின்று யுத்தம்பண்ணவேண்டும். அப்பொழுது சகல எதிர்சத்துவ வல்லமைகளும், சாத்தானுடைய வல்லமைகளும், உலகத்தின் வல்லமைகளும் எல்லாம் அற்று விலகிப்போகும்.

*ஆகையால் இனிச் சம்பவிக்கப்போகிற இவைகளுக்கெல்லாம் நீங்கள் தப்பி, மனுஷகுமாரனுக்கு முன்பாக நிற்கப் பாத்திரவான்களாக எண்ணப்படுவதற்கு, எப்பொழுதும் ஜெபம்பண்ணி விழித்திருங்கள் என்றார்.*

*லூக்கா 21 : 36*

இனி உலகத்தில் பயங்கரமான சம்பவங்கள் சம்பவிக்க வேண்டியதிருக்கிறது; அவை எல்லாவற்றிற்கும் தப்பி, மனுஷ குமாரனாகிய இயேசுகிறிஸ்துவுக்கு முன்பாக நிற்கப் பாத்திரராகக் காணப்பட எப்பொழுதும் ஜெபம்பண்ணி, விழித்திருக்கவேண்டும். ஆதிசபையிலுள்ள ஜனங்கள் கூடியிருந்து ஜெபம்பண்ணின இடம் அசைந்தது.

*இயேசு ஞானஸ்நானம் பெற்று, ஜலத்திலிருந்து கரையேறின வுடனே, இதோ, வானம் அவருக்குத் திறக்கப்பட்டது; தேவ ஆவி புறாவைப்போல இறங்கி, தம்மேல் வருகிறதைக் கண்டார்.*

*மத்தேயு 3 : 16*

*ஞானத்தையும் உணர்வையும் அருளும் ஆவியும், ஆலோசனையையும் பெலனையும் அருளும் ஆவியும், அறிவையும் கர்த்தருக்குப் பயப்படுகிற பயத்தையும் அருளும் ஆவியுமாகிய கர்த்தருடைய ஆவியானவர் அவர்மேல் தங்கியிருப்பார்.*

*ஏசாயா 11 : 2*

இயேசுகிறிஸ்து ஞானஸ்நானம் பெற்றுக்கொண்டு தண்ணீரிலிருந்து கரையேறினபோது ஆவியானவர் அவர்மேல் புறாவைப்போல இறங்கினார்; அப்பொழுது ஞானத்தையும் உணர்வையும் அருளும் ஆவி, தேவ ஆலோசனையினால் நிறைக்கப்பட்டு தேவசித்தம் செய்யக்கூடிய ஆவி, தேவனுக்கேற்ற காரியங்களை ஞாபகத்தில்

வைத்திருக்கக்கூடிய அறிவு, கர்த்தருக்குப் பயப்படும் பயத்தை அருளும் ஆவி போன்ற ஆவிக்குரிய வரங்கள் அவர்மேல் வந்து தங்கியது.

> *பேதுரு அவர்களை நோக்கி: நீங்கள் மனந்திரும்பி, ஒவ்வொருவரும் பாவமன்னிப்புக்கென்று இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுங்கள், அப்பொழுது பரிசுத்தஆவியின் வரத்தைப் பெறுவீர்கள்.*
>
> *அப்போஸ்தலர் 2 : 38*

ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுகிறவர்களாகிய ஜனங்கள் பரிசுத்தஆவியின் வரத்தைச் சொந்தமாக்கிக் கொள்வதற்கேற்ற ஒரு ஆயத்தத்தை அடைந்துகொள்ளுகிறார்கள். ஆவிக்குரிய வரங்கள் அவரவருடைய பிரயோஜனத்திற்கென்று அளிக்கப்படுகிறது.

> *ஆவியினுடைய அநுக்கிரகம் அவனவனுடைய பிரயோஜனத்திற்கென்று அளிக்கப்பட்டிருக்கிறது. எப்படியெனில், ஒருவனுக்கு ஆவியினாலே ஞானத்தைப் போதிக்கும் வசனமும், வேறொருவனுக்கு அந்த ஆவியினாலேயே அறிவை உணர்த்தும் வசனமும், வேறொருவனுக்கு அந்த ஆவியினாலேயே விசுவாசமும், வேறொருவனுக்கு அந்த ஆவியினாலேயே குணமாக்கும் வரங்களும், வேறொருவனுக்கு அற்புதங்களைச் செய்யும் சக்தியும், வேறொருவனுக்குத் தீர்க்கதரிசனம் உரைத்தலும், வேறொருவனுக்கு ஆவிகளைப் பகுத்தறிதலும், வேறொருவனுக்குப் பற்பல பாஷைகளைப் பேசுதலும், வேறொருவனுக்குப் பாஷைகளை வியாக்கியானம்பண்ணுதலும் அளிக்கப்படுகிறது. இவைகளை அந்த ஒரே ஆவியானவர் நடப்பித்து, தமது சித்தத்தின்படியே அவனவனுக்குப் பகிர்ந்துகொடுக்கிறார்.*
>
> *I கொரிந்தியர் 12 : 8 - 11*

இவ்விதமான ஆவிக்குரிய வரங்கள் யாவும் இரட்சிக்கப்பட்டு, ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுகிற கர்த்தருடைய ஜனங்களுக்குக் கர்த்தரால் அருளிச்செய்யப்படுகிறது. மேலும் இவர்கள் ஆவியின் கனியாகிய கர்த்தருடைய ஆசீர்வாதங்களையும் கர்த்தரிடத்திலிருந்து கேட்டுப் பெற்றுக்கொள்ள வேண்டும்; ஆவிக்குரிய ஜீவியத்தில்

நிலைநிற்கவும், ஆவிக்குரிய ஜீவியத்தின் முன்னேற்றத்திற்கும் இவைகள் மிகவும் முக்கியமானவைகள். இந்த அநுபவங்களைப் பெற்றுக்கொள்ளாவிட்டால் ஜெயகரமான ஆவிக்குரிய ஜீவியம் செய்யவோ விசுவாசிகளாய் வாழவோ முடியாது. இரட்சிக்கப்பட்டும் பரிசுத்தஆவியைப் பெற்றுக்கொள்ளாதவர்களும் காத்திருந்து பரிசுத்த ஆவியையும் பெற்றுக்கொள்ளவேண்டும். கிறிஸ்துவின் ஆவியாகிய பரிசுத்தஆவியைப் பெற்றுக்கொள்ளாத எவருமே கிறிஸ்துவுடைய வர்களாக, கிறிஸ்தவர்களாகக் காணப்பட முடியாது. ஆகவே யாவரும் ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளத் தகுதியான அநுபவங்களைக் குறித்து அறிந்து, அவைகளை அடைந்து, ஞானஸ்நானம் பெற்று, அளவில்லாமல் ஆசீர்வதிக்கப்பட்டு, பரலோகராஜ்யம் பிரவேசிக்க ஆயத்தப்படும்படி கர்த்தருடைய நாமத்தில் உங்களை அன்பாய் கேட்டுக்கொள்ளுகிறோம். கர்த்தர் உங்களை அளவில்லாமல் ஆசீர்வதிப்பாராக! ஆமென்.

**********

## எமது பிற வெளியீடுகள்

********

1. மரணத்துக்குப் பின்...
2. மனுஷருக்கு ஸ்தோத்திரம் செலுத்துவது பாவம்.
3. ஒன்றே குலம்! ஒருவரே தேவன்!!
4. கிறிஸ்தவப் பண்டிகைகளைக் கொண்டாடுவது பாவமல்ல.
5. **One GOD!! One People!! An Invaluable Compendium Of GOD's Secrets.**
6. இராப்போஜனம்.